
செம்மணி

நிலம் 2 துகள் 98 வள்ளுவர் ஆண்டு 2052, 11 -17 ஆனி 2022 வாரமலர் பக்கங்கள் 22 விலை ரூபா 50/-

# கூட்டமைப்பை மடக்க குறி வைத்தார் ரணில்

### சாணக்கியன் மீது விசாரணைக்கு வலியுறுத்து



அரச தலைவர் கோட்டாபய ராஜபக்ச பதவி விலகவேண்டும் என்று வலியுறுத்தி நடந்துவரும் போராட்டங்களினால் ஏற்பட்ட நிலமைகளின் இடையே ரணில் விக்கிரமசிங்க தலைமை அமைச்சராகப் பதவியேற்றுக்கொண்டது மக்கள் போராட்டத்தைக் காட்டிக்கொடுத்த செயல் என்றும் இன்றை ஆட்சியும் கலைக்கப்பட்டு பொதுத் தேர்தல் நடத்தப்படவேண்டும் என்றும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் தொடர்ந்து வலியுறுத்தி வரும் நிலையில், அவர்களை மடக்கி வழிக்குக் கொண்டுவரும் வகையில் காய் நகர்த்தத் தொடங்கியிருக்கிறார் தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க.

வைகாசி (மே) 9 வன்முறைகளைத் தொடர்ந்து ஏற்பட்ட நெருக்கடியான சூழ்நிலையில் திடீரென தலைமை அமைச்சராகப் பதவியேற்றுக்கொண்டார் ரணில். இதையடுத்து அவர் அவ்வாறு செய்தமை மக்கள் போராட்டத்தைக் காட்டிக் கொடுக்கும் செயல் என்று கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களான மதியாபரணம் ஆபிரகாம் சுமந்திரன் மற்றும் ராசமாணிக்கம் சாணக்கியன் ஆகியோர் நாடாளுமன்றத்தில் காட்டமான

பக்கம் 02

## லிட்ரோ தலைவர் திடீர் பதவி விலகல்

### காரணம் உடனடியாகத் தெரியவரவில்லை

லிட்ரோ சமையல் எரிவாயு நிறுவனத்தின் தலைமைப் பதவியில் இருந்து விஜித கேரத் இரண்டே மாதங்களில் விலகியுள்ளார். வெள்ளிக்கிழமை மாலை அவர் தனது பதவி விலகலை அறிவித்தார். கடந்த சித்திரை (ஏப்ரல்) மாதம்தான் அவர் அந்தப் பதவியை ஏற்றிருந்தார்.

பக்கம் 15

## 17 லட்சம் மக்களைக் காப்பாற்ற 47 மில். டொலர் அவசர தேவை

### கோரிக்கை விடுத்தது ஐ.நா.

இலங்கையில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடி நிலையால் பாதிக்கப்பட்டுள்ள 17 லட்சம் மக்களின் உயிர்களைக் காப்பாற்ற உடனடியாக 47 மில்லியன் அமெரிக்க டொலர் நிதி அவசரமாகத் தேவைப்படுவதாக ஐக்கிய நாடுகள் அமைப்பு கோரிக்கை விடுத்துள்ளது.

இலங்கையில் உள்ள ஐ.நா. அணியும் அரச சார்பற்ற நிறுவனங்களும் இணைந்து இலங்கையில் மனிதாபிமான தேவைகள் மற்றும் முன்னுரிமைகள் திட்டம் ஒன்றை வியாழக்கிழமை வெளியிட்டன. அதில் பொருளாதார நெருக்கடியால் பாதிக்கப்பட்டுள்ள 17 லட்சம் மக்களைக் காப்பாற்ற உடனடி நிதி உதவி தேவை என்று அழைப்பு விடுத்துள்ளன.

முக்கியமாக அத்தியாவசிய மருந்துகள், உணவுப் பொருட்கள், விவசாயம் ஆகிய துறைகளில் ஏற்பட்டுள்ள நெருக்கடிகளைச் சமாளிப்பதற்கான உதவிகள் அவசரமாகத் தேவைப்படுவதாக அவை சுட்டிக்காட்டியுள்ளன. பாதுகாப்பான குடிதண்ணீர், அவசர வாழ்வாதாரத் திட்டங்கள் போன்றன முன்னுரிமைப்படுத்தப்படவேண்டும் என்றும் அவை தெரிவித்துள்ளன.

பக்கம் 22

## தைத்த ஆடை ஏற்றுமதித் துறையையும் பதம் பார்க்கிறது பொருளாதார வீழ்ச்சி

நாட்டிற்கு அந்நியச் செலாவணியை ஈட்டித் தரும் முன்னணித் துறையான தைத்த ஆடைகளின் ஏற்றுமதியும் நாட்டின் தற்போதைய பொருளாதார வீழ்ச்சியால் பெரும் பாதிப்பை எதிர்கொள்ள இருக்கின்றது என்று எச்சரிக்கப்படுகின்றது.

தற்போதுவரை இந்தத் துறைக்கான கொள்முதல் உத்தரவுகள் முழுமையாகக் கிடைக்கின்றன. இதுவரை இருந்து வந்த பொருளாதார நெருக்கடிக்கு மத்தியிலும் வெளிநாடுகளில் இருந்து கொள்முதல் கட்டளைகள் தொடர்ச்சியாகக் கிடைத்து வந்தன. எனினும் ஆடி (ஜூலை) மாதம் முதல் தொடங்கும் அடுத்த பருவத்தில் இது பெருமளவில் வீழ்ச்சியைச் சந்திக்கும் வாய்ப்புக்கள் அதிகம் இருப்பதாக எச்சரிக்கப்படுகின்றது.

நாட்டின் பொருளாதார வீழ்ச்சி காரணமாக ஏற்பட்டுள்ள அபாயத்தால் எதிர்காலத்தில் தங்கள் வர்த்தகத்தில் பாதிப்பு ஏற்பட்டுவிடக்கூடாது என்று அச்சப்படும் வாடிக்கையாளர்கள் தமது கொள்முதல்

பக்கம் 15

## பெரும் தனவந்தரான தம்மிக்க நாடாளுமன்ற உறுப்பினரானார்

### விரைவில் அமைச்சருமாவார்


இலங்கையின் மிகப்பெரும் தொழிலதிபரான தம்மிக்க பெரேரா தேசியப் பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினராக அறிவிக்கப்பட்டிருக்கிறார். இது தொடர்பான சிறப்பு அரசிதழ் (வர்த்தமானி) வெள்ளிக்கிழமை மாலை வெளியிடப்பட்டது. நாடாளுமன்ற உறுப்பினராக அவர் சத்தியப்பிரமானம் செய்துகொண்டதும் அவருக்கு அமைச்சுப் பதவியும் வழங்கப்படவுள்ளது.



ஆளும் பொது ஜன பெரமுன கட்சியின் சார்பில் தேசியப் பட்டியல் மூலம் நாடாளுமன்றத்திக்குத் தெரிவாகியிருந்த முன்னாள் நிதி அமைச்சர் பசில் ராஜபக்ச வியாழக்கிழமை தனது பதவி

பக்கம் 02

## சிறுபோகத்துக்கான உர இறக்குமதிக்கு இந்தியா 55 மில். டொலர் கடனுதவி



இந்தியாவிடம் இருந்து 65 ஆயிரம் மெட்ரிக் தொன் யூரியா உரத்தைக் கொள்வனவு செய்வதற்கான கடன் திட்டம் ஒன்றில் நிதி அமைச்சும் இந்தியாவின் எக்ஸிம் வங்கியும் வெள்ளிக்கிழமை கையெழுத்திட்டன என்று தலைமை அமைச்சர் அலுவலகம் தெரிவித்தது. இந்தத் திட்டத்தின் கீழ் உரத்தைக் கொள்வனவு செய்வதற்காக 55 மில்லியன் அமெரிக்க டொலர்களை எக்ஸிம் வங்கி கடனாக வழங்கும்.

சிறுபோக செய்கையை எதிர்கொள்வதற்

பக்கம் 02

## நாட்டு அரிசிக்கு கட்டுப்பாட்டு விலை

உள்ளூரில் உற்பத்தி செய்யப்பட்ட சிவப்பு மற்றும் வெள்ளை நாட்டரிசிகளுக்கு கட்டுப்பாட்டு விலை அறிவிக்கப்பட்டுள்ளது.

வெள்ளிக்கிழமை இரவு விடுக்கப்பட்ட சிறப்பு அரசிதழ் அறிவிப்பில் ஒரு கிலோ சிப்பு மற்றும் வெள்ளை நாட்டரிசியின் விலை 210 ரூபாவிற்கு மேற்படக்கூடாது என்று நுகர்வோர் விவகார அதிகார சபை தெரிவித்துள்ளது.

வெள்ளிக்கிழமை முதல் இந்த உத்தரவு நடைமுறைக்கு

பக்கம் 22

செம்மண்

வாரப் பத்திரிகை
551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
மின்னஞ்சல்: shemman.redsoil@gmail.com
தொடர்பு எண்: 021 492 7781
உரிமை மற்றும் வெளியீடு: கிறீன் மீடியா கவுஸ் பிரை. லிட்
ஆசிரியர்: தே.பிரேமானந்த்

# உருப்படியாக ஏதாவது செய்யுங்கள்

வைகாசி 9ஆம் திகதி அமைதியின்மையைத் தொடர்ந்து அரசியலில் ஏற்பட்ட மாற்றங்களின் பின்னர் ஆகக் குறைந்தது இரண்டு தடவைகளாவது நாடாளுமன்றக் கூட்டத் தொடர் இடம்பெற்றுவிட்டது. இந்த இக்கட்டான நிலையில் நாடாளுமன்றத்தில் உருப்படியான திட்டங்கள் குறித்து விவாதித்து மக்களுக்கு நன்மையளிக்கும் விதத்தில், ஆறுதலளிக்கும் விதத்தில் இந்த அரசியல்வாதிகள் ஏதாவது செய்வார்கள் என்று எதிர்பார்த்திருக்க வழக்கமான அரசியல் விவாதக் களமாகவே அவை நடந்து முடிந்திருக்கின்றன; நடந்துகொண்டிருக்கின்றன.

225 உறுப்பினர்களைக் கொண்ட இலங்கையின் நாடாளுமன்றத்தில் கடந்த ஒரு மாத காலத்தில் ஆற்றப்பட்ட உரைகளை அவதானிக்கும்போது, ஒன்றில் ஆட்சித் தரப்பிலிருந்து அபாய எச்சரிக்கைகளாக இருக்கின்றன, அல்லது அரசியல் சாடல்களாகவே நாடாளுமன்ற உரைகள் அமைந்திருக்கின்றன. அவற்றைப் பார்க்கும்போது நாட்டு மக்கள் எதிர்கொண்டுள்ள நெருக்கடி, இக்கட்டு, அபாயம் குறித்து உணர்திறனுள்ளவர்களாக இந்த நாடாளுமன்ற உறுப்பினர்கள் இருக்கிறார்களா என்கிற சந்தேகமே ஏற்படுகின்றது.

தனது உரைகளில் தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க வரவுள்ள அபாயங்களைப் பட்டியலிடுகிறார். உரிய சரியான நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை என்றால் அடுத்து வரும் மாதங்களில் மக்கள் பட்டினியை எதிர்கொள்ளவேண்டி வரும் என்று எச்சரிக்கிறார். ஆனால் எடுக்கப்படவேண்டிய சரியான நடவடிக்கைகள் எவை என்பது குறித்து அவர் எதுவும் பேசுவதில்லை. இல்லையேல் அத்தகைய சரியான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டனவா என்பதையும் அவர் கூறுவதில்லை.

தம்மைப் பட்டினியின் பிடியிலிருந்து பாதுகாக்க இந்த அரசியல்வாதிகளும் ஆட்சியாளர்களும் என்ன திட்டங்களை வைத்திருக்கிறார்கள், தங்களுக்கு எந்த வகையில் உதவி கிடைக்கும், தாம் உயிர்வாழ்வதற்கான வாய்ப்புக்கள் எந்தளவு தூரத்திற்கு இருக்கின்றன என்பதைத் தெரிந்துகொள்வதிலேயே மக்கள் ஆர்வமாக இருக்கிறார்கள். இந்த நெருக்கடி நிலை இன்னும் எவ்வளவு காலத்திற்கு நீடிக்கும்? விலைவாசி எப்போது இறங்கும்? உணவுப் பொருள்களாவது தட்டுப்பாடின்றிக் கிடைக்கும் நிலை என்று திரும்பும்? போக்குவரத்தும் எரிபொருள் விநியோகமும் எப்போது வழமைக்கு வரும்? சுகாதார சேவைகள் தங்கு தடையின்றி இனி எப்போது கிடைக்கும்? பாடசாலைக் கல்வி நடவடிக்கைகள் பாதிப்பின்றி எப்போது தொடரும்? இப்படி எண்ணற்ற கேள்விகளுக்கான விடைகளை மக்கள் எதிர்பார்த்திருக்கிறார்கள்.

அந்தக் கேள்விகளுக்கான விடைகளைக் கண்டறிவதற்கான திட்டம் என்ன, அவற்றை எப்படிச் செயற்படுத்தப்போகிறார்கள், அதற்கான சாத்தியக்கூறுகள் என்ன, எப்போது அவை நிகழக்கூடும், அது வரையில் தமது இருப்பைத் தக்கவைப்பதற்கு மக்கள் என்ன செய்வது போன்ற விடயங்களை அறிந்துகொள்வதற்காகவே இப்போது மக்கள் நாடாளுமன்ற அமர்வுகளைக் கூர்ந்து கவனித்து வருகின்றார்கள். ஆனால் அங்கிருந்து அவர்களுக்கு நம்பிக்கையளிக்கக்கூடிய எவையும் வருவதாகத் தெரியவில்லை.

மக்கள் நம்பி வாக்களித்து நாடாளுமன்றத்திற்கு உறுப்பினர்களை அனுப்பி வைத்தது தமக்குச் சேவை செய்வதற்காகவே தவிர அவர்கள் சொகுசு வாழ்க்கையை அனுபவிப்பதற்காக அல்ல. அப்படிச் சென்றவர்கள் இதுவரை காலமும்தான் மக்கள் நலன் குறித்து அக்கறைப்படாமல் செயற்பட்டார்கள் என்றால், இத்தகைய நெருக்கடியான சூழலிலாவது தமது கடமையைத் திறம்பட ஆற்றுவதற்கு முயற்சிக்கவேண்டும். ஆனால் அப்படி நடைபெறுவதாக இல்லை.

இதுவரையில் நாட்டைப் பொருளாதார நெருக்கடியிலிருந்து மீட்பதற்கான திட்டங்கள் குறித்து உருப்படியான எந்தவொரு விவாதமும் நாடாளுமன்றத்தில் விரிவாக இடம்பெறாதது மக்களைப் பிடித்த சாபக்கேடு. இப்போது வர்த்தகர்களையும் வியாபாரிகளையும் நாடாளுமன்ற உறுப்பினர்களாக்குவதன் மூலம் நெருக்கடிக்குத் தீர்வு காண முடியும் என்று நம்புவது எந்தளவிற்குச் சாத்தியம் என்பதும்கூட தெரியவரவில்லை. பெரும் செல்வந்தர்களை நாடாளுமன்ற உறுப்பினர்களாக்குவதன் மூலம் பொருளாதார நெருக்கடியை எப்படி இந்த ஆட்சியாளர்கள் எதிர்கொள்ளப்போகிறார்கள் என்பதையாவது வெளிப்படுத்தவேண்டும். ஆனால் அதுவும் நடக்கவில்லை.

அண்மையில் வைகாசி 9 வன்முறைகளால் பாதிக்கப்பட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு வீடுகளைக் கட்டிக்கொடுப்பதிலும் உதவிகளை வழங்குவதிலும் காட்டும் ஆர்வத்தையும் அவசரத்தையும் பாதிக்கப்பட்ட மக்கள் மீதும் இந்த அரசியல்வாதிகள் கொஞ்சமாவது காட்டவேண்டும். இனிவரும் நாட்களிலாவது பொருளாதார மீட்சிக்கான உருப்படியான திட்டங்களை முன்வைத்து விவாதங்களை நடத்தி உருப்படியாக ஏதையாவது செய்யவேண்டும் என்பது மக்களின் எதிர்பார்ப்பு.

## கூட்டமைப்பை...

உரைகளை ஆற்றிவந்தனர்.

அதிலும் சாணக்கியன் தலைமை அமைச்சரைக் கடுமையாகத் தாக்கிக் கருத்துக்களைத் தெரிவித்து வந்தார். அரசியலில் சாணக்கியன் சுமந்திரனின் மிக நெருங்கிய சகாவாகவும் அவரது வழிநடத்தலில் இயங்குபவராகவும் அறியப்பட்டிருக்கும் நிலையில் ரணில் மீதான அவரது விமர்சனங்கள் வார்த்தைத் தாக்குதல்கள் சுமந்திரனின் மறைமுகக் கருத்துக்களாவே கொள்ளப்பட்டன.

கைகாசி 9 நெருக்கடிச் சூழலைத் தொடர்ந்து சஜித் பிரேமதாச தலைமையில் அனைத்துத் தரப்பினரையும் உள்ளடக்கிய ஒரு ஆட்சியை அமைத்து அதன் மூலம் இனப்பிரச்சினை உள்ளிட்ட நாட்டின் பிரச்சினைகள் அனைத்திற்கும் ஒன்றுபட்ட தீர்வை எட்டுவதற்கான சுமந்திரனின் அரசியல் முயற்சிகளை ரணில் நாசம் செய்ததன் விளைவாகவே அவரை நோக்கி இத்தகைய அரசியல் தாக்குதல்கள் தொடுக்கப்படுகின்றன என்று அரசியல் அவதானிகள் கருதுகின்றனர்.

இதனால் ஆத்திரமுற்ற ரணில் விக்கிரமசிங்க நாடாளுமன்றத்தில் உரையாற்றும்போது சுமந்திரனை வெளிப்படையாகச் சாடாமல் அவரது சகாவான சாணக்கியனை கடுமையாகச் சாடி உரையாற்றியிருந்தார். அதன் பின்னரும் அரச தலைவர் பதவி விலக வேண்டும், மக்களின் நம்பிக்கையை இழந்துவிட்ட இந்த நாடாளுமன்றம் கலைக்கப்பட்டு பொதுத் தேர்தல் நடத்தப்படவேண்டும் என்றும் சுமந்திரன் நாடாளுமன்றத்தில் உரையாற்றியிருந்தார்.

இந்த நிலையில் கூட்டமைப்பின் இந்த விமர்சனங்களுக்கு கிடுக்கிப் பிடி போடும் வகையில் நாடாளுமன்றத்தில் சாணக்கியன் ஆற்றிய உரையை நேற்று மேற்கோள் காட்டிய ரணில் விக்கிரமசிங்க சாணக்கியன் தெரிவித்த கருத்துக்களுக்காக அவர் மன்னிப்புக் கேட்டு அவற்றைத் திரும்பப் பெறவில்லை என்றால் அவர் மீது நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று வலியுறுத்தினார்.

வைகாசி 9 வன்முறைகளின்போது கொல்லப்பட்ட நாடாளுமன்ற உறுப்பினரான அமரகீர்த்தி அத்துகோரளவிற்கு அஞ்சலி செலுத்தி ஆற்றிய உரையின் இடையிலேயே ரணில் சாணக்கியன் மீதான நடவடிக்கையை வலியுறுத்தினார்.

வைகாசி 9 வன்முறைகள் குறித்து நாடாளுமன்றத்தில் உரையாற்றிய சாணக்கியன், அரசமைப்பின் 20ஆவது திருத்தத்தை ஆதரித்த நாடாளுமன்ற உறுப்பினர்களினதும் நாட்டுக்கு எதிரான கொள்கையை உடைய நடாளுமன்ற உறுப்பினர்களதும் வீடுகளே தீக்கிரையாக்கப்பட்டன என்றும் குறிப்பிட்டார் என்று ரணில் தெரிவித்தார்.

மக்களுக்குத் துரோகமிழைத்ததன் காரணமாகவே நாடாளுமன்ற உறுப்பினர்களின் வீடுகள் கொழுத்தப்பட்டன என்பதை அனைவரும் ஞாபகத்தில் வைத்திருக்க வேண்டும் என்றும் கூறி வன்முறையாளர்களின் செயலை ஆதரித்தார் சாணக்கியன் என்று ரணில் சுட்டிக்காட்டினார்.

அப்படியொரு அறிக்கையை சாணக்கியன் எப்படி வெளியிட முடியும்? சக நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் கொல்லப்பட்டதையும் நாடாளுமன்ற உறுப்பினர்களின் வீடுகள் எரிக்கப்பட்டதையும் அவர்கள் தாக்கப்பட்டதையும் சாணக்கியன் எப்படி ஆதரிக்க முடியும் என்றும் ரணில் கேள்வி எழுப்பினார்.

நாடாளுமன்றத்தின் இந்த அமர்வு அடுத்த வாரம் முடிவதற்கிடையில் சாணக்கியன் தனது கருத்துக்காக மன்னிப்புக் கேட்பதுடன் அவற்றைத் திரும்பப் பெறவேண்டும் என்றும் வலியுறுத்திய ரணில், அப்படி அவர் செய்யவில்லை என்றால் இந்த விடயம் குறித்து விவாதித்து விசாரணைக் குழு ஒன்றை நியமிக்க சபாநாயகருக்கு அதிகாரமுள்ளது என்றும் தெரிவித்தார்.

தான் அதிகாரத்திற்கு வந்ததை விமர்சித்தும் தனது ஆட்சியைக் கலைப்பதை நோக்கமாகக் கொண்டும் செயற்பட்டுவரும் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களைக் கட்டுப்படுத்தும் நோக்கத்துடனேயே ரணில் இந்த விவகாரத்தைக் கையில் எடுத்திருக்கிறார் என்கின்றார்கள் அரசியல் அவதானிகள்.

## பெரும்...

யிலிருந்து விலகியிருந்தார். அவரது இடத்திற்கே தம்மிக்க பெரேரா நியமிக்கப்பட்டிருக்கிறார்.

அரசமைப்பில் 21ஆவது திருத்தம் மேற்கொள்வதற்காக முன்மொழியப்பட்டுள்ள விடயங்களில் இரட்டைக் குடியுரிமை கொண்டவர்கள் நாடாளுமன்ற உறுப்பினராக முடியாது என்று கூறப்பட்டிருப்பதன் காரணமாக, அதில் தனக்கு உடன்பாடில்லை என்று தெரிவித்து தனது பதவியில் இருந்து விலகினார் பசில் ராஜபக்ச. அவர் இலங்கைக் குடிமகன் என்பதுடன் அமெரிக்கக் குடியுரிமையையும் கொண்டிருக்கிறார். 21ஆவது திருத்தம் நிறைவேறினால் அவரது நாடாளுமன்றப் பதவி பறிக்கப்படும். அதற்கு முன்னதாகவே தனது பதவியிலிருந்து விலகுகிறார் என்றும் பசில் அறிவித்திருந்தார்.

பசிலின் இடத்திற்கு தம்மிக்க நாடாளுமன்ற உறுப்பினராக நியமிக்கப்பட்டுள்ளார் என்பதற்கான அறிவித்தலை வெள்ளிக்கிழமை மாலை தேர்தல்கள் ஆணையகம் அறிவித்து. அதற்கு முன்னதாக வெள்ளிக்கிழமை காலையே தம்மிக்க தான் வகித்து வந்த நிறுவனங்களின் தலைவர் பதவிகளில் இருந்து விலகினார்.

ஆளும் கட்சி சார்பில் தம்மிக்க நாடாளுமன்றத்திற்கு வருவார் என்கிற கதை கடந்த சில வாரங்களாகவே வெளியாகி வந்தது. இப்போது அது உறுதியாகி இருக்கின்றது. நாடாளுமன்ற உறுப்பினரானதும் அவருக்கு தொழில்நுட்பம் மற்றும் முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சுப் பதவி வழங்கப்படும் என்று தெரிகின்றது. அதற்கேற்ற வகையில் அந்த அமைச்சு அரச தலைவரின் பணிப்பின் பேரில் சிறப்பு அரசிதழ் அறிவிப்பின் மூலம் வெள்ளிக்கிழமை உருவாக்கப்பட்டது.

## சிறுபோகத்துக்கான...

குத் தேவையான உரத்தை உடனடியாகப் பெற்றுக்கொள்ளும் நோக்கத்தோடு இலங்கையிடமிருந்து விடுக்கப்பட்ட கோரிக்கையின் அடிப்படையில் இந்த உதவி வழங்கப்பட்டுள்ளது.

தகுந்த நடவடிக்கைகள் விரைந்து எடுக்கப்படவில்லை என்றால் நாட்டில் உணவுப் பற்றாக்குறை ஏற்பட்டு பஞ்சம், பட்டினி தாண்டவமாடும் என்று தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க தொடர்ந்து எச்சரித்து வருகின்றார். அந்த நிலையைத் தடுப்பதற்கான நடவடிக்கையாகவே சிறுபோகச் செய்கையை எதிர்கொள்வதற்கான யூரியாவைப் பெற அரசு நடவடிக்கை எடுத்துள்ளது.

முன்னதாக இலங்கையை முற்றிலும் இயற்கை விவசாய நாடாக்கப்போவதாக அறிவித்த அரச தலைவர் கோட்டாபய ராஜபக்ச வேதியல் உரங்களின் இறக்குமதியைத் தடை செய்தார். இதன் காரணமாக நாட்டின் பெரும்போக நெல் உற்பத்தி பெருமளவில் பாதிக்கப்பட்டது. அத்துடன் அந்நியச் செலாவணியை ஈட்டித்தரும் தேயிலை உற்பத்தியும் பெருமளவில் வீழ்ச்சியடைந்தது. நாட்டின் தற்போதைய பொருளாதார வீழ்ச்சிக்கு அரச தலைவரின் இந்தத் தவறான முடிவும் ஒரு காரணம் என்று குற்றஞ்சாட்டப்பட்டது. அண்மையில் அந்தக் குற்றச்சாட்டுக்களை ஏற்றுக்கொண்ட அரச தலைவர், அது தனது தவறு என்பதை ஒப்புக்கொண்டுமிருந்தார்.

# சம்பந்தன் என்ன செய்ய வேண்டும்...?

நியூட்டன்

இலங்கை நாடாளுமன்றத்தில் **225** உறுப்பினர்கள் உள்ளனர். நாடாளுமன்ற உறுப்பினர்கள் **225** பேரும் வீடு செல்ல வேண்டும் என்றே காலி முகத்திடல் போராட்டக்களத்திலும் குரல் எழுப்புகிறார்கள். ஆனால், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும் திருகோணமாலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான இரா.சம்பந்தன் **89** வயது காரணமாக இயங்கு நிலையில் இல்லை என்பதை இவர்களில் எவரும் கண்டுகொள்வதில்லை. அவரது மூப்பும், அவரது மாறுபட்ட அறிக்கைகளும் சிங்கள ஆட்சியாளர்களைப் பொறுத்தவரை அவர்களது அரசியல் நகர்வுகளுக்கு மிகவும் சாதகமாகின்றன.

மூத்தவர்கள் அல்லது வயது முதிர்ந்தவர்களை அனுபவசாலிகள் என நம்பும் பழக்கம் தமிழ் மக்களில் சிலரிடம் உண்டு. அவ்வாறு மூத்த தலைவர்களைக் கனம் பண்ணுவது என்ற பெயரில் மூத்தோரின் மூடத் தனங்களையும் சுமக்கவேண்டியிருக்கிறது.

**திருமலை மக்களின் அவலம்**

திருகோணமலையானது **3** இனத்தவர்களும் வாழ்கின்ற முக்கிய மாவட்டம். அங்கு அரசியல் ரீதியாகவும் நிலங்களைக் கபளீகரம் செய்யும் விடயத்திலும் தமிழரின் நிலை நாளுக்கு நாள் பலவீனமடைந்து வருகிறது. நிலமை இவ்வாறிருக்க அந்த இடங்களைச் சென்று பார்க்கவோ மக்களின் பிரச்சினைகளை நேரில் சென்று கவனிக்கவோ அந்த மாவட்டத்தைப் பிரதிபலிக்கின்ற இரா. சம்பந்தனால் முடியாது. அந்த வயோதிபரைத் துன்பப்படுத்தும் நோக்கில் மனிதாபிமானமின்றிச் செயற்பட்டவர்கள் சம்பந்தனுக்கு **2020**ஆம் ஆண்டுத் தேர்தலில் வாக்களித்த தமிழ் மக்களே.

சம்பந்தனைத் தோற்கடிப்பதற்கு அதே கட்சிக்குள் இருக்கின்ற சிலர் முனைந்தபோதிலும் அதே கட்சியில் இரண்டாவது அதிகூடிய விருப்பு வாக்கைப் பெற்றவரைவிடச் சம்பந்தன் **141** வாக்குகள் அதிகம் பெற்று நாடாளுமன்றம் சென்றார். சம்பந்தனை வீட்டுக்கு அனுப்ப வேண்டும் என்று நினைத்துச் செயற்பட்ட திருகோணமலைத் தமிழருக்கு அரும்பொட்டில் அந்த வாய்ப்பும் இல்லாது போயிற்று.



சம்பந்தனைத் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் தலைவராக வைத்துக்கொண்டு **2020**ஆம் ஆண்டுப் பொதுத்தேர்தலில் போட்டியிடவிடாது தமிழ் அரசுக் கட்சி தடுத்திருக்கவேண்டும். தற்போது நாடு எதிர்கொள்ளும் பிரச்சினையுடன் ஒப்பிடும்போது திருகோணமலைத் தமிழ் மக்கள் மிகத் துன்பப்படும் நிலையில் தமக்கான ஒரு நாடாளுமன்ற உறுப்பினர் களத்தில் இல்லை என்ற குறைபாடு பெரிதாகப் பேசப்படுகிறது.

திருகோணமலையைச் சேர்ந்த நண்பர் ஒருவருடன் உரையாடியபோது எப்படியிருக்கிறது திருகோணமலை நிலமை...? என்று கேட்க, "எங்களுக்குக் கோத்தா வீட்டுக்குப்போவதோ, **21**ஆவது அரசமைப்புத் திருத்தமோ அவசியமில்லை. சம்பந்தன் தனது பதவியைத் துறந்து அடுத்த நிலையில் இருக்கும் குகதாசன் என்பவரை நாடாளுமன்ற உறுப்பினர் ஆக்க வேண்டும்" என்றார்.

வடக்கு மாகாணசபை இயங்கிய காலத்தில் அதன் காலப்பகுதியை இரண்டாக அல்லது மூன்றாகப் பிரித்துத் தமது கட்சியில் தேர்தலில் போட்டியிட்ட இரண்டாம் மூன்றாம் நிலையிலிருந்தவர்களை மாகாணசபைக்கு அனுப்பினார்கள் முஸ்லிம் தலைவர்கள். சாகும்வரை நாடாளுமன்ற உறுப்பினராக இருக்கவேண்டும் என்ற கெட்ட உதாரணம் தமிழ் அரசுக் கட்சியினரிடம் மட்டுமே இருக்கிறது.

தந்தை செல்வா, அமிர்தலிங்கம் (யாழ்ப்பாணத்தில் தேர்தலில் போட்டியிட முடியாத நிலையில் மட்டக்களப்பில் தேர்தலில் போட்டியிட்டுத் தோற்ற பின்னர் தேசியப் பட்டியல் உறுப்பினராக இருக்கும்போது **1989** ஜூலை **13**இல் கொல்லப்பட்டவர். அந்த வெற்றிடத்தை வைத்தே மாவை சேனாதிராசா முதல் தடவையாக நாடாளுமன்றப் படியேறச் சந்தர்ப்பம் கிடைத்தது. அவரது **2**ஆவது நாடாளுமன்றப் பிரசன்னம் **10** வருடங்களின் பின் நீலன்திருச்செல்வத்தின் சாவில் **1999** ஜூலை **29**இன் பின்பு ஏற்பட்டது,

சம்பந்தன் **1989**ஆம் ஆண்டுத் தேர்தலில் **6**ஆயிரத்து **48** வாக்குகள் பெற்றுத் தோற்றார். **1994**இல் **19**ஆயிரத்து **252** வாக்குகள் பெற்றுத் தோற்றார். அப்போது தங்கத்துரை அவர்கள் **22**ஆயிரத்து **409** வாக்குகளைப் பெற்று வெற்றிபெற்றார். **1997** ஜூலை **5**ஆம் திகதி தங்கத்துரை கொல்லப்பட்டதைத் தொடர்ந்து தங்கத்துரைக்குப் பதிலாக நாடாளுமன்றம் சென்றார் சம்பந்தன். திருகோணமலை மாவட்டத்தில் இரண்டு தடவைகள் தேர்தலில் தோல்வியுற்ற சம்பந்தன் தங்கத்துரையின் சாவுக்குப் பின்னர் நாடாளுமன்றம் சென்றதால் தங்கத்துரையின் படுகொலைக்கும் சம்பந்தனின் நாடாளுமன்றப் பிரவேசத்துக்கும் தொடர்பு இருக்கிறது என்று திருகோணமலை மக்கள் மத்தியில் ஒரு கருத்துண்டு. அதன் பின்னர் **2** ஆயிரம் ஆண்டுத் தேர்தலில் சம்பந்தன் மீண்டும் தோற்கடிக்கப்பட்டார்.

"தமிழ் மக்களுக்கான கௌரவமான தீPர்வு" என்று சம்பந்தன் தொடர்ந்தும்கூறி வருகிறார். 'ஐயா தமிழ் மக்களுக்கான தீர்வைப் பெற்றுத் தந்துவிட்டுத்தான் சாவார்" என்கின்றனர் அவரது கட்சித் தொண்டர்கள். அரசியல் தீர்வுக்கான எந்தவிதமான காத்திரமான சிந்தனையும் இல்லாமல் வருடப் பிறப்பு, தீபாவளி, தைப்பொங்கலுக்குத் தீர்வு எனக்கூறித் தொடர்ந்தும் காலத்தை இழுத்து வருகிறார் சம்பந்தன்.

# பிரபாகரனின் தலையை நீல நிறக் கைக்குட்டையால் மூடினேன்

கமலநாதன்

**பிரபாகரன் உட்பட 3 சடலங்களும் மேலும் 27 பேரின் சடலங்களும் அந்த இடத்தில் கிடந்தன. பிரபாகரனின் கால்கள் குறைந்தது 3 நாள்களாவது தண்ணீரில் ஊறித் தோல்கள் சுருங்கியிருந்தன. நாங்கள் யாருமே அந்த இடத்தில் பிரபாகரன் இருந்தார் என்பதை எதிர்பார்க்கவில்லை.**

அமில குமார என்பவர் கொமாண்டோப் படையணியைச் சேர்ந்தவர். இறுதிப் போரின் இறுதி நாள்வரைக் களத்தில் நின்றவர். இறுதி நாள்களில் தான் பங்குபற்றிய, தான் கண்ட விடயங்கள் தொடர்பில் வெனச யூரியூப் தளத்தில் கீழ்வரும் கருத்துக்களைப் பதிவு செய்துள்ளார்.

2009 மே 17ஆம் திகதி இரவு 2 மணியளவில் கரையாமுள்ளிவாய்க்கால் பகுதியை உடைத்துப் புலிகளின் அணி ஒன்று வெளியேற முற்பட்டது. எமது அணியில் 8 பேர் கொண்ட இரண்டு அணிகளும், 4 பேர் கொண்ட ஓர் அணியுமாக 20 பேர் இருந்தோம். 18ஆம் திகதி அதிகாலை 2 மணியளவில் அதிகமான பொதுமக்கள் படையினரை நோக்கி வந்தார்கள். அதிகாலை 4 மணி தொடக்கம் 4.30 மணிக்கு இடைப்பட்ட நேரம் அது. இறுதி நாள் போர் தண்ணீரில் நடந்தது. விஜயபா படைப்பிரிவின் 58, 59 பிரிவினர் களத்தில் நின்றனர். இதில் 59ஆவது படையணிக்குக் கமால் குணரட்ண தலைமை தாங்கினார்.

18ஆம் திகதியன்று இரவு கிட்டத்தட்ட 2 மணி நேரம் பராலைட் அடித்து நாம் களப்பில் இறங்கியபோது கிபிர் வானூர்தி வீசிய குண்டுகள் வெடித்த கிடங்கு ஒன்றுக்குள் விழுந்தேன். அதன் பின்னர் கரையாமுள்ளிவாய்க்கால் பகுதியில் புலிகளின் 3 சடலங்கள் கிடப்பதைக் கண்டேன். அந்த 3 சடலங்களுடனும் வி.ஐ.பி. (வெறி இம் போர்ட்டன் பேர்சன்) எனப்படும் மிக முக்கியமான ஒருவருக்கான சிறப்புப் பாதுகாப்புத் துப்பாக்கிகள் கிடந்தன. 8 பேர் கொண்ட எமது அணியை அங்கு சென்று மேலும் விவரங்களை அறியுமாறு மேலிடத்திலிருந்து கட்டளை வந்தது.

அந்தப் பகுதியில் கடற்கரையை அண்டிய சிறு சிறுதீவுகள்போல மண் திட்டுக்களும் சிறிய பற்றைகளும் இருந்தன. அவற்றை ஒவ்வொன்றாகப் பரிசீலிக்க முற்பட்டோம். நாம் அந்தப் பகுதியை நோக்கிச் சென்றபோது 30 மீற்றர் தூரமிருக்கும்போது எமது அணி மீது புலிகள் தாக்குதல் நடத்தினார்கள். அந்த இடத்தைக் கைப்பற்றிய பின்னர் பிரபாகரன்போல ஒருவரது சடலம் இருக்கிறது என அறிவித்தேன். அந்தச் சடலத்தை எடுத்துவருமாறு எனக்கு அறிவிக்கப்பட்டது.

அந்தச் சடலத்துடன் அந்த நபரின் கைத்துப்பாக்கி, அதன் இடுப்புப் பட்டி என்பவற்றையும் எடுத்துக்கொண்டேன். காலணி இல்லாமல் வெறும் காலுடன் புலிகளின் சீருடை என அந்தச் சடலம் கிடந்தது. அந்தச் சடலத்தின் தகட்டு இலக்கம் 001 எனவும் அவரது அடையாள அட்டையில் பிரபாகரன் எனவும் பொறிக்கப்பட்டிருந்தது. அதை வைத்து இறந்தவர் பிரபாகரன் என உறுதிப்படுத்த முடிந்தது.

பிரபாகரன் உட்பட 3 சடலங்களும் மேலும் 27 பேரின் சடலங்களும் அந்த இடத்தில் கிடந்தன. பிரபாகரனின் கால்கள் குறைந்தது 3 நாள்களாவது தண்ணீரில் ஊறித் தோல்கள் சுருங்கியிருந்தன. நாங்கள் யாருமே அந்த இடத்தில் பிரபாகரன் இருந்தார் என்பதை எதிர்பார்க்கவில்லை. இறுதியாக நடந்த போரில் கரையாம்முள்ளிவாய்க்கால் பகுதியை உடைத்து மீண்டும் விசுவமடுப் பகுதிக்குள் செல்வதற்கான திட்டம் அவர்களிடம் இருந்தது என்று தெரிகிறது. அந்த முயற்சியில் தோல்வி ஏற்பட்டதால் இறுகிப் போனார்கள். இறுதிநேரத்தில் அவர்களுக்கு உணவு இருக்கவில்லை என்பது தெரிகிறது. பால் பைக்கற்றுகள் சில அருகில் கிடந்தன.

பிரபாகரனின் சடலம் கிடைத்ததும் அதைத் தூக்கிவரும்போது வானத்தை நோக்கித் துப்பாக்கியால் சுட்டவாறு வந்தோம். பிரபாகரனின் மகன் சார்ள்ஸ் அன்ரனி 18ஆம் திகதி காலையில் கொல்லப்பட்டார் என்று தெரிய வந்தது. பிரபாகரனின் சடலம் கிடந்த இடம் 100 மீற்றர் நீளமும் 40 மீற்றர் அகலமும் கொண்ட மணல் திட்டுப் பகுதி. தொலைத்தொடர்புக் கருவிகளுக்குப் பாவிக்கும் சிறிய மின்கலங்கள் இல்லாததால் சாதாரண டோர்ச் லைற் மின்கலங்களை இணைத்துப் பாவித்திருக்கிறார்கள். அங்கு சடலங்களாகக் கிடந்தவர்களிடம் சயனைட், கைக்குண்டுகள், தற்கொலைப்படைக்கான ஜக்கெற்றுகள் எவையும் இருக்கவில்லை.

பிரபாகரனின் சடலத்தில் கைக்குண்டு வெடித்து ஏற்பட்ட காயம்போல தலை பிளந்து கிடந்தது. சுயாதீன தொலைக்காட்சி நிருபரான ராஜ பத்திரனவின் நீல நிறக் கைக்குட்டையை வாங்கி தலைக் காயத்தை மூடிவிட்டேன். பிரபாகரனின் சடலத்தைக் கருணா உறுதிப்படுத்தினார்.

நான் எனது படைத் தொழிலில் என்றுமில்லாதவாறு 2007ஆம் ஆண்டிலிருந்து 2 வருடங்கள் தொடர்ச்சியாகப் புலிகளுக்கு எதிரான போரில் ஈடுபட்டேன். 2013ஆம் ஆண்டு ஓய்வுபெற்றேன்.




## சம்பந்தன்....

**கட்சிக்குள் ஜனநாயகம் இல்லை**

அவரது கட்சிக்குள் ஜனநாயகம் இல்லை என்று வெளிப்படையாகத் தெரிந்தாலும் சம்பந்தனின் தயவில் இலங்கை அரசிடம் தனிப்பட்ட நன்மைகளைப் பெற்ற நாடாளுமன்ற உறுப்பினர்கள் அவரை எதிர்க்க முடியாத நிலையிலுள்ளனர். சம்பந்தன் 2020 தேர்தலில் ஒதுங்கி இன்னொருவருக்குச் சந்தர்ப்பம் கொடுத்திருந்தால் உயிருடன் இருக்கும்போதே திருகோணமலை மக்களுக்காக தமிழ் அரசுக் கட்சியின் மற்றோர் தலைமைத்துவத்தை உருவாக்கி முன்னுதாரணமாகச் செயற்பட்டார் என்று பேசப்பட்டிருப்பார். புகழப்பட்டிருப்பார்.

தற்போதும் ஒன்றும் கெட்டுப்போகவில்லை. மிகுதியாக இருக்கும் காலப் பகுதிக்குள் அடுத்த நிலையில் வாக்குகளைப் பெற்றவரை நாடாளுமன்ற உறுப்பினராக ஆக்குவதே சாலச் சிறந்தது. அதேவேளை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவராக இருந்தவாறே தீர்வைப் பற்றியும் சம்பந்தனால் யோசிக்க முடியும். அதைச் செய்வாரா சம்பந்தன்...? இல்லையேல் காலத்தால் பழிக்கப்படுவாரா...?



# யாருக்காக இந்த 21ஆவது திருத்தம்...?

**சத்தியநாதன்**

மகிந்த குடும்பத்தை அரசியலில் இருந்து ஓரம் கட்டுவதற்காக ரணில் விக்கிரம சிங்கவால் கொண்டுவரப்பட்டதுதான் அரசமைப் பின் 19ஆவது திருத்தம். ஒருவர் 3ஆவது தடவையாக அரச தலைவர் தேர்தலில் போட்டி யிட முடியாது (மகிந்தவைக் குறிவைத்து) இரட்டைக் குடியுரிமையுள்ளவர் நடாளுமன்ற உறுப்பினராக முடியாது (கோத்தாபய ராஜபக்ச, பசில் ராஜபக்ச ஆகியோரைக் குறிவைத்து) 32 வயதுக்குட்பட்டவர் அரச தலைவர் தேர்தலில் போட்டியிட முடியாது (நமால் ராஜபக்சவைக் குறிவைத்து) என்பவை எல்லாம் ராஜபக்ச குடும் பத்தை இலக்கு வைத்துக்கொண்டுவரப்பட்டவை தான். இவற்றையெல்லாம் சரிசெய்யும் வகையில் மகிந்த குடும்பத்துக்குச் சார்பாகக் கொண்டு வரப்பட்டதே 20ஆவது அரசமைப்புத் திருத்தம். 19இல் சொல்லப்பட்ட எல்லாவற்றையும் அப் படியே தலைகீழாக மாற்றி 20ஐக் கொண்டு வந் தார்கள்.

தற்போது அதையும் மறுதலித்து 21ஆவது அரசமைப்புத் திருத்தம் அவசியம் என்கின்றனர். அவ்வாறெனில் இந்தத் திருத்தம் யாருக்காக - எதற்காகக் கொண்டுவரப்படவிருக்கிறது?

**20ஆவது திருத்தம்**

அரசமைப்பின் 20ஆவது திருத்தத்தில் அரச தலைவருக்கு அதிகாரமளிக்கும் வகையில் பின்வரும் விடயங்கள் உள்ளடக்கப்பட்டிருக் கின்றன. புதிய நாடாளுமன்றம் நியமிக்கப்பட்டு ஒரு வருடத்தின் பின்னர் அரச தலைவரால் எந்த நேரத்திலும் அதைக் கலைக்க முடியும். எத்தனை அமைச்சர்களையும் அவர் நியமிக்கலாம். தான் விரும்பிய எந்த அமைச்சையும் வைத்திருக்கலாம், சுயாதீன ஆணைக்குழுக்களின் அங்கத்தவர் களையும் தலைவர்களையும் அரச தலைவரே நேரடியாக நியமிக்கலாம். 30 வயதுள்ள எவரும் அரச தலைவருக்கான தேர்தலில் போட்டியிட முடியும். உயர் நீதிமன்ற மற்றும் மேன்முறையீட்டு நீதிமன்ற நியமனங்களை அரச தலைவர் மேற் கொள்ளலாம். நீதிச்சேவை ஆணைக்குழு உறுப் பினர்களை நியமிக்கும் அதிகாரம் அரச தலை வருக்கு உண்டு. காலத்துக்குக் காலம் பிரகட னத்தின் மூலம் நாடாளுமன்றத்தைக் கூட்டுமாறு அழைப்பு விடுக்கலாம், நாடாளுமன்ற அமர்வை நிறுத்த அல்லது கலைக்க அவரால் முடியும். 10



பேர் கொண்ட அரசமைப்புப் பேரவைக்குப் பதி லாக 5 அங்கத்தவர்களை வைத்திருக்கலாம். நாடாளுமன்றப் பேரவையில் சிவில் சமூகப் பிரதிநிதிகள் இல்லை. காவல் ஆணைக்குழுவின் அதிகாரங்கள் குறைப்பு, இரட்டைக் குடியுரிமை உள்ளவர்களும் தேர்தலில் போட்டியிடலாம் என முழுமையாக அரச தலைவரின் பிடியைப் பலப் படுத்தியது இந்தத் திருத்தம்.

19, 20 என அடுத்தடுத்து உருவாக் கப்பட்ட அரசமைப்புத் திருத்தங்கள் ஆட்சியாளர்களுக்குச் சாதகமாகவும், அவர்களின் அற்ப அரசியலுக்காகவும், ஆட்சியைத் தக்கவைக்கவும் உரு வாக்கப்பட்டவையாகவே இருந்தன. தவிர மக்களின் நலன் கருதிய எதுவும் அவற்றில் இருக்கவில்லை.

**பசிலின் முடிவு**

அரசமைப்பின் 21ஆவது திருத் தத்தில் இரட்டைக் குடியுரிமை என்ற வலையில் சிக்கிய பசில் ராஜபக்ச குறிவைக்கப்பட்டிருப்பதால் அவர் தனது பதவியைத் துறந்துள்ளார். அவ ரது இரட்டைக் குடியுரிமை பிரச்சி னைக்கு இதன் மூலம் மகிந்த குடும்பம் தீர்வு கண்டிருக்கிறது. அவரது பதவி துறப்பையடுத்து இரட்டைக் குடியு ரிமை விடயத்தை ஏனையவர்கள் ஒரு அழுத்த சக்தியாகப் பயன்படுத்த முடியாத ஒரு களநிலவரத்தை ஏற் படுத்தியிருக்கிறது.

**தமிழருக்கான அரசியல் தீர்வு**

இதுவரையான அனைத்து அரசமைப்புத் திருத்தங்களிலும் சிங்கள பௌத்தத்துக்கு மட்டுமே முன்னுரிமை வழங்கப்பட்டு வருகிறது. தமிழருக்கான அரசியல் தீர்வு என்ற விடயத்தில் இதுவரையில்லாமல் புதிதாக எதுவும் சேர்க்கப்பட வாய்ப்பில்லை. தமிழ்க் கட்சிகள் தமக்குள் ஒற்றுமையில்லாத சூழலில் புதிய அரசமைப்புத் திருத்தம் பற்றி ஆராய்வது எந்த விதத்திலும் சாத கமானதல்ல. இலங்கையில் 80 வீதமான பெரும் பான்மைச் சிங்களவருக்கு மாறாக இணைந்த வடக்குக் கிழக்கைத் தமிழருக்கும் முஸ்லிம்க ளுக்கும் தாரை வார்க்கப்போவதில்லை. வடக்குக் கிழக்குக் கோட்பாட்டின் மூலம் பெருமளவு நிலத் தையும் கடல்வளத்தையும் சிறுபான்மை இனங்க ளுக்குச் சிங்கள ஆட்சியாளர்கள் ஒருபோதும் வழங்கப்போவதில்லை. அதற்கு உடன்படுவதாகக்

**19, 20 என அடுத்தடுத்து உருவாக்கப்பட்ட அரசமைப்புத் திருத்தங்கள் ஆட்சியாளர்களுக்குச் சாதகமாகவும், அவர்களின் அற்ப அரசியலுக்காகவும், ஆட்சியைத் தக்கவைக்கவும் உருவாக்கப்பட்டவையாகவே இருந்தன**



கருத்துரைக்கின்ற சிங்களத் தலைவர்கள் அடுத்த தேர்தலில் சிங்கள மக்களால் தூக்கியெறியப்படுவர்.

**முஸ்லிம்களின் நிலைப்பாடு**

1990 ஒகஸ்ட் 3ஆம் நாள் காத்தான்குடிப் பள்ளிவாசல் படுகொலையையும் 1990ஆம் ஆண்டில் வடக்கிலிருந்து முஸ்லிம்கள் விரட்டப் பட்டதையும் முதன்மைப்படுத்தி அதன் பின்ன ணியில் கிழக்கு மாகாணத்தைத் தமது தாயகமாகக் 'கிழக்கிஸ்தான்" என உருவாக்கியிருக்கிறார்கள் முஸ்லிம்கள். இது 1976இல் வட்டுக்கோட்டைத் தீர்மானத்தில் எடுக்கப்பட்ட "தமிழீழம்" என்ற கருதுகோளுக்கு ஒப்பானதாக முஸ்லிம்களால் உருவாக்கப்பட்டிருக்கிறது. போர் முடிந்த 13 ஆண்டுகளில் முஸ்லிம் தலைவர்களும் முஸ்லிம் அறிவாளிகளும் தமது அரசியல் தீர்வு விடயத்தில் பெரிய வேலைத்திட்டங்களை முன்னெடுத்து வருகின்றனர். அதில் ஒன்று முஸ்லிம்களின் பூர்வீகத்தைக் காட்டுவதற்காக காத்தான் குடியில் தொல்லியல் சின்னங்களைப் பேணும் நூதனசாலை ஒன்றையும் அமைத்திருக்கிறார்கள். தமிழருக்கான அரசியல் தீர்வில் முஸ்லிம்களின் தீர்வும் அடங்கியிருப்பதால் தமிழருக்கான தீர்வைத் தனியாகச் செயற்படுத்தச் சிங்களத் தலைவர்கள் விரும்பப்போவதில்லை. (ஜே.ஆர். இதற்கான அடித்தளத்தை வகுத்துச் சென்றார்)

2019 சித்திரை 21இல் உயிர்த்த ஞாயிறுத் தாக் குதல்களை முஸ்லிம்கள் செய்ததால் தம்மை நிம் மதியாக வாழவிடமாட்டார்கள் என்ற எண்ணப்பாட் டைச் சிங்களவருக்கு முஸ்லிம்கள் ஏற்படுத்தியிருக் கின்றர். இத்தகைய பின்புலத்திலிருந்து பார்த்தால் வடக்குக் கிழக்கு இணைவோ தமிழ் - முஸ்லிம் மக்களுக்கான தீர்வோ வரப்போவதில்லை.

கல்முனை பிரதேச செயலகத்தைத் தமிழருக்குச் சார்பாக உருவாக்குவதில் உள்ள சிக்கலைப் போலவே தமிழருக்கான அரசியல் தீர்வு விடய மும் முஸ்லிம்களுடன் இணைத்துப் பார்க்கப்பட வாய்ப்புண்டு. 21ஆவது திருத்தம் என்பது சிங்கள மக்களுக்கான ஏற்பாடே தவிர ஏனைய சிறுபான்மை இனங்களுக்குரியதாக இருக்காது.

# முதல் வைரஸின் கதை!

மாதவி

கொரோனா பெருந்தொற்று உலகத்தை ஆட்டிப் படைத்தபோது ஒட்டு மொத்த மனித குலமுமே ஆடிப்போனதென்னவோ உண்மைதான். எது எப்போது எப்படி நிகழும் என்று தெரியாத பயப் பீதிக்குள் மனிதர்கள் ஆழ்ந்துபோயிருந்தார்கள். கொவிட்-19 என்கிற தீநுண்மி (வைரஸ்) பரவலே கொரோனாவிற்குக் காரணம் என்று அறிவிக்கப்பட்டது. அதுவும் வௌவால்களில் இருந்து அது மனிதர்களுக்குப் பரவியிருக்கலாம் என்கிற சந்தேகமும் வெளியிடப்பட்டது. ஆனால் அதற்கான அறிவியல் ஆதாரங்கள் எவையும் இதுவரை வெளியாகவில்லை. எப்படியாக இருந்தபோதும் கொரோனாவின் கோரத் தாண்டவம் காரணமாக நாடுகளின் பொருளாதாரங்கள் பெருதும் பாதிப்பைச் சந்திதுள்ளன. இலங்கையும் அதில் ஒன்று. இலங்கையில் இன்று நிலவும் பொருளாதார அழிவிற்கு கொரோனாவும் ஒரு காரணி என்பதில் மாற்றுக்கருத்தில்லை.

**நுண்ணியதோர் உலகம்**

கொரோனா தீநுண்டமி (வைரஸ்) இந்தியாவிலும் தொற்றத் தொடங்கிய பிறகு, தீநுண்மி (வைரஸ்) என்ற வார்த்தையைக் கேள்விப்படாத, கேட்காத, அஞ்சாத நாளே ஒருவருக்கும் இல்லை எனும் அளவுக்கு நிலைமை மாறிவிட்டது. உலகையே அச்சுறுத்திக் கொண்டிருக்கும் தம்மாத்தூண்டு வைரஸ் வகைகள் பற்றி மனித குலத்துக்கு எப்போது தெரிய வந்தது? யார் இவற்றைக் கண்டறிந்தார்கள்? என்ற கேள்விகள் பலருக்கும் எழுந்திருக்கும்.

பாக்டீரியா பற்றி, அது ஏற்படுத்தும் பிரச்சினைகள் பற்றிக்கூட அறிவியல் உலகத்துக்குப் பல நூற்றாண்டுகளுக்கு முன்பே தெரிந்திருந்தாலும் வைரஸ் பற்றிக் கண்டறிந்தது என்னவோ 128 ஆண்டுகளுக்கு முன்புதான்.

முதல் கட்ட நுண்ணுயிரியல் ஆராய்ச்சிகள் பாக்டீரியா பற்றியே அதிகமும் நடைபெற்றன. வைரஸ் பற்றிக் கண்டறிவது அவ்வளவு எளிதாக இல்லை. அதற்குக் காரணம் வைரஸின் அளவுதான். இன்றைக்கும் வைரஸைக் கண்டறிவதற்கான பரிசோதனைகள், வைரஸுக்குத் தடுப்பு மருந்து கண்டறிவது, சிகிச்சை மருந்து கண்டறிவது என எல்லாமே சிக்கலான விஷயங்களாகவே தொடர்கின்றன.

குட்டித் தெள்ளுப்பூச்சிகளைப் பார்த்திரா விட்டாலும், கேள்விப்பட்டிருப்பீர்கள். ஒரு தெள்ளுப்பூச்சியின் அளவு 1.5 மி.மீ. அதாவது, ஒரு செ.மீ.க்கு 10 குட்டிக்குட்டி கோடு போட்டிருப்பார்கள் இல்லையா, அதில் ஒன்றரைக் கோடு அளவே இருக்கும். பாக்டீரியா அதை விடச் சிறியது. ஒரு தெள்ளுப்பூச்சிக்குள் 10 ஆயிரம் கோடி பாக்டீரியாவை அடைத்து விடலாம். அப்போ வைரஸ்? வைரஸ் அதை விடவும் நுண்ணியது. ஒரு பாக்டீரியாவுக்குள் 10 ஆயிரம் வைரஸ்களை அடைக்கலாம். சுருக்கமாக, ஒரேயொரு முற்றுப்புள்ளிக்குள் லட்சக்கணக்கான வைரஸ்களை அடைத்துவிட முடியும். இந்தத் தக்கினியூண்டு வைரஸ்தான் உலகை இன்றைக்கு ஆட்டிப்படைத்துக் கொண்டிருக்கிறது.

**வைராலஜி**


வைரஸ் வகைகள் பற்றி ஆராய்வது வைராலஜி என்றும், ஆராய்பவர்கள் வைராலஜிஸ்ட் என்றும் அழைக்கப்படுகிறார்கள். நுண்ணுயிரியல் துறையின் ஒரு பிரிவாக வைராலஜி உள்ளது. உலகிலுள்ள வேறு எந்த உயிர்ப்பொருளைவிடவும் வைரஸ் வகைகளே அதிகம். உலகில் லட்சக்கணக்கான வைரஸ் வகைகள் உள்ளன.

லத்தீன் மொழியில் விருலன்ட், விருலன்டஸ் (Virulent/Virulentus) என்றால் நச்சு என்று அர்த்தம். இதிலிருந்தே வைரஸ் என்ற சொல் உருவானது. தொற்றக்கூடிய நோய்க் கிருமி என்று இதற்குப் பொருள். கிட்டத்தட்ட தமிழிலும் இதேபோன்றதொரு பெயரே வைரஸுக்கு முன்மொழியப்பட்டுள்ளது. தமிழில் வைரஸை, தீநுண்மி என்று சிலர் மொழிபெயர்க்கிறார்கள். இது ஒருதலைப்பட்சமான மொழிபெயர்ப்பு.

இப்போதுவரை சுமார் 6,000 வைரஸ் வகைகள் பற்றி அறிவியல் விளக்கியுள்ளது. அந்த 6,000 வகைகளும் மனிதர்களுக்கோ விலங்குகளுக்கோ தீமை செய்வதாக அறியப்படவில்லை. எனவே, எல்லா வைரஸுமே தீயது என்று முத்திரை குத்துவது சரியாக இருக்காது.







**பிரிக்க முடியாதது!**

பிரெஞ்சு நுண்ணுயிரியலாளர் லூயி பாஸ்தேர், குழந்தைப் பேறுக்குப் பிந்தைய பாக்டீரியத் தொற்று-காய்ச்சலால் ஏற்படும் இறப்பு விகிதத்தைக் குறைத்தது, கால்நடைகளைப் பாதிக்கும் ஆந்த்ராக்ஸ் பாக்டீரியத் தொற்றுக்கும் ரேபிஸ் வைரஸுக்கும் தடுப்பு மருந்தைக் கண்டறிந்தது ஆகியவற்றுக்காகப் புகழ்பெற்றவர். ஆனால், அவர் வாழ்ந்த காலத்தில் வைரஸ் பற்றி அறிவியல்பூர்வமாகக் கண்டறியப்பட்டிருக்கவில்லை.

பாக்டீரியத் தொற்று ஆராய்ச்சிகளில் அவர் கண்ட முன்னேற்றம், பரிசோதனைக்கூட நடைமுறைகள் போன்றவை இன்றுவரை தாக்கம் செலுத்தி வருகின்றன. ரேபிஸ் வைரஸுக்குத் தடுப்பு மருந்தை பரிசோதித்துப் பார்த்திருந்த பாஸ்தேரால், அந்த நோய்க்குக் காரணியான ரேபிஸ் வைரஸை தனியாகப் பிரித்தெடுக்க முடியவில்லை. அந்த நோயை ஏற்படுத்திய கிருமி அவ்வளவு நுண்ணியதாக இருந்தது. இன்றைக்கும்கூட எலக்ட்ரான் நுண்ணோக்கியால் மட்டுமே வைரஸைப் பார்க்க முடியும்.

இந்தப் பின்னணியில் மற்றொரு பிரெஞ்சு நுண்ணுயிரியலாளர் சார்லஸ் சேம்பர்லாண்ட் ஒரு வடிகட்டியைக் கண்டறிந்திருந்தார். அந்த வடிகட்டி எவ்வளவு நுண்ணியது என்றால், ஒரு திரவத்தில் உள்ள பாக்டீரியாவை அதைக்கொண்டு வடிகட்டிவிடலாம். பாக்டீரியாவின் அளவைக் குறித்து மேலே பார்த்திருந்தோம். அதையே வடிகட்டி எடுக்கும் அளவுக்கு 19 ஆம் நூற்றாண்டில் அறிவியல் வளர்ந்திருந்தது.

**பிரித்தாலும் புரியவில்லை**

ரஷ்யத் தாவரவியலாளர் டிமிட்ரி இவ்னோவ்ஸ்கி மொசைக் வைரஸால் பாதிக்கப்பட்ட புகையிலைத் தாவர இலைகளை நுண்துகள்களாக்கி, மேற்கண்ட வடிகட்டி மூலம் 1892இல் வடிகட்டினார். இந்த வடிகட்டுதல் மூலமாக அந்த இலைகளில் பாக்டீரியா ஏதும் இருந்திருந்தால் நீக்கப்பட்டிருக்கும். ஆனால், அதற்குப் பிறகும்கூட அந்த இலைகளில் இருந்து நோய்த்தொற்று முழுமையாக நீங்கியிருக்கவில்லை.

அதன் காரணமாக பாக்டீரியா அல்லாத வேறு ஏதோ ஒன்றுதான் நோய்க்குக் காரணம் என்று இவனோவ்ஸ்கி கருதினார். வடிகட்டிய பிறகு பாக்டீரியா இல்லாவிட்டாலும், பாக்டீரியா வெளியிட்ட நச்சின் எச்சம் அந்த இலைகளில் இருந்திருக்கலாம் என்று அவர் நினைத்தார்.

அப்படி அவர் நம்பியதற்குக் காரணம், அனைத்து நோய்த் தொற்றுக் கிருமிகளையும் பாக்டீரிய வடிகட்டியால் வடித்தெடுத்து, எடுக்கப்பட்ட சாரத்தை ஒரு ஊட்டச்சத்துப் பொருளில் வளர்த்தெடுத்து, குறிப்பிட்ட நோய்க்கிருமி எதுவென்று கண்டறிந்துவிட முடியும் என்று அந்தக் காலத்தில் நம்பப்பட்டது தான். இன்றைக்கும்கூட இந்த முறைகள், சில வகைகளில் பயன்படுத்தப்படுகின்றன.

**வெற்றி, வெற்றி!**

அதேநேரம், இவனோவ்ஸ்கி மேற்கொண்ட பரிசோதனையை நெதர்லாந்து நுண்ணுயிரியலாளர் மார்டினஸ் பயரின்க், 1898இல் மீண்டும் செய்து பார்த்தார். புகையிலை துகள் கரைசலில் இருந்து வடிகட்டப்பட்ட திரவத்தில் புதிய நோய்த்தொற்றுக் கிருமி இருக்கலாம் என்று அவர் கணித்தார். பிரிந்த செல்களில் மட்டுமே அந்தப் புதிய கிருமி பெருகியிருந்ததைக் கண்டறிந்தார். திரவத்தில் கரையக்கூடிய கிருமியாக அது இருக்கலாம் என்று கருதிய அவர், ஏற்கெனவே புழக்கத்தில் இருந்த வைரஸ் என்ற பெயரை, அந்தப் புதிய கிருமிக்குச் சூட்டினார். அதன் பிறகுதான் வைரஸ் என்ற பெயர், கடந்த 128 ஆண்டுகளாக உலகில் பிரபலமாகத் தொடங்கியது. அவர் கண்டறிந்தது மொசைக் வைரஸ்.

**மார்டினஸ் பயரின்க்**

அதேநேரம் பயரின்க் கூறியதுபோல், வைரஸ் என்பது திரவத்தில் கரையக்கூடிய கிருமியல்ல, அது ஓர் நுண்துகள்தான் என்பதை அமெரிக்க வைராலஜிஸ்ட் வெண்டல் ஸ்டான்லி பின்னர் நிரூபித்தார். உலகில் முதலில் கண்டறியப்பட்டு பிரித்தெடுக்கப்பட்ட வைரஸ், புகையிலை மொசைக் வைரஸ். இதுதான் உலகின் முதல் வைரஸ் கண்டறியப்பட்ட சற்றே சுருக்கமான கதை.



# நயன்தாராவின் சுதந்திரம் எல்லாப் பெண்களுக்கும் வேண்டும்!

அரண்யா

நயன்தாரா - விக்னேஷ் சிவன் திருமணம் சென்னை அருகே மகாபலிபுரத்தில் பிரபலங்கள் சூழ பெருவிழாவாக நடைபெற்றது. இதையொட்டி சமூக ஊடகங்களில் ரசிகர்களும் மற்றவர்களும் வாழ்த்து மழை பொழிந்து வருகின்றனர்.

'நானும் ரவுடிதான்' படத்திலிருந்து நயன்தாராவும், விக்னேஷ் சிவனும் காதலிக்கத் தொடங்கினர். ஏறக்குறைய 6 வருடங்களாக காதலித்து வந்தவர்கள் இப்போது மண வாழ்க்கையைத் தொடங்கியுள்ளனர்.

முன்னதாக, திருப்பதியில் நடைபெறவிருந்த அவர்களின் திருமணம் பல்வேறு காரணங்களால் சென்னைக்கு மாற்றப்பட்டது. மகாபலிபுரத்தில் உள்ள நட்சத்திர சொகுசு விடுதியில் திருமணத்திற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. இதில் பிரபலங்கள் பலர் கலந்து கொண்டனர்.

நயன்தாரா இந்தியாவின் மலையாள மாநிலத்தைச் சேர்ந்தவர். நடிகர் சரத்குமாரின் ஐயா என்கிற திரைப்படம் மூலம் தமிழ்த் திரையுலகிற்கு அறிமுகமானார். அதைத் தொடர்ந்து பல தமிழ்ப் படங்களில் நடித்துப் புகழ்பெற்றார். கடந்த சில வருடங்களாக தமிழகத்தின் லேடி சுப்பர் ஸ்டார் என்கிற வகையில் ரசிகர்களால் கொண்டாடப்பட்டு வருகின்றார்.

அவருக்கு முதலில் நடிகர் சிம்புவுடன் காதல் இருந்ததாகச் செய்திகள் பரவின. அவர்கள் இருவரும் நெருக்கமாக இருக்கும் படங்கள்கூட வெளியாகி இருந்தன. அந்தக் காதல் பிளவிற்குப் பின்னர் நடிகரும் இயக்குநருமான பிரபுதேவாவுடன் அவர் "லிவ்விங் ருகெதர்" எனப்படும் திருமணமின்றியே ஒன்றாக வாழும் வாழ்க்கையை நடத்தி வந்தார் என்று சொல்லப்பட்டது. பொது நிகழ்வுகளில் இருவரும் ஒன்றாகவே கலந்துகொள்ளுமளவிற்கு அந்த உறவின் நெருக்கம் பகிரங்கமாக இருந்தது. ஆனால் என்ன காரணமோ தெரியவில்லை அதுவும் பின்னர் பிரிவில் முடிந்துவிட்டது.

அதன் பின்னரே நயன்தாரா இயக்குநர் விக்னேஷ் சிவனைச் சந்தித்தார். காதலித்தார். அவர்களின் காதல் மற்றும் லிவ்விங் ருகெதர் 6 வருடங்கள் தொடர்ந்தது. இப்போது அது திருமணத்தில் முடிந்திருக்கிறது. சமூக வலைத்தளத்தில் அதனைப் பெருமெடுப்பில் கொண்டாடி வருகின்றார்கள். பார்ப்பதற்கு மகிழ்ச்சியாக உள்ளது. அதேநேரம் இன்று நயன்தாராவைக் கொண்டாடுபவர்கள் தங்கள் வீட்டின் அருகிலும் இப்படி ஒரு அக்காவோ தங்கையோ முதல் காதல்களில் இருந்து மீண்டு மூன்றாவது காதலில் திளைத்து திருமணத்தில் அதை முடிக்கும்போது அவர்களை சிறுமைப்படுத்தி, கொச்சைப்படுத்தி, காழ்ப்புணர்வை வாரித் தூற்றாமல் இவர்கள் எல்லோரும் வாழ்த்தவேண்டும்.

பெரும் புகழும் வெற்றியும் பணமும் படைத்த நயன்தாரா தன் வாழ்க்கையை தன் விருப்பப்படி அமைத்துக்கொள்வதற்கு எடுத்துக்கொண்ட சுதந்திரத்தை இந்தச் சமூகம் குறிப்பாக ஆண்கள் அனைத்துப் பெண்களுக்கும் வழங்கவேண்டும்.







# சைபர் வில்லன்கள்: திருமண வலைதள மோசடிகள்

**அரவிந்தன்**

நண்பர் ஒருவர் தனது பெண்ணுக்கு வரன் பார்ப்பதற்காக ஒன்லைன் மேட்ரிமோனியல் தளங்களில் கட்டணம் செலுத்தி சந்தாதாரராக சம்பந்தம் தேடிக்கொண்டிருந்தார். அதில் மாதக் கட்டணம் செலுத்துவது மட்டும்தான் அவர் பொறுப்பு. கணக்கை நிர்வகிப்பதை அவரது பெண்ணே செய்துவந்தார்.

ஒருநாள் அவரது மகளுக்கு ஒரு ப்ரொஃபைலில் இருந்து விண்ணப்பம் வந்தது. தான் தமிழ்க் குடும்பம் எனவும் கனடாவில் ஒரு வங்கியில் வேலை செய்துவருவதாகவும் சொல்லி, 'உங்களது ஃப்ரொஃபைல் பிடித்திருக்கிறது, ஜாதகம் பகிர முடியுமா!' என்று எதிர்முனை கேட்டது. பெண்ணும் பகிர்ந்திருக்கிறார். சில நாட்களில் பையன் தரப்பிலிருந்து ஒரு குரல் வந்தது. 'நான் அவனுடைய அம்மா பேசுகிறேன். உன்னை மிகவும் பிடிச்சிருக்கு. ஜாதகமும் அற்புதமா பொருந்திப் போகிறது. உங்கப்பா அம்மாகிட்ட அடுத்தது பேசலாமா?' என ஆங்கிலத்தில் கேட்க, இவர் தனது வீட்டில் சொல்ல, இரு வீட்டாரும் பேசத் தொடங்கியிருக்கிறார்கள்.

இதற்குள் பெண்ணுக்கும் பையனுக்கும் இணையத்தில் தொடங்கிய உரையாடல், பிறகு இதயத்தில் நுழைந்து, புகைப்படங்கள், ஸ்மைலிகள், வீடியோ அழைப்புகள் எனக் காதலாக வளர்ந்திருக்கிறது. 'கனடாவில் விடுமுறை பெறுவது கடினம். ஆதலால் வரும் விடுமுறையில் நாம் திருமணம் செய்துகொள்ளலாம்' என்று பையன் சொல்ல, 'சரி, அப்படியே செய்யலாம்!' எனத் தடபுடலாக திருமணத்திற்கான பணிகளைத் தொடங்குகிறார்கள் பெண் வீட்டார்.

உற்றார் உறவினரிடம் சொல்லியாயிற்று. மண்டபத்துக்கு முன்பணம் கொடுத்தாயிற்று. வீடு புதுப்பிக்கப்படுகிறது. நகைகள், உடைகள் வாங்கப்படுகின்றன. இதற்குள், நான் உங்கள் மகளுக்கு வாங்கிய வைர நெக்லஸ் மாமா, அத்தைக்கு ஒரு கனடா பட்டுப் புடவை, உங்களுக்கு ஒரு தங்க வாட்ச் என மாப்பிள்ளைப் பையன் புகைப்படங்களை வாட்ஸப்பில் அனுப்ப, தங்களுக்குக் கிடைக்கப்போகும் தங்க மகனை எண்ணி நெகிழ்ந்து மகிழ்ந்துபோகிறது குடும்பம்.

மாப்பிளை இந்தியா வரும் நாளும் வந்தது. வானூர்தி ஏறிவிட்டோம் என்று கனடாவில் இருந்து வந்த கடைசி அழைப்பிற்குப் பிறகு ஓர் அழைப்பும் இல்லை. இந்நேரம் போன் வந்திருக்க வேண்டுமே, என்ன ஆச்சோ என்று பதைபதைப்புடன் பெண் வீட்டார் காத்திருக்க, ஓர் அழைப்பு வருகிறது. 'வணக்கம்! நாங்கள் வானூர்தி சுங்கச் சோதனைப் பிரிவில் இருந்து பேசுகிறோம். வைர நெக்லஸ், அனுமதிக்கப்பபட்ட தொகைக்கு அதிகமாய் கனேடிய டொலர்கள் கொண்டுவந்தது எனச் சில பிரிவுகளில் உங்கள் மாப் பிள்ளையைக் கைதுசெய்திருக்கிறோம். இந்தியாவில் அவர் உங்களை மட்டுமே தெரியும் என்கிறார். அதனால் தான் உங்களுக்கு அழைத்தோம்' என்ற தகவலைக் கேட்டு அதிர்ந்து போகிறது குடும்பம்.

என்ன செய்வது எது செய்வது எனத் தெரியாமல் ஒவ்வொருவரும் பதறி நிற்கிறார்கள். மாப்பிள்ளையை விடுவிக்கச் சொல்லி சுங்க அதிகாரியிடம் போனிலேயே கெஞ்ச தொடங்குகிறார்கள்.

சார்! மகளின் கலியாணம்! ஏதாவது பார்த்துச் செய்யுங்க ப்ளீஸ்!' என லஞ்ச பேரத்தை மறைமுகமாகத் தொடங்குகிறார்கள். அதற்குள் தங்க மகன் மாப்பிள்ளை சுங்க அதிகாரியின் போனைப் பிடிங்கி, 'இதெல்லாம் வேண்டாம் அங்கிள், சட்டபூர்வமாக இதை எதிர்கொள்வோம்' என நேர்மை பேச, 'அதெல்லாம் வேண்டாம் மாப்பிள்ளை! நாங்க பார்க்கிறோம்' என வங்கியை நோக்கி விரைகிறார் அப்பா. தன் மகள் திருமணத்திற்காக சேர்த்து வைத்த தன் வாழ்நாள் சேமிப்பை எடுக்கிறார். சுங்க அதிகாரி சொன்ன வங்கி எண்ணிற்கு லட்சங்களில் பணத்தைச் செலுத்துகிறார். மாப்பிள்ளையை விட்டுவிடுங்கள் எனக் கெஞ்சுகிறார்.

'பணம் வந்து சேர்ந்துவிட்டது, அவர் பத்திரமாக வீடு வருவார்' என சுங்க அதிகாரிகள் அழைப்பைத் துண்டிக்கிறார்கள். அவ்வளவுதான்! கடைசி அழைப்பிற்குப் பிறகு மாப்பிளை, அவரது அம்மா என எந்த எண்ணும் உபயோகத்தில் இல்லை. யாரும் வரவும் இல்லை.

தாங்கள் குடும்பம் மொத்தமாக ஏமாந்துவிட்டோம் எனப் புரிவதற்கே பெண் வீட்டாருக்கு ஒரு வார காலம் தேவைப்பட்டிருக்கிறது. அப்படி ஒரு நூதன உளவியல் மோசடி இது.

**பெண்ணுக்கும் பையனுக்கும் இணையத்தில் தொடங்கிய உரையாடல், பிறகு இதயத்தில் நுழைந்து, புகைப்படங்கள், ஸ்மைலிகள், வீடியோ அழைப்புகள் எனக் காதலாக வளர்ந்திருக்கிறது.**

### இது எப்படி நிகழ்கிறது?

திருமண வலைதளங்களும் ஒரு வித சமூக வலைதளமே! போலி ஆவணங்களைக் கொண்டு யார் வேண்டுமானாலும் கணக்கைத் தொடங்கலாம். அயல் தேசத்திலிருந்து அழைப்பது போன்ற ஏமாற்று வேலையை, இன்றைய காலத்தில் சிறுவர்கள்கூடச் செய்துவிடுகிறார்கள். இணையத்தில் ஐபி காலிங், அழைப்பு அட்டைகள் எனப் பல நூதனங்கள் இருக்கின்றன.

நான் இங்கு வேலை செய்கிறேன்! இந்த நாட்டில் இருக்கிறேன்! இவ்வளவு சம்பளம் என அடித்துவிடலாம். சோதனை எல்லாம் இல்லை.

ஒரு நிமிடம் பொறுங்கள்! அப்படி எல்லாம் ஆவணத்தைச் சோதிக்காமல் இந்த வலைத்தளங்கள் யாரையும் அனுமதிப்பதில்லை. இதற்காகவே ஒரு தனிக் கட்டணம் வசூலித்து, ஆவணங்களை சோதித்து, 'வெரிஃபைடு' (Verified) எனும் சோதனை முத்திரையானது கணக்கில் வராதா என்றுதானே கேட்கிறீர்கள்?

ஒன்றைப் புரிந்துகொள்ளுங்கள், இவர்கள் பயன்படுத்தும் ஆவண

ஐயங்கொண்டான் சுவாமிகள்

62

# எமையறிதல்



கிடைக்குமென்று நம்பியிருந்தவை கிடைக்காதபோது எழுகிற மன ஆதங்கம் கொடுப்போனையும் பெறுவோனையும் உளரீதியாக பாதிக்கிறது என்பதைக் கவனத்தில் கொள்வது அவசியமானது. கொடுத்தலாயினும் பெறுதலாயினும் அவற்றுக்கு ஒரு எல்லைப் பிரிகோடு சேவையென்கிற விடயத்துக்கும் அவசியமானதேயாகும். அடுத்து உயர்ச்சி என்பதற்கூடாக பெயர்பெறல் என்பதற்கான முனைவுகள் பற்றி என்ன எண்ணத்தோன்றுகிறது?

உயர்ச்சி என்பதற்கான அளவீடு எது? எவ்வளவு உயரத்தை எட்டுதல் உயர்ச்சி? உயரம் பாய்வதில் அளவிட்டு முதலாமிடம் இரண்டாமிடமென வழங்கப்படும் தீர்ப்புப் போன்றதா? குறித்த போட்டியில் குறித்த நியமங்களுக்கமைவாக அளவிடப்படும் பதக்கமும் நிலையானதல்ல. நாம் அதிக உயரத்தைத் தாண்டினார் எனக் குறிப்பிடும் நபரைவிடவும் அதிக திறமைசாலிகள் இருந்திருக்க வாய்ப்புகள் இருக்கின்றன. போட்டியில் கலந்துகொண்டாலும் குறித்த அந்தவேளையில் சந்தர்ப்பம் நழுவியவர்களோ போட்டிக்கு விண்ணப்பிக்காதோரோ இருக்க வாய்ப்புகள் அதிகமிருக்கின்றன என்பதை கவனத்தில் கொள்வது அவசியமானது.

இவ்வாறான நிலையறுந்து அலையும் ஒரு பிரிகோட்டின் வழி தீர்மானிக்கப்படுகிற உயர்ச்சி என்பது கேள்விக்குரியது மட்டுமல்ல கேலிக்குமுரியதே. இங்கு நான் ஏனையோரைவிட கல்வியால், பட்டங்களால், பதவிகளால், செல்வத்தால் என நாம் எடுத்துக்கொண்ட விடயங்களில் ஒப்பீட்டிற்காக நாம் எடுத்துக் கொண்ட ஒரு குறித்த தொகுதியில் தான் உயர்வாக இருக்கிறோம். மாறிக் கொண்டேயிருக்கிற உலக நடப்பில் நாம் எடுத்துக்கொண்ட குறித்த தொகுதியைச் சேர்ந்த ஒருவனோ பலரோ உம்மைவிடவும் உயர்வடைவதற்கான வாய்ப்புகள் உள்ளனவல்லவா?

எப்படி எமது நிலையே மிக உயர்வானதென எடுத்துக்கொண்டு பெருமைப்பட முடியும்? பெருமை எதிர் பெருமையிழப்பு என்கிற யதார்த்தமான நிலைமை எப்படியும் மனதுள் உறுத்திக் கொண்டேயிருக்கும். உயர்வடையவேண்டும் என்பதற்கான உழைப்பைவிடவும் (நியாயமானதாகவோ அநியாயமானதாகவோ இருக்கலாம்) உயர்வடைந்துவிட்டோம் என்று பெருமையடைகிற வேளையில் அடைந்துள்ள நிலையைத் தக்கவைத்தல் என்பதற்காக அதிகமாக உழைக்கவேண்டியே ஏற்படுகிறது. அசுரத்தனமான உழைப்பினுள் வாழ்க்கை கட்டுப்பட்டுக்கொள்கிறது.

உழைத்தல் என்பதிலேற்படுகிற அதீதமான ஈடுபாடு ஒருவிதமான போதை நிலையாக எம்முள் உருவாகிக்கொள்கிறது. அது தேவைகள் என்பதைவிட ஆசைகளையே அதிகமதிகம் அல்லது முழுதாக ஏற்றுக்கொள்கிறது. உழைத்தல் என்பதற்கான அடிப்படை நிலைமைகளை விடவும் அடைதல் என்பதிலேயே குறியாக அலையத்தொடங்குகிறது. அலைவுறல் என்பது எப்போதாவது ஆறுதலைத் தரமுடியுமா?

உயர்தல் என்பதற்கான உழைப்பின் அதீதமான முயற்சிகள் உடல் - உளத் தேவைகளைத் தூரவாக்குகிறது. உணவு மற்றும் ஓய்வு என்பவற்றினது அவசியம் உணரப்பட முடியாதவாறு ஓடத்தொடங்குகிறோம். ஓட்டத்தை நிறுத்துவதற்கான இடம் எது? அவனை முந்துதல், இவனை முந்துதல் என இலக்குகள் மாறிக்கொண்டே (எம்முன்னே நகர்ந்தபடியே) இருக்கின்றன என்பதை கவனிக்கக்கூட நேரமற்று இயங்கத் தொடங்குகிறோம். நிறுத்தமுடியாது இயங்கியபடியே இருக்கவேண்டிய கட்டாயம் தனாக எழுகிறது.

இயங்கிக்கொண்டே இருத்தல் என்பதற்கும் எந்தளவிற்கு என்பதை தீர்மானிக்கும் வலு எம்மிடமில்லை என்பதை கவனத்தில் கொள்வதில்லை என்பது முக்கியமானது. ஏனெனில் எமது குறித்த இயக்கம் எமக்கான எல்லைகளைக் கொண்டிருக்கவில்லை. அது நாம் குறித்திருக்கும் நகரும் பிரிகோடாகிய நாம் எடுத்துக்கொண்ட ஒப்பீடுகளின் நிலையிலேயே தங்கியுள்ளது. அது முன்நகர்வதாகவோ பின்தொடர்வதாகவோ இருக்கலாம்.

நிலையற்ற எல்லைப் பிரிகோட்டை அடைதல் என்பதும் அதையே நிலையாகப் பேணுதல் என்பதும் சாத்தியமானதொன்றா? அப்படியெனில் இப்போது உயர்ச்சி என்பது எது என்கிற கேள்வியும் அது தேவைதானா என்கிற கேள்வியும் எழுகிறதல்லவா? சிந்திப்போம்.

---

## சைபர் வில்லன்கள்...

சோதனைத் தொழில்நுட்பம், ஆவணம் உண்மையானதா எனப் பார்க்குமே தவிர, ஆவணத்தில் இருக்கும் விவரம் உண்மையானதா என விசாரிக்காது. அதை நாம்தான் செய்ய வேண்டும்.

நம்மில் எத்தனை பேர் இணையத்தில் ஒருவர் குறிப்பிடும் தகவல்கள் உண்மைதானா எனக் கேள்வி எழுப்பியிருக்கிறோம். வம்பு சண்டை, வாட்ஸப் வதந்தி என்றால்கூட சரி, பெண்ணின் மண வாழ்க்கைக்கும் சோதிக்காமல், கேள்வி எழுப்பாமல் நம்புவேன் என்றால் எப்படி?

போலி பிடிஃஎப் ஆவணங்களை உருவாக்குவது இன்றைய தொழில்நுட்பத்தில் மிக எளிது. மிகச் சில விநாடிகளில் போலிகளை உருவாக்கிவிட முடியும். உண்மையைவிட போலிதான் இன்னும் நம்பகமானதாகத் தெரியும். நமது போனில் இருக்கும் செயலிகளைக் கொண்டே நகை, செல்போன், இன்ன பிற பொருட்கள் வாங்கிய ரசீது, பணி நியமனக் கடிதம், ஜாதகம் என நிமிடங்களில் போலிகளை உருவாக்க முடியும்.

இதுபோன்ற ஆவணங்களைக் கொண்டு கணக்கைத் தொடங்கும் மோசடி கும்பல், முதலில் இலக்கைத் தீர்மானிக்கிறது. பெண்கள்தான் கணக்குகளை நிர்வகிப்பார்கள் என்பதைத் தெரிந்துகொண்டு, மிகப் பணிவாக ஆனால், சரளமான ஆங்கிலத்தில் அவர்களிடம் உரையாடலைத் தொடங்கி, அவர்கள் மூலம் அவர்களது பெற்றோரின் நம்பிக்கையைப் பெற்று மோசடியை நிகழ்த்துகிறார்கள்.

இவர்கள் வெளிநாடுகளில் எல்லாம் இருப்பதில்லை. இங்கேயே ஓர் அறையில் இருந்துகொண்டே வாத்திகனில் இருப்பதுபோல கதை காட்டுவார்கள். இவர்களது அம்மா, சுங்க அதிகாரிபோல நடித்தவன் எல்லாமே இவர்கள் குழுதான். இம்மோசடிக்கான முதலீடு என்பது இரண்டு மடிக்கணினிகள், சில சிம் கார்டுகள், போலி ஆவணங்கள், சரளமான ஆங்கிலம், இவ்வளவுதான். போலி ஆவணங்களைக் கொண்டே வங்கி கணக்குகளையும் தொடங்கியிருப்பார்கள். பணம் அனுப்பிய பிறகு தேடிப் பிடிப்பதும் கடினம்.

### இந்த மோசடிகளை எப்படி தவிர்ப்பது?

திருமணத் தளங்கள் நிச்சயமாக ஒரு தொழில்நுட்ப வரம். அதற்காக அதை மட்டுமே முழுமையாக நம்புதல் கூடாது.

திருமணத் தளங்களில் இருக்கும் அனைத்தையும் சந்தேகிக்க வேண்டும். தவறே இல்லை. கேள்விகளை எழுப்புங்கள். தகவல்களை முழுமையாக உறுதி செய்துகொள்ளுங்கள். இணையத்தை மட்டும் முழுதாக நம்பாதீர்கள். சம்பந்தப்பட்ட நபர் அங்குதான் பணி செய்கிறாரா என நண்பர்கள் மூலம் உறுதி செய்துகொள்ளுங்கள். ஏன் வீடியோ அழைப்புகளில் அறைக்குள் இருந்தே பேசுகிறீர்கள் எனக் கேள்வி எழுப்புங்கள்.

மேற்சொன்ன விவரம் இம்மோசடியின் ஒரு வழிதான். இன்னும் பல வழிகளில் இதே மோசடி நிகழ்கிறது. அவற்றில் சிலவற்றைக் காண்போம்.

நான் திருமணத்திற்குப் பிறகு சொந்த நாட்டிற்கே திரும்ப விரும்புகிறேன். எனது வெளிநாட்டுப் பணத்தை உன் கணக்கிற்கு மாற்ற சில நடைமுறைகள் உள்ளன. அதற்கு இந்தியப் பணமாக சில லட்சங்கள் தேவை. திருப்பித் தந்துவிடுகிறேன்.

எனது நிறுவனத்தில் என்னை நீக்கிவிட்டார்கள். உனக்கும் சேர்த்து க்ரீன் கார்டு உடனடியாக விண்ணப்பிக்கவேண்டும். இப்போதைக்கு சமாளிக்க சில லட்சங்கள் தேவை. திருப்பித் தந்துவிடுகிறேன்.

எனது அம்மா சாலை விபத்தில் அடிபட்டு மருத்துவமனையில் இருக்கிறார். எனது வங்கிக் கணக்கு தற்காலிகமாக முடக்கப்பட்டுள்ளது. சிகிச்சைக்குப் பணம் தேவை. நண்பர் கணக்கிற்கு சில லட்சங்கள் அனுப்பவும். திருப்பித் தந்துவிடுகிறேன்.

காரணங்கள் இன்னும் வேறுபடலாம். ஆனால், பணம் என்று கேட்டால் உஷாராகிவிடுங்கள். அந்த நேரப் பதைபதைப்பு உங்களை யோசிக்கவிடாமல் செய்யக்கூடும். பெண்ணின் வாழ்வு ஆயிற்றே, கேட்டதைக் கொடுத்துவிடுவோம் என்கிற மன அழுத்தம் உங்களை வங்கியை நோக்கி ஓடச் செய்யும், உங்கள் வாழ்நாள் சேமிப்பை நொடியில் நீங்கள் இழக்கக்கூடும். அது போன்ற நேரங்களில் இக்கட்டுரை உங்கள் நினைவில் வரட்டும். இதில் குறிப்பிட்டுள்ளதைப் போல இருந்துவிட்டால் என்ன செய்வது எனச் சந்தேகியுங்கள். பணத்தை இழந்தால் கூட மீண்டும் சம்பாதித்துக்கொள்ளலாம். ஆனால், ஒருவன் நம் குடும்பம் மொத்தத்தையும் ஏமாற்றிவிட்டான் என்கிற மன நடுக்கமும் வேதனையும் காலத்திற்கும் இருக்கும்.

ஆகவே, இணைய எதையும் சும்மா சந்தேகியுங்கள் நண்பர்களே. அது போதும்! ■



ஜி. கார்ல் மார்க்ஸ்

# கேன்வாஸ்

அந்தத் தெருமுனையில் மிகவும் இருட்டாக இருந்தது. அங்கிருந்து பார்க்கையில் தெருவின் மத்தியில் மட்டும் மஞ்சளாகக் கொஞ்சம் வெளிச்சம் இருந்தது. தூசிகளை ஊடுருவியபடி தரையை நோக்கிக் கசியும் மங்கலான ஒளி மீதி இடங்களைப் புராதன காலத்தை நோக்கி நகர்த்திவிட்டிருந்தது. சாலையில் எப்போதாவது செல்லும் லாரிகளின் முகப்பு வெளிச்சம் தவிர வேறு அசைவில்லை. கனரக வாகனங்கள் செல்லும்போது தெரு இலேசாக முனகுவது போல இருக்கிறது. அவ்வளவு அலுப்பு. வாலைப்போல நீளும் தெரு தனது தலையைத் தூக்கி, எரிந்துகொண்டிருந்த மற்ற தெருவிளக்குகளை ஊதி அணைத்திருக்க வேண்டும். இப்படியான கற்பனை, தெருமுனையில் அந்தத் தெருவையும் பிரதான சாலையையும் பிரித்தபடி ஓடிக்கொண்டிருந்த வாய்க்கால் மதுகில் குந்தியிருந்த முரளிதரனைச் சிலிர்க்கச் செய்தது. சாலைக்கு இணையாக அதன் ஓரத்தில் ஓடிக்கொண்டிருக்கும் வாய்க்கால், அதோ தூரத்தில் பனி மூட்டமாகத் தெரியும் மலையில் எங்கிருந்தோ தொடங்குகிறது. ஒவ்வொரு தெருவின் முனையிலும் சிறிய சிமெண்ட் பாலமும் அதன் இருபுறமும் முட்டி வரை உயரமுள்ள அதைவிடச் சிறிய இரண்டு மதகுகளும் இருந்தன. அவற்றில் ஒன்றில்தான் முரளிதரன் உட்கார்ந்திருந்தான்.

எரியும் அந்த ஒற்றை விளக்கு ஒரே நேரத்தில் ஆசுவாசமாகவும் தொந்தரவாகவும் இருந்தது. அதுவும் அணைந்துவிட்டால் அப்பகுதி முழுக்கவும் இருட்டுதான். சில குடிசைகளும் தென்பட்டன. வீடுகளின் கட்டுமானத்திற்காகப் போடப்பட்ட தற்காலிகக் குடில்கள். மற்றவை அனைத்தும் வசதியான பெரிய வீடுகளாக இருந்தன. வீடுகளின் உள்ளே இருந்து வெளிச்சம் வெளியே கசியவில்லை. எதற்காக மதில் சுவர்களில் இருக்கும் விளக்குகளைக்கூட அணைத்து வைத்துவிடுகிறார்கள்? வீட்டின் உட்புறம் ஒரு இரவு விளக்கைக்கூட ஒளிரச் செய்யமாட்டார்களா என்ன? விளக்குகள் எரியக்கூடும். சன்னல்களை இறுக்கமாக மூடியிருப்பதால் வெளிச்சம் வெளியேறவில்லை. போதாததற்கு சன்னலில் தொங்கும் திரைச்சீலைகள் ஒவ்வொரு வீட்டையும் தனித் தனி தீவுகளாக்கி வைத்திருக்கின்றன.

அந்த மதகில் வந்து குந்துவதற்கு முன்பு தெருவின் கடைசிவரை நடந்து போய்விட்டு வந்திருந்தான் முரளிதரன். தெருக்கடைசியில் அமர இடம் இருந்திருந்தால் அங்கேயே இருந்திருப்பான். இங்கு அவ்வப்போது கிளம்பும் வாகன இரைச்சலின் தொந்தரவிலிருந்து தற்காத்துக் கொண்டிருக்கலாம். ஆனால் இந்த இடர்பாடு மட்டும்தான் புற உலகோடு இவனைப் பிணைத்திருக்கும் கண்ணியாக இருக்கிறது. இல்லையென்றால் அந்தப் புராதனத்தில் இவனும் ஒரு சுவர் சித்திரமாகப் பதிந்து போயிருக்கக்கூடும். அந்தத் தெருவே ஒரு பெரிய கேன்வாஸில் வரையப்பட்ட ஓவியம் போலத்தான் இருக்கிறது. கரிய நிழல்கள் அந்த ஓவியத்தை அமானுஷ்யமாக மாற்றியிருந்தன. அந்த வண்ணங்களுக்கு மத்தியில் நிறைய உருவங்கள் மறைத்து வைக்கப்பட்டிருப்பது போலவும், இந்தக் கட்டிடங்கள் அவற்றின் மீது போர்த்தப்பட்டிருக்கும் பனிப் போர்வை போலவும் இருந்தன. தூரத்தில் தெரியும் மலையின் உட்புறம் அலையும் விலங்குகள் போல இங்கு சித்திரங்கள் தூங்கிக்கொண்டிருக்கின்றனவா? வீடுகளின் உள்ளே ஆட்கள் இருக்கிறார்களா? ஒளியைப் போலவே ஒலியும் கசியாமல் வீட்டின் சுவர்கள் அமைதியில் உறைந்திருந்தன.

கிட்டத்தட்ட இரண்டு இரவும் இரண்டு பகலும் பயணம்செய்து மூன்றாவது இரவின் நடுசாமத்தில் இந்தப் பகுதியைக் கடந்துகொண்டிருந்தான் முரளிதரன். லாரி ஓட்டுநருடன் நிகழ்ந்த சிறிய உரையாடல், இந்த மதகில் இப்போது குந்த வைத்திருக்கிறது.

'நீ இறங்கிக்க தம்பி, இதுக்கு மேல உன்னை கூட்டிட்டு போகமுடியாது' என்று சன்னமான குரலில் சொல்லிக்கொண்டே வண்டியை ஓரம் கட்டினான் ஓட்டுநர்.

'என்னண்ணே இங்க இறங்க சொல்றீங்க, இது எந்த ஊர்னே தெரியல...'

'தெரிஞ்சா மட்டும்...?'

'ரொம்ப குளிருதுண்ணே...!'

சில விநாடிகள் அமைதி. லாரி ஓட்டுநர் ஸ்டியரிங்கைப் பிடித்தபடி இறுக்கமாகக் காத்திருந்தான்.

'இறங்கு...'

இப்போது மெல்லிய உறுமல் போல வெளிப்பட்டது அவனது குரல்.

முரளிதரன் கதவைத் திறந்து, உடலைத் திருப்பியபடி, பொந்தைப் போல இருந்த படியில் கால் வைத்துக் கீழே இறங்கினான். இறங்கி உறுதியாக நிற்பதற்குள் லாரி கிளம்பிவிட்டது. கையில் வைத்திருந்த பையைத் தலைக்கு மேலே இருந்த படுக்கையில் வைத்திருந்ததும், அதை எடுக்க மறந்ததும் வண்டி கண்ணைவிட்டு மறைந்த பிறகுதான் ஞாபகத்துக்கு வந்தது. அதில் கொஞ்சம் பணம் இருந்தது. சில சான்றிதழ்கள் இருந்தன. இரண்டு செட் மாற்று உடைகள் இருந்தன. பல் துலக்கும் ஒரு பிரஷும் பற்பசையும் இருந்தது. பிறகு இன்னும் பிரிக்காத ஒரு கடிதம் இருந்தது.

இறங்கி நின்ற இடம் வெட்டவெளியாக இருந்தது. அப்படியே உட்கார்ந்து ஒன்றுக்கிருக்கையில் சாலையில் வந்த வாகனத்தின் ஒளியின் வீச்சில்தான் அது வயல்வெளி என்று தெரிந்தது. சாலையைக் கடந்து இந்தப் பக்கம் வரவும் இங்கு ஒரு தெரு இருப்பதும் அது மிகவும் நீண்டு உட்பக்கமாய் போவதும் தெரிந்தது. மதகைக் கடந்து நடந்தான்.


எங்கு போகிறோம் என்று தோன்றாமல் இல்லை. குறிப்பாகச் செய்ய எதுவுமில்லாதபோது நடப்பதற்கோ நிற்பதற்கோ இலக்கில்லை. பொறுமையாக நடந்து ஒவ்வொரு வீடாகப் பார்த்துக்கொண்டே போனான். ஐம்பதிற்கும் மேற்பட்ட வீடுகளைக் கடந்தபோது தெரு முடிந்தது. பிறகு நீண்ட வயல்வெளியாக இருந்தது. வெளிச்சம் இல்லாவிட்டாலும், இறங்கிய இடத்தில் உணர்ந்ததைப் போன்ற அதே வாசனை, இதுவும் வயலாகத்தான் இருக்கும் என்ற எண்ணத்தை ஏற்படுத்தியது. திரும்பி மீண்டும் நடந்து தெருவின் மத்தியில் எரிந்துகொண்டிருந்த ஒற்றை விளக்கு வெளிச்சத்தின் அடியில் கொஞ்ச நேரம் நின்றான். காலுக்கடியில் நீண்ட நிழல் விழுந்து இருட்டை நோக்கி நீண்டது. மண்டை சப்பட்டையாக நவீன ஓவியம் போலத் தெருவில் பதிந்தது. அந்த விளக்கு தெருவுக்கு இடதுபுறமாக இருந்தது. அதை ஒட்டி இருந்த வீட்டின் மதிற்சுவரில் பச்சை வர்ணம் பூசப்பட்டிருந்தது. பச்சைதானே அது? இந்த மஞ்சள் ஒளியில் நீலம் போலவும் கருப்பு போலவும் மாறி மாறித் தோற்றமளிக்கிறது. அதற்கு எதிர்ப்புற வீட்டில் மஞ்சள் வண்ண காம்பவுண்ட் சோம்பலாக ஒளிர்ந்தது. அண்டை வீடுகள் பாதி வெளியிலும் மீதி தண்ணீரிலுமாக அமிழ்த்தி வைக்கப்பட்டது போல இருந்தன. அதன் நடுவேதான் இவனது வளைந்த நிழல் தரையில் நெளிந்துகொண்டிருந்தது. அதை உற்று நோக்கியபடி கொஞ்ச நேரம் அங்கேயே நின்றான்.

சில கணங்கள் அந்தத் தெருவின் பகுதி போலத் தானும் இருப்பதாகத் தோன்றியது. மனித நடமாட்டமே இல்லை. விசித்திரமாக அந்தப் பிராந்தியத்தில் நாய்கள்கூட இல்லை. எல்லாக் கதவுகளும் கொண்டி போட்டு அடைக்கப்பட்டிருப்பதால், அவை இந்தத் தெருவைத் துறந்து புதிய கட்டுமானங்கள் நடக்கும் கட்டிடத்தின் உள்ளே போய் ஏதாவது பலகையில் உடலைச் சுருட்டிக்கொண்டு படுத்திருக்கக்கூடும். திடீரென்று, கைவிடப்பட்ட வெறும் கட்டிடங்கள் மட்டும் இருக்கும் இடத்தில் நின்றுகொண்டிருக்கிறோம் எனும் நினைப்பு வந்தது. தலையை உதறினான். இவனது நிழலில் அசைவே இல்லை. சிறிய உதறல்களுக்கு நிழல் வினைபுரிவதில்லை. காலின் அடியில் இருக்கும் நிழல் கொஞ்சமாவது அசைய வேண்டும் என்றால், உடலை அந்த இடத்திலிருந்து நகர்த்த வேண்டியிருக்கிறது. இரண்டு பங்கு அசைவையே ஒரு பங்கு நிழல் எதிரொலிக்கிறது. சோர்வாக இருந்தது. அண்ணாந்து, தெருவின் இரண்டு புறமும் அந்த விளக்கின் ஒளியில் தெரியும் வீடுகளின் மாடிகளைப் பார்த்தான். பிரமாண்டமான வீடுகள்தான். தரையில் படர்ந்திருந்த அளவுக்கு மாடிகளின் முகப்பைத் தெருவிளக்கின் ஒளி நிறைக்கவில்லை. குறிப்பிட்ட இரண்டு வீடுகளில் ஒவ்வொரு அறை மட்டும் கண்ணுக்குத் தெரிந்தது. அந்த அறைகளில் கண்ணாடிச் சன்னல்கள் இருந்தன. அதன் மீது தெருவிளக்கின் ஒளி படிவதால், அவ்வறைகள் கண்ணுக்குத் தெரிகின்றன.

அந்தப் பிராந்தியத்தில் வேறு எதுவுமே இல்லாதது போல, அவ்விரண்டு அறைகளுக்கு மத்தியில் அந்த விளக்கு வெளிச்சத்தின் மத்தியில் தான் மட்டுமே நிற்பது போல, அந்த அறைகள் தனது தலைக்கு மேலே இருத்தி வைக்கப்பட்டிருப்பது போலத் தோன்றியது. குனிந்து பார்க்கையில் இவனது நிழல் மட்டுமே கால்களைத் தரையோடு பிணைத்திருக்கிறது.

அமானுஷ்யமாக இருக்கிறது. கனவு போல இருக்கிறது.

தூரத்தில் தெரியும் சாலையில் இப்போது வாகனங்கள் எதுவும் செல்லவில்லை. ஒளி இல்லை. ஒலி இல்லை. நாய்களின் மூச்சிரைப்பில்லை. ரீங்காரமிடும் வண்டுகள் இல்லை. குளிர்கிறது. மேலிருந்து மஞ்சள் ஒளி தலைமீது கசிகிறது. தான் ஒரு இலையைப் போல எடையற்று மரத்தடியில் கிடப்பதான எண்ணம் வந்தபோது, இந்த நிழல் தொலைந்தால் தேவலை என்று இருந்தது. நிழல் கனத்தது. பிசினைப் போல நிலத்தோடு கால்களைப் பிணைக்கிறது. இரும்புக் குண்டுகளைப் போல அவை கனமாக இருக்கின்றன. நிழலை உதறுவதற்கு வாய்ப்பில்லை, அந்நிழலை அப்புறப்படுத்த வேண்டும்



என்றால் தலைக்கு மேலே தெரியும் இந்த மஞ்சள் ஒளி, இரண்டு அறைகளின் கண்ணாடிப் பிரதிபலிப்பு எல்லாவற்றையும் இழக்க வேண்டியிருக்கும். யோசித்துக்கொண்டிருக்கையில் திடீரென்று நிழல் மறைந்தது. இரும்புக் குண்டுகளின் பளு குறைந்துவிட்டது. முழு இருட்டு கவிந்தது. தெரு விளக்கு அணைந்து போயிருந்தது. மிதப்பது போல இருக்கிறது. அதே சமயம், பற்றிக்கொண்டிருந்த பிடி சடாரென்று நழுவியது போலவும், அபூர்வமான ஒன்றை இழந்துவிட்டது போலவும் உடல் நடுங்கியது.

தலையை உயர்த்திப் பார்த்தான். மாடியில் தெரிந்த அறைகளை இப்போது காணவில்லை. மறைந்துபோன ஒளி அவ்வறைகளைத் தன்னுடன் எடுத்துப்போயிருந்தது. தலையைத் தாழ்த்துவதற்கு மனமில்லாமல் அண்ணாந்தபடியே நின்றுகொண்டிருந்தான். அப்போதுதான் ஒரு அறை மெல்ல உருவாவது போலக் கண்ணுக்குப் புலப்படத் தொடங்கியது. சிறிய விளக்கு வெளிச்சம். உள்ளிருந்து யாரோ விளக்கைப் போடுகிறார்கள். சன்னல் கண்ணாடிகள் ஒளிர்ந்தன. துண்டு துண்டான நிறைய வண்ணங்கள் இருந்தன அந்தக் கண்ணாடியில். சன்னலின் ஒரு கதவு மட்டும் அசைகிறது. திரைச்சீலைக்குப் பின்னாலிருந்து ஒரு கரம் சன்னல் கதவைத் தள்ளுவது தெரிந்தது. திரைக்குப் பின்னே நிழலாக ஓர் உருவம். ஆனால் அவ்வுருவம் திரையை முழுவதுமாக விலக்கவில்லை. அக்காட்சி வரைந்த ஓவியத்தின் மீது வேறொரு வண்ணத்தை வைத்து ஒற்றியது போல இருந்தது. அறையிலிருந்து கசிந்த ஒளி தெருவை எட்டியதும், தெருவுக்கும் சன்னலுக்கும் தொடர்பு ஏற்பட்டது போல இருந்தது. உள்ளிருக்கும் ஆள் அந்த ஒளிக்கற்றையை ஒரு கயிறாகப் பாவித்து, கீழே கிடக்கும் வீதியைச் சன்னலை நோக்கி இழுப்பது போலவும் இருந்தது. கேன்வாஸாகத் தோற்றம் கொள்ளும் அந்தத் தெருவின் வரையப்பட்ட ஓவியம் எழுந்து நிற்பது போல ஓர் ஆள் அங்கு நிற்பது சன்னல் உருவத்திற்குத் தெரிந்திருக்க வேண்டும் என்று நினைத்தான் முரளிதரன்.

கண்களைக் குவித்து அந்தப் புதிய ஒளிச் சூழலுக்குப் பழக முயன்றான். குழப்பமாக இருந்தது. இப்போது அந்த ஓவியத்தின் பாத்திரங்கள் இடம் மாறியிருந்தன. குலைந்து போகாவிட்டாலும் அவை அடுக்கப்பட்டிருந்த விதத்தில் ஒரு சிறிய மாற்றம் இருக்கிறது. இந்தச் சன்னல் வெளிச்சம் ஓவியத்துக்குப் புதிய அர்த்தத்தைத் தருகிறது. சன்னல் விளக்கொளி இல்லாமல் ஆகவேண்டும் என்று நினைத்தான் முரளிதரன். நிலைபெற்றுவிட்ட ஓவியத்தின் உள்ளே வந்து ஒரு புதிய அர்த்தத்தை அது பதிய வைக்கிறது. தொந்தரவாக இருக்கிறது. ஒரே நேரத்தில் பல வண்ணங்கள் மாறி மாறி ஓவியத்தின் தன்மையைக் கலைத்துக் கலைத்து அடுக்குகின்றன. அதன் சாத்தியங்களை எல்லையற்று பெருகச் செய்வதால், அவை ஒவ்வொன்றையும் பின்பற்றிச் செல்ல முடியவில்லை. பல்வேறு வண்ணப்பூக்கள் கொண்ட பெரிய தோட்டத்தில், நிறைய வண்ணத்துப்பூச்சிகள் பெரிய பெரிய சிறகுகளுடன் பறந்து பூக்களில் மாறி மாறி அமர்வது போல. வானில் நிறைய நட்சத்திரங்கள் இருக்கின்றன. விசித்திரமான சூழலில் வெளிச்சமும் இருந்தால் எப்படி ஏகாந்தக் குழப்பம் வருமோ அப்படி இருந்தது முரளிதரனுக்கு. ஒவ்வொரு வண்ணத்துப் பூச்சியையும் ஒரு தனித்த ஓவியமாக, பிறகு அவற்றையொரு ஒற்றை ஓவியமாக உருவகிக்கையில் வானம் ஒரு பெரிய கேன்வாசைப் போல உருக்கொண்டது. அவ்வளவு வண்ணங்களையும் தலையில் ஏற்றுகையில் மண்டை கனத்தது. வண்ணங்களின் எடை கூடி தலையை அமுழ்த்தின. அவற்றின் சுமையைத் தாளாமுடியாமல் முரளிதரனுக்குத் தள்ளாடியது.

**சன்னலின் ஒரு கதவு மட்டும் அசைகிறது. திரைச்சீலைக்குப் பின்னாலிருந்து ஒரு கரம் சன்னல் கதவைத் தள்ளுவது தெரிந்தது. திரைக்குப் பின்னே நிழலாக ஓர் உருவம்.**

இப்போது சாலை விளக்குக்கு உயிர் வந்துவிட்டது. இவனது நிழல் மீண்டும் அதே அளவில் சாலையில் படர்கிறது. அண்ணாந்து பார்த்தான். தெரு விளக்கின் ஒளி வரட்டும் என்று காத்திருந்தது போல அந்தக் கரம் நீண்டு சன்னல் கதவை மூடிக்கொண்டது. அம்மஞ்சள் வெளிச்சத்தில் அந்தக் கைகளை முரளிதரன் பார்த்தான். பெண்ணின் கைகள்தான். வளையல்கள் ஒளிர்ந்தன. சில வினாடிகளில் கதவு மூடப்பட்டு விளக்கு அணைக்கப்பட்டது. சன்னலின் வெளிப்புறக் கண்ணாடி மங்கலான வெள்ளையில் ஒளிரத் தொடங்கியிருந்தது. முரளிதரன் நடந்து வந்து மீண்டும் மதகில் உட்கார்ந்தான். இரண்டு கால்களுக்கிடையில் ஒரு கையைத் தொங்கவிட்டு, இன்னொரு கையால் மோவாயில் முட்டுக்கொடுத்தபடி மெல்லிய நடுக்கத்துடன் உட்கார்ந்திருந்தான். குளிர், அழுத்தமான நிழலைப் போல கவிந்து இறுக்கியது. இவனையும் அமிழ்த்த முயன்றது.

தெரு விளக்கு நின்றதும் எப்படி மாடி அறையின் விளக்கு உடனே ஒளிர்ந்தது? தெருவிளக்கின் ஒளியைப் பருகியபடி நடமாட்டமே இல்லாத அத்தெருவை நோக்கி அந்த அறையில் ஒரு பெண் உட்கார்ந்திருக்கிறாளா? முரளிதரனுக்குக் குழப்பமாக இருந்தது. தர்க்கங்கள் ஒன்றின் மீது ஒன்றாக வந்து அமர்ந்தன. துலக்கமான விவாதங்கள் எழுந்தன. ஆனால் தர்க்கங்கள் இவ்வளவு விரைவாகத் தோன்றுவதும், இது கேள்வி, இதற்கான பதில் இதுதான் என்ற ஒழுங்குடன் அவை வெளிப்படுவதும் இவனுக்கு ஆச்சரியமாக இருந்தது. இப்படி ஒன்றுடன் ஒன்று தொடர்புறுத்தி யோசிப்பதை மறந்து எத்தனை வருடங்கள் இருக்கும்? மூன்றா, ஐந்தா, இன்னும் அதிக வருடங்களா...?

மேகலா இறந்த பிறகுதான் இந்தச் சிதறல். 'இதற்கு மேல் உன்னைச் சகிக்க இயலாது' என்று அம்மா, அப்பா, அண்ணன் என ஒவ்வொருவராக விலகிக் கொண்ட பின்புதான் தானும் தர்க்கங்களிலிருந்து வெளியேறியதாக முரளிதரன் நினைத்தான்.

இப்போது மெலிதாகக் காற்றடிக்கிறது. மல்லிகையை ஒத்த துண்டு துண்டான பனிக்கட்டிகளைக் கொண்டுவந்து சரீரத்தின் மீது தூவுவது போல குளிர் உடலில் மோதுகிறது. பற்கள் நடுங்கின. அதே சமயம் மனதின் ஓரத்தில் வெம்மை பரவுகிறது. அண்ணன் வந்து பைபாஸ் ரோட்டில் ஒரு லாரியில் ஏற்றிவிட்டு ஓட்டுநரிடம் கொஞ்சம் பணமும் தன்னிடம் கைப்பையில் கொஞ்சம் பணமும் வைத்துவிட்டு லாரி கிளம்புவதற்கு முன்னால் பைக்கை எடுத்துக்கொண்டு அவ்விடத்தை விட்டு நீங்கியது நினைவுக்கு வந்தது. பனி படர்ந்த கண்ணாடியை உலர்ந்த ஆடையால் துடைப்பது போலப் பளிச்சென்று இருக்கிறது. ஒன்றை இன்னொன்றோடு தொடர்புபடுத்திக் கோர்வையாக யோசிக்க முடிகிறது. இதைத்தான் சில வருடங்கள் செய்யாமல் விட்டுவிட்டேனா? மறந்து விட்டேனா? அதனால்தான் அதிருப்தியடைந்தார்களா? குழம்பிவிட்டார்களா? அண்ணன் கொண்டுவந்து லாரியில் ஏற்றிவிட்ட போதுகூட, அவனை ஒரு ஓவியத்தின் பாத்திரமாகவே மனது கணக்கு வைத்தது. அது அந்தி கவியும் நேரமாக இருந்தது.

கரிய தார்ச்சாலை. தூரத்தில் ஒரு லாரி தென்படும்போது அதுவொரு மஞ்சள் பொட்டு போலவே முதலில் தோன்றுகிறது. பிறகு மஞ்சள் வளர்கிறது. கரிய சாலை சுருங்கச் சுருங்க மஞ்சள் அதன் மீது பெரிதாகப் பரவுகிறது. அதன் பின்புலத்தில் ஆரஞ்சு வண்ணம். மீதி இடமெல்லாம் படரத் தொடங்கியிருக்கும் ராத்திரியின் இருட்டு. மணமில்லாத கரும்புகையைப் போன்ற அலையும் இருட்டு. மனதில் விரியும் அந்தக் கேன்வாஸில் தன்னையும் அண்ணனையும் பொருத்தி வைத்து அது பொருட்படுத்த முடியாத அளவுக்கு எவ்வளவு சிறிதாக இருக்கிறது என்று சைகையில் அவனிடம் சொல்ல முயன்றான். அவன் திரும்பிப் பார்க்கவில்லை. இப்போது தோன்றும் அத்தனையையும் சொற்களே இல்லாமல் சொன்னால் எப்படிப் புரியும்? அதனால்தான் யாருக்கும் புரியவில்லையோ என்னவோ! 'எல்லாவற்றையும் ஓவியமாகப் பார்க்கும் ஒரு பைத்தியக்காரனை வைத்துக்கொண்டு என்ன செய்ய முடியும்?' என்றுதான் இந்த லாரியில் ஏற்றிவிட்டிருக்கவேண்டும்.

'எங்காவது கண்காணாத தேசத்தில் இவனை இறக்கிவிட்டு விடுங்கள்' என்று அவன் ஓட்டுநரிடம் சொல்லியிருக்க வேண்டும். ஆனால் இந்த லாரி ஒரு பெரிய கேன்வாஸில் ஊர்ந்துகொண்டிருக்கும் ஒரு எறும்பு மட்டுமே என்று முரளிதரன் உணர்ந்ததை அந்த ஓட்டுநரிடம் சொல்லியிருக்க வேண்டியதில்லை. அது எப்போது வேண்டுமானாலும் அந்த ஓவியத்திலிருந்து உதிர்ந்து கீழே விழுந்துவிடும் என்று சொன்னதை, விபத்தில் அவன் இறந்துவிடுவான் என்று சொன்னதாக அவன் புரிந்துகொண்டுவிட்டான். தீய சகுனம் என்று நினைத்து அவன் பதறியதால்தான் வண்டியை உடனே ஓரங்கட்டி நிறுத்தினான் போல. இரண்டு இரவுகள் இரண்டு பகல்கள் ஒரு வார்த்தைகூடப் பேசாமல் புறத்தே வெறித்துப் பார்த்துக்கொண்டே வரும் ஒருவன் எதற்காக நம்மை எறும்பு என்கிறான், உதிர்ந்துவிடுவாய் என்கிறான் என்பது அவனைப் பீதியுறச் செய்திருக்கிறது. இவனிடம் ஏதோ அமானுஷ்யம் இருக்கிறது என்று அவன் பயந்திருக்க வேண்டும். எல்லாவற்றையும் ஓவியமாகப் பார்க்கையில், பயணம் செய்து கொண்டே இருக்கையில், ஒரே கேன்வாஸ் மீண்டும் வேறு இடத்தில் வெளிப்படுவது போலத் தோன்றுகிறது.

ஒவ்வொன்றும் தனித்தனியானது இல்லையா? இல்லை. நிறைய கேன்வாஸ்கள் இருக்கின்றன. அனால் ஒத்த கேன்வாஸ்கள் அதன் நடுவே இடம் மாற்றி வைக்கப்பட்டிருக்கின்றன. பயணத்தின்

போது மட்டுமே அது புரிகிறது. இரண்டு மலைகளை, பல ஆறுகளை, சில சமவெளிகளைக் கடந்து வந்த பிறகு, தான் தேடிக்கொண்டிருந்த கேன்வாசைக் கண்டுகொண்டோமோ என்று முரளிதரன் நினைத்தான். அதுதான் ஓட்டுநரிடம் அப்படிப் பேச வைத்ததா? மனதில் தோன்றுவதைச் சொற்களால் வெளிப்படுத்தி எத்தனை ஆண்டுகளாகிறது! மேகலா சிதையில் எரியும்போதும் இப்படித்தான் அந்தியாக இருந்தது. சிதையைச் சுற்றி வந்து தட்டில் இருந்த சூடத்தை அவள் மீது அடுக்கப்பட்டிருந்த வரட்டியில் போட்டபோது இப்படித்தான் மஞ்சளாக அது எரிந்தது. அப்போதும் ஆரஞ்சு வண்ண வானம்தான் சிதைக்குப் பின்னால் இருந்தது. பக்கத்தில் ஓடிய ஆற்றில் மூழ்கி எழுந்ததால் இப்படித்தான் அப்போதும் குளிர் வாட்டியது. மேகலா இறந்துபோனது எனக்கும் வருத்தம்தான் என்பதை யாரும் நம்பவில்லை. அவள் தற்கொலை செய்துகொள்ளாமல் இருந்திருந்தால், ஏதேனும் நோயில் இறந்திருந்தால், நான் அவளைக் காதலித்தேன் என்பதை எல்லாரும் நம்பியிருப்பார்கள்.

ஆனால் அவளை நான் ஒரு வண்ணமாக உருவகித்து வைத்திருந்தேன். காலை வெளியில் ஒரு வண்ணமாகவும், அந்தி மயங்குகையில் இன்னொரு வண்ணமாகவும் மாற்றி மாற்றி அவளைக் கற்பனை செய்துகொண்டிருந்தேன். ஆனால் விளக்குகள் அணைந்த இருட்டில், எங்கள் தனியறையில் நான் அவளை இருட்டின் வண்ணமாக நினைத்து மறந்துவிட்டேன். அவளது இருப்பை இருட்டின் இருப்பாக, வண்ணமின்மையின் இருப்பாக மாற்றிச் சமைத்துவிட்டேன். அவள் கொழுந்துவிட்டு எரிந்திருக்க வேண்டும். இருளின் கரிய ஜ்வாலை. அந்த அறை தனலால் நிறைந்திருக்க வேண்டும். நான் என் வண்ணங்களின் சாந்தில் சிக்கிக்கொண்டு கிடக்கையில் அவள் தன்னை எரித்துக்கொண்டிருக்க வேண்டும். இந்த வண்ணங்களின் சிறையில் இருந்து என்னை மீட்பதற்குத்தான் அவள் தன்னை எரித்துக் கொண்டாளா? அவளது சிதை ஒரு விசித்திர ஓவியமாக இருந்தது. அவளது நெற்றியில் இருந்த பொட்டு ஒளிரும் சிவப்பாகச் சூரியனின் ஆரஞ்சு வண்ணத்தைப் போலிருந்தது.

எல்லோரும் கூடியிருந்த ஒரு நாள் இந்த வண்ணச் சேர்க்கையின் அழகை நான் பரவசத்துடன் சொன்னேன். என் முகம் நெருப்பைப் போல ஒளிர்வது எனக்கே தெரியும் அளவுக்கு நான் ஒளியோடு இருந்தேன். என் கைகளின் அசைவில் கூத்தின் பாவம் கூடியது. அப்போது தான் அவர்கள் என்னை லாரியில் ஏற்றி கண்காணாத இடத்துக்கு அனுப்பிவிடுவது பற்றித் தீர்மானித்திருக்கவேண்டும்.

முரளிதரன் இப்போது ஒரு புதிய வண்ணத்தின் முன்னால் நின்றிருந்தான். எந்தக் குழப்பமும் இல்லை. கருப்புக்கும் வெள்ளைக்கும் வேறுபாடு இல்லை. வண்ணம். அது மட்டுமே. இந்த மதகில் குந்திக்கொண்டு தெருவை உற்று நோக்குகையில், எல்லா விளக்குகளும் எரிவது போல, எல்லா வீட்டிலும் வெளிச்சம் இருப்பது போலக் கண் கூசியது. ஆழத்தில் இருட்டாக இருப்பது போல இருந்தது. ஆனால் அங்கு ஒன்றும் மாறியிருக்கவில்லை. மனதில்தான் இப்படி மின்னலும் இருட்டும் மாறி மாறி அடித்து ஏதோ ஒன்றை மாற் றிப் போடுகிறது. எழுந்து நின்று வேட்டியை இறுக்கமாகக் கட்டிக் கொண்டான்.

தெரு சற்று முன்பு பார்த்தது போலவே இருந்தது. அந்த விசித்திரத்தில் ஒரு துளியும் குறைவில்லை. தெருவின் உள்ளே நடந்தான். புராதனக் குகைக்குள், மலைப்பாதைக்குள், நீண்ட சமவெளியின் சரிவில் நடப்பது போல இருந்தது. குளிரில் தன்னந்தனியாக எரிந்துகொண்டிருக்கும் ஒற்றைத் தெரு விளக்குக்கு ஏதோ பொருள் இருப்பது போல இருந்தது. அந்த விளக்கின் அடியில் கொஞ்ச நேரம் நின்றுகொண்டிருந்தான். அண்ணாந்து அந்தச் சன்னலை மீண்டும் பார்த்தான். அங்கு எந்த அணுக்கமும் இல்லை. ஆனால் அங்கு ஒருத்தி இருக்கிறாள் என்று தோன்றியது. எதற்காகவோ காத்துக்கொண்டிருக்கும் ஒருத்தியாக அவள் இருக்கிறாள் என்று மனம் அடித்துக்கொண்டது. அப்படி என்ன நிச்சயம்? இல்லை அது அப்படித்தான். அது அப்படித்தான் இருக்க முடியும். அங்கேயே உறைந்துவிட்டவன் போல நின்று கொண்டிருந்த முரளிதரன், அந்த மஞ்சள் வெளிச்சத்திலிருந்து விலகி தெருவின் மறுமுனையை நோக்கி நடந்தான். வீடுகள் முடிவடைந்து வயல்வெளி தொடங்கிய இடத்தை மீண்டும் வந்தடைந்தான்.

சாலையோரம் ஒரு பூவரச மரம் இருந்தது. வயல்வெளியில் இருந்து வரும் காற்று இன்னும் குளிராக இருந்தது. வேட்டி காற்றில் பறந்து பறந்து அடங்கியது. அந்த மரத்தடியில் அமர்ந்து அதன் சொரசொரப்பான உடலில் முதுகைச் சாய்த்துக்கொண்டான். தெரு, உரித்துப் போட்ட நீண்ட மரப்பட்டையைப் போலக் கிடந்தது.

இப்போது தெருவின் மத்தியில் கிடைக்கும் அந்த மஞ்சள் ஒளித் துண்டு மீது ஒரு உருவம் தெரிகிறது. யாரோ தாம் நின்ற அதே இடத்தில் நிற்கிறார்கள். ஆனால் அது அச்சமூட்டுவதாக இல்லை. உடலில் இலகுத்தன்மையும் அமைதியும் வந்தது முரளிதரனுக்கு. நீண்ட காலமாகக் காத்திருந்த ஏதோ ஒன்று நிகழப்போவது போல, அது தமக்கு முன்பே தெரியும் என்பது போல இவன் அந்த மரத்தடியில் சமைந்திருந்தான். சன்னலுக்கு வெளியே கையை நீட்டியவள் அவள்தான். அவள் முரளிதரன் இருக்கும் பக்கமாகத்தான் இப்போது நடக்கிறாள். இங்குதான் வருகிறாள். அவள் வருவாள் என்று உறுதியாகத் தெரிந்தவன் போலக் காத்திருக்கும் தனது மனதின் விசித்திரம் குறித்து முரளிதரனுக்கு ஆச்சரியமாக இல்லை. நீண்ட, வெண்மையான, வளைக்கரங்களுடன் அருகில் வந்தவள் அந்தப் பூவரச மரத்தை நெருங்கி அப்படியே இவனைத் தழுவிக்கொண்டாள். தலை மீது முக்காடிட்டிருந்தாள். நீண்ட தோடுகள். ஒளிரும் மூக்குத்தி. அவளது புடவையில் பதிக்கப்பட்டிருந்த கண்ணாடிகள் மின்னின. அவளது உடல் வெதுவெதுப்பாக இருந்தது.

ஏதோ ஏற்கெனவே திட்டமிட்டிருந்தது போல, அந்த மரத்தடியில் இருவரும் சாய்ந்து உட்கார்ந்தார்கள். இவ்வளவு விரைவாக உடைகளைக் களைய முடியுமா? களைந்த பின்னும் அவளது உடலில் திரவியத்தின் வாசனை இருந்தது. அவள் முத்தமிட்டபோது முரளிதரனின் உடல் இறுகி மீண்டது. நறுமணம். அவளது சுவாசத்தில், முனகலில், எல்லாவற்றிலும் சுகந்தமான நறுமணம். உடலின் இயக்கத்தை அவள் மேலும் மேலும் தூண்டினாள். இருவரும் வெற்றுடம்புடன் வானத்தைப் பார்த்தபடி நீண்ட நேரம் அந்த மரத்தடியில் படுத்திருந்தபோது, சில்வண்டுகளின் ஒலி முரளிதரனுக்குக் கேட்கத் தொடங்கியது. இவன் எழுந்து கொண்ட பிறகும் அவள் அங்கேயே படுத்திருந்தாள். சில விநாடிகள் அவளுக்காகக் காத்திருந்தான். அவள் எழுவதன் சுவடு இல்லை. எதற்காகவோ காத்திருந்தவள், அதை அடைந்துவிட்டவள் போல நிழலாக அந்தப் புல்தரையில் கிடந்தாள். முரளிதரன் பிரதான சாலையை நோக்கி நடந்தான். அந்த மதகில் வந்து மீண்டும் உட்கார்ந்தான். தாம் செல்ல வேண்டிய வாகனத்திற்காகக் காத்திருந்தான்.

# பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புதல் கட்டாயம்

**சக்தி**

பூமி அழகானது! அனைத்து உயிர்களின் வாழ்விடமாக, சூரிய குடும்பத்துக்குள் உயிர்களின் பிறப்பிற்குரிய வீரிய கோளாக அண்ட வெளியில் உலவி வருவது இயற்கையின் அதிசயம். வானியல் அறிஞர்களும், அறிவியல் ஆராய்ச்சியாளர்களும் இரவு பகலாகக் கண்விழித்து பூமிபோல வாழ்வதற்கு இணக்கமாக இன்னொரு கோள் இந்த பிரபஞ்சத்தில் வேறெங்காவது இருக்கிறதா என ஆய்வு செய்து வருகின்றனர். அப்படி எந்தக்கோளும் இருப்பதாக இதுவரை உறுதி செய்யப்படவில்லை.

இத்தனை அதிசயத்தையும், அற்புதத்தையும், மகத்துவத்தையும், அரிய தன்மையையும் தன்னகத்தே கொண்டுள்ள பூமி இங்கு வாழும் லட்சக்கணக்கான வகைகளைக் கொண்ட பலவகை உயிர்களுக்கும் பொதுவானது. அதை நாமே ஆட்கொண்டு, அபகரித்து, துடைத்தழித்து துவம்சம் செய்வதில் என்ன பெருமை இருக்கப்போகிறது.

நம் சந்ததியினருக்கு மிகப்பெரிய செல்வங்களாக, மனை, மாடு, மக்கள், மண், பொன், பொருள் என எல்லாவற்றையும் சேர்த்து வைத்துச்செல்ல வேண்டும் என நினைக்கிறோம். ஆனால் கிடைத்தற்கரிய, மனிதனால் செயற்கையாக உருவாக்க முடியாத இயற்கைச் செல்வத்தை அப்படியே, சிந்தாமல் சிதறாமல் அடுத்த தலைமுறைக்கு கொண்டு போய் சேர்க்கும் பொறுப்பு ஒவ்வொரு பிறவிக்கும் உண்டு என்பதை மறந்து விடுகிறோம்.

நதிக்கரை ஓரம் நாகரிகம் பிறந்ததென்று படித்தோம் அன்று ஆற்றங்கரைகளை ஆக்கிரமித்தல், அபகரித்தல், ஆற்று நீரில் தொழிற்சாலைக் கழிவுகளை கலந்துவிடுதல் என்று அநாகரிகத்தின், அட்டூழியத்தின் தொட்டிலாக, அபாயத்தின் கட்டிலாக, குப்பை கொட்டிலாக நதிக்கரை மாறிவிட்டது இன்று. ஆற்று மணலை தோண்டி ஊற்று நீர் பருகினோம் அன்று ஆற்றுமணலைத் தோண்டி ஆதாயம் பார்க்கிறோம் இன்று.

விளைநிலங்கள் விலைநிலங்களாக மாறி வீட்டு மனைகளாக உருவெடுத்தன. மலைகள் கல்குவாரிகளாக குடைந்தெடுக்கப்பட்டன. குளிர் சோலைகளும், தளிர் மரங்களும் தார்சாலைகளாலும், கான்கீரீட் காடுகளாலும் கபளீகரம் செய்யப்பட்டன. குளங்கள் குடியிருப்புகளாயின, ஏரிகள் ஏரியாக்களாக பரிணாம வளர்ச்சி பெற்றன. தொழிற் சாலை மண்ணை மலடாக்கியது. காற்றை நஞ்சாக்கியது. நீரை பாழாக்கியது.



# பகுத்துண்டு ...

ஒன்று இன்னொன்றை சார்ந்து வாழும் உணவுச் சங்கிலியை உடைந்தெறிந்த பெருமை மனிதனை அல்லது பருவகால மாற்றங்களைச் சாரும். காற்று மாசடைவது, வெப்பநிலை உயர்வது, முறையற்ற பெருமழை, புயல் காற்று, வறட்சி, பூமித்தட்டுகள் இடம் பெயர்தல், பனிப்பாறைகள் உருகுவது, ஓசோன் படலம் அழிவது, பசுமை இல்ல வாயுக்களின் வேறுபாடு, கடல் மட்டம் உயர்வது, நிலத்தடி நீர் குறைதல், சுரங்கம் அமைப்பதில் மூலம் தாதுக்கள் வெளிக்கொணர்தல், நிலக்கரி, பெட்ரோல் உள்ளிட்ட எரிபொருள் எடுத்தல், காட்டுத்தீ என அனைத்தும் விளைவது மனிதனின் செயல்பாடுகளால்தான்.

நகரமயமாக்கல், பொருளாதாரா சிறப்பு மண்டலம் அமைத்தல், தொழில்நுட்ப பூங்கா அமைத்தல், அணு உலைகளை அணிவகுக்கச் செய்தல், அணைக்கட்டு கட்டுதல், சுரங்கம் அமைத்தல் என்கிற பெயர்களில் காடும் காடு சார்ந்த இடமும், நீர் நிலைகளும், கடலோர பகுதிகளும் பெரிதும் வளைத்தெடுக்கப்படுகின்றன.

முன்னேற்றம், வளர்ச்சி, மேம்பாடு இவை எதுவுமே இயற்கை வளங்களை அழித்து கட்டமைக்கப்படக்கூடாது. எந்த இயற்கை வளத்தையும் சிதைக்காத வளர்ச்சியைத்தான் 'வளங்குன்றா வளர்ச்சி' என அழைக்கின்றார்கள். இதைச் சார்ந்தே உலகத்தில் உள்ள எந்த ஒரு நாட்டின் வளர்ச்சித் திட்டங்களும், அடிப்படைக் கட்டமைப்பு மேம்பாடுகளும் அமையவேண்டும்.

கடந்த நூற்றாண்டில் உலகத்தில் இருந்த மொத்த சதுப்பு நிலங்களில் பாதியை நாம் இழந்து விட்டோம். 2050-ஆம் ஆண்டுக்குள் 90% பவளப்பாறைகளை இழந்து விடுவோம் என புவிவெப்பமயமாகுதல் குறித்த தனது அச்சத்தை ஐ.நா சபை வெளியிட்டுள்ளது. இந்த அழிவிலிருந்து இயற்கையை மீட்டெடுக்க வேண்டியது மனித குலத்தின் தலையாய கடமை. இதனை மையமாகக் கொண்டுதான் 'ஒரே ஒரு பூமி' என்ற வாசகம், இந்த ஆண்டின் உலக சுற்றுச்சூழல் நாள் கோட்பாடாக அறிவிக்கப்பட்டுள்ளது.

அரியவகை உயிரினங்கள், ஊர்வன, பறப்பன, நீர் வாழ்வன, நுண்ணிய பூச்சி இனங்கள், மூலிகைகள், தாவரங்கள், விலங்குகள் என எத்தனையோ வகையான உயிரினங்கள் இந்த உலகத்தில் முற்றாக அழிந்து விட்டன. நிறைய உயிரினங்கள் அழிவின் விளிம்பில் உள்ளன. இவற்றை அடையாளம் கண்டு காப்பாற்றுவதற்காக உலகத்தில் உள்ள பல சூழலியல், உயிரியல், வன அமைப்புகள் செயலாற்றி வருகின்றன. சட்டங்களும் கடுமையாக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன.

ஒவ்வொரு நாட்டிற்கும், மாநிலத்திற்கும், ஏன் அந்த மண்ணில் வாழும் ஒவ்வொரு மனிதர்க்கும் பாரம்பரியமான செடிகளை, உயிரினங்களை காப்பாற்றும் சமூகப் பொறுப்பு உள்ளது. அப்போதுதான் தப்பிப்பிழைத்திருக்கின்ற உயிர்களையாவது, தக்கவைத்துக் கொள்ளக் கூடிய நிலை உருவாகும்.

பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புதல் என்ற வள்ளுவரின் குறளைப் பின்பற்றுவோம். எல்லா உயிர்களையும் வாழவைக்க முடியாவிடினும் போராடி வாழ்ந்து கொண்டிருக்கும் உயிர்களுக்கு ஊறு விளைவித்து மாபாதகம் செய்யாமலாவது இருப்போம்.

'முகத்தில் பாதி வாயிருக்கும், முழு நீள நாக்கிருக்கும், மனதிலே பேயிருக்கும், மறையாத நோயிருக்கும் வனத்திலே கொண்டு போய் விட்டுவிட்டால் மிருகமெல்லாம் வரவேற்கும்' என்று கவிஞர் கண்ணதாசன் மனிதனை மிருகத்தோடு ஒப்பிட்டு வேடிக்கையாகச் சொல்லுவார். நாம் அதை உண்மையாக்கி விடக்கூடாது.

ஒருயிர்க்கும் துன்பம் செய்யாது, வளங்களை அழித்தொழிக்காது, அளவான, முறையான பயன்பாட்டோடு இந்த இயற்கையையும், பூமியையும் செழிக்க வைப்போம். இந்த பூமியில் வாழும் அனைத்து உயிரினத்தையும் மதிப்போம், வாழவைப்போம்.

மனிதர்களைப் போலவே அனைத்து உயிர்களுக்கும் இந்த உலகத்தில் வாழ எல்லா உரிமையும் உள்ளது.

# கண்டறியாத கதைகள்

**05**

சிறுவர்



யசோ மாமி



Waratah blooms after the bushfires

வணக்கம் மருமக்களே!

எல்லோரும் நலமாக இருக்கிறீர்களா? எல்லோரும் ஆசிரியர்களின் சொல் கேட்டு நடக்கிறீர்களா? நல்லது.

நீங்கள் எல்லோரும் நல்ல பிள்ளைகளாக இருப்பதால் இன்றைக்கு நான் உங்களுக்கு ஒரு கதை சொல்லப்போகிறேன்.

அது அவுஸ்திரேலிய நாட்டுப் பழங்குடி மக்கள் தமக்குள்ளே பாரம்பரியமாகச் சொல்லி வரும் கதை. ஒரு பூவைப் பற்றிய கதை. அது மட்டுமன்றி அந்தப் பூ அவுஸ்திரேலியாவின் நியூசவுத்வேல்ஸ் மாநிலத்தின் தேசியப் பூவைப் பற்றிய கதையுமாகும்.

அந்தப் பூவினை வரற்றா (waratah) என்று அழைப்பார்கள். பூர்வகுடி மக்களின் மொழியில் வரற்றா என்றால் (அபிரோஜினல் மொழியில்) செம்மலர்கள் பூக்கும் மரம் என்று பொருள்.

அவுஸ்திரேலியா எட்டு மாநிலங்களாகப் பிரிக்கப்பட்டிருப்பதால் ஒவ்வொரு பூ ஒவ்வொரு மாநிலத்திற்கும் உரிய பூவாகத் தெரிவுசெய்யப்பட்டிருக்கிறது. இலங்கையின் தேசியப் பூ என்ன தெரியுமா? அது அல்லி மலராகும். அப்படியென்றால் இந்தியாவின் மாநிலத்தில் ஒன்றானதும் இலங்கைக்கு மிக அருகில் இருப்பதுமான தமிழ்நாட்டின் மாநிலப் பூ என்னவென்று உங்களுக்குத் தெரியுமா? அது செங்காந்தள் மலராகும்.

சரி, அது இருக்கட்டும். அவுஸ்திரேலிய நாட்டுப் பூர்வகுடி மக்களான அபிரோஜினல் மக்களிடம் வாய்மொழி வழியாகத் தம் இனக்குழுக்களிடம் கையளிக்கப்பட்டு வந்து கொண்டு இருக்கும் அந்தக் கதை என்னவென்று பார்ப்போமா?

பல காலங்களுக்கு முன்னர் ஓர் ஆற்றங்கரையின் இரு மருங்கிலும் வாழ்ந்து வந்த டருக் (Darug) மக்கள் தம் உறவினர்களுக்கிடையில் எப்போதும் சண்டை பிடித்து வந்தார்கள். அதனால் நண்பர்கள், உறவினர்கள் எனப் பலர் கொல்லப்பட்டு அவர்களின் குருதியெல்லாம் ஆற்றில் கலந்து ஆறும் அதன் ஊற்றுக் கண்களும் சிவப்பாக மாறிவிட்டன. குருதி எல்லாம் ஆற்று நீரோடு கலந்து விட்டது. அதனால் ஆறு குருதி ஆறாக ஓடியது. அதனால் இந்த மக்கள் மாத்திரமன்றி அவர்களின் ஏனைய உறவினர்களான வன விலங்குகள்கூட அந்தத் தண்ணீரைக் குடிக்க முடியாது போய்விட்டது. தண்ணீர் இல்லாமல் போய்விட்டதால் இவர்களின் உறவினர் களான காட்டு விலங்குகளும் தங்கள் பூர்வீக இருப்பிடத்தை விட்டுவிட்டு தண்ணீர் கிடைக்கும் வேறு இடங்களுக்கு இடம்பெயர்ந்து போய்விட்டன. அப்போது இந்த இடம் அழிந்துபோன குருதி தோய்ந்த இடமாக இருந்தது.

ஒரு நாள் வானத்தில் இருந்து வான தேவன் கீழிறங்கி வந்தார். இந்த இடத்தைப் பார்த்துக் கவலைப்பட்டுக் கண்ணீர் விட்டார். அந்தக் கண்ணீர் குருதிக்கறை படிந்த நிலத்தின் மீது விழுந்தது. குருதியின் மீது விழுந்த வான தேவனின் கண்ணீரில் இருந்து ஒரு செடி முளைத்து செந் நிறத்தில் ஒரு பூ பூத்தது. அதுதான் வரற்றா பூவாகும்.

இந்த அழகான சிவப்புப் பூவின் இன்னொரு சிறப்பு என்னவென்றால் அவுஸ்திரேலியாவில் காட்டுத் தீ வந்து வனம், (காடு) வன உயிரினங்கள் எல்லாம் அழிந்து போய்விட்ட பின்னாலும் இச்செடி மீண்டும் விரைவாக முளைத்து செந்நிறத்தில் பூத்து நிற்கும். அதனால் இப்பூவினை மக்கள் நம்பிக்கையின் சின்னமாகப் பார்க்கிறார்கள்.

பெரும் அழிவுகள் நிகழ்ந்த பின்னாலும் ஒரு சிறந்த நன்மை நிகழும் என்ற நம்பிக்கையின் எடுத்துக் காட்டாக இந்தப் பூவினை மக்கள் கொண்டாடுகிறார்கள்.

இப்படியாக நியூசவுத்வேல்ஸின் மாநிலப்பூ அதன் வசீகரமான தோற்றத்தாலும், அது தோன்றிய இடமாக அவுஸ்திரேலியாவைக் கொண்டிருப்பதாலும், அதற்கென ஒரு செவிவழி வரலாற்றைக் கொண்டிருப்பதாலும், மேலும், அது ஒரு நம்பிக்கையின் சின்னமாக அமைந்திருப்பதாலும் மதிப்புப் பெற்ற மலராக விளங்குகிறது இந்த அழகான வரற்றா மலர்.

உங்களுக்கு எந்தப் பூ பிடிக்கும்? ஏன் அந்தப் பூ உங்களுக்குப் பிடிக்கும்? அது பற்றி யசோ மாமிக்கு இந்த +94-763982858 வட்ஸ்அப் இலக்கத்துக்கு அறியத் தருகிறீர்களா? உங்களுக்கு விருப்பமான பூவைப் பற்றி அறிய ஆவலோடு இருக்கிறேன்.எங்கே எழுதி அனுப்புங்கள் பார்க்கலாம்!

# ‘கண்ணீர்த் தாகம்’



தலைப்பைப் பார்த்ததும் ஏதோ எழுத்துப் பிழை என்று எண்ணிவிடாதீர்கள். அது தண்ணீர் தாகம் அல்ல கண்ணீர்த் தாக்கம்தான்.

நமக்குத் ‘தண்ணீர்த் தாகம்’ தெரியும். ‘கண்ணீர்த் தாகம்’ தெரியாது. வண்ணத்துப்பூச்சிகள், தேனீ, ஈக்கள் போன்ற முதுகெலும்பற்ற சிற்றுயிர்கள் ஊட்டச்சத்துக்காக விலங்குகளின் கண்ணீரைக் குடிக்கும். இது லாக்ரிபெஜி (Lacryphagy) எனப்படுகிறது.



மனிதர்கள் அழுவார்கள், அதன் விளைவாகக் கண்ணீர் வெளிப்படும். விலங்குகள் எப்படி அழும், எப்படி அவற்றின் கண்ணீரை இவை குடிக்கும் என்கிற கேள்வி தோன்றலாம். விலங்கு களின் கண்களையொட்டி உள்ள உள்ளுறுப்பான ‘லாக்ரிமல்’ சுரப்பி, கண்ணீரைச் சுரக்கும். இது விலங்குகளின் கண்களை எப்போதும் ஈரப்பதத்துடன் பராமரிக்க உதவும். கண்ணில் தூசி விழுவதை தடுக்கும். கண்ணில் விழு ந்த ஆபத்தான பொருட் களை வெளியேற்றவும் இந்தக் கண்ணீர் உதவும்.

இப்படிச் சுரக்கும் கண் ணீரைத்தான் வண்ணத்துப்பூச்சி உள்ளிட்ட பூச்சியி னங்கள் உறிஞ்சிக் குடிக் கின்றன. இந்தக் கண்ணீரில் தண்ணீர், சளிப்பொருள், புரதச் சத்து, உப்புச் சத்து, கொழுப்பு போன்றவை இருக்கும். வண்ணத்துப்பூச்சிகளின் வளர்சிதை மாற்றத்துக்கும் இனப்பெருக்கத்துக்கும் உப்புச் சத்து அவசியம். அவற்றுக்குத் தேவையான சோடியத்தையும் மற்ற கனிமச் சத்துகளையும் விலங்குகளின் கண்ணீரிலிருந்து அவை பெறுகின்றன. வண்ணத் துப்பூச்சிகள் பொதுவாக முதலை, ஆமை போன்ற ஊர்வனவற்றிடமி ருந்து கண்ணீரை உறிஞ்சும். கரப்பான்பூச்சிகளும் கண்ணீரை உறிஞ்சுவதை ஆய்வில் கண்டறிந்துள்ளனர். பல்லி இனத்தைச் சேர்ந்த ஊர்வனவற்றின் கண்ணீரை இவை உறிஞ்சுகின்றன.

இயற்கைச் சங்கிலியில் உயிரினங்கள் ஒன்றையொன்று சார்ந்து வாழ்வது இயல்பு. தன் தேவைக்காக மற்றொரு உயிரியைச் சார்ந்து இருக்கும்போது, சார்ந்திருக்கும் உயிரினத்துக்கு எந்தப் பாதிப்பும் நேராது. அது மட்டுமல்லாமல் பொதுவாகச் சார்ந்திருக்கும் உயிரினம் சிற்றுயிராகவும், அதற்கு உதவும் உயிரினம் அளவில் பெரிய உயிரினமாகவுமே இருக்கும். உயிரின உலகில் இதுபோன்ற இணக்கமான உறவு மிகச் சாதாரணமானது.



---




# மாற்றுத்திறனாளிகளுக்கு வசரப்பிரசாதம்!

**பிரசாத்**

மாற்றுத்திறனாளிகளுக்காகத் தனித்துவமான வாகனத்தை சென்னையைச் சேர்ந்த யாளி மொபிலிட்டி ஸ்டார்ட் அப் நிறுவனம் வடிவமைத்துள்ளது. மாற்றுத்தினாளிகளுக்காக வடிவமைக்கப்படும் மூன்று சக்கர வாகனத்துக்கு மாற்றாக இந்த வாகனம் இருக்கும்.

பொதுவாக மாற்றுத் திறனாளளிகளுக்காக இரு சக்கர வாகனங்களையே மாற்றி மூன்று சக்கர வாகனங்களாகப் பயன்படுத்தும் வழக்கம்தான் இருக்கிறது. ஆனால், இந்த மூன்று சக்கர வாகனம் மாற்றுத்தினாளிகளுக்குப் பயணிக்க வசதியாக இருக்காது. இதில் ஏறி அமர்வது மிகக் கடினம். மற்றவர்களின் துணையும் தேவைப்படலாம். பயணம் என்பது மனதுக்கு இதம் தருவது. அதற்குச் சிரமப்படுவது பயணத்தையும் ஒவ்வாததாக்கும்.

மாற்றுத்திறனாளிகள் எதிர்கொள்ளும் இந்தச் சிக்கலை மனத்தில் கொண்டு இந்த ஸ்டார்ட் அப் நிறுவனம் தங்களது புதிய வடிவமைப்பு முயற்சியைத் தொடங்கியது. தங்கள் சக்கர நாற்காலியோடு யாருடைய உதவியும் இல்லாமல் மாற்றுத்திறனாளிகள் அப்படியே இந்த வாகனத்தில் ஏறிக்கொள்ள முடியும். உங்கள் சக்கர நாற்காலியை அப்படியே இந்த வாகன அமைப்புடன் பொருத்திக்கொள்ளாலம். இதற்கு வேறு யாரின் உதவியும் தேவை இல்லை. உள்ளே அமர்ந்தபடி அப்படியே வாகனத்தை இயக்கவும் முடியும்.

இந்த வாகனம் மின்கலத்தில் இயங்கக் கூடிய வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது. மின்கலத்துடன் சேர்த்து இதன் மொத்த நிறை 160 கிலோ. இது மணிக்கு 50 கிலோ மீற்றர் வேகத்தில் செல்லக்கூடியது. 1.5 கிலோ வாட் திறன் உள்ள இரண்டு மின்கலங்கள் இந்த வாகனத்தில் பொருத்தப்பட்டுள்ளன.

# மீண்டும் டைனோசர்கள் உலகிற்குள் ஜுராசிக் வேர்ல்ட் டொமினியன்



எல்லாருக்குமான இந்த உலகத்தில் மனிதர் ஒரு பகுதிதான் என்பதை உணர்த்தும் படைப்பாக உருவாகியிருக்கிறது 'ஜுராசிக் வேர்ல்ட் டொமினியன்' (Jurassic World Dominion).

டைனோசர்களை மையமாகக் கொண்டு வரும் ஆங்கிலத் திரைப் படத் தொடரின் அண்மைய வரவு இந்தப் படம். இந்த வகையில் இதுதான் கடைசிப் படம் என்று செய்திகள் பரவி வந்தாலும் அதில் உண்மை இல்லை என்றும்கூடச் செய்திகள் வருகின்றன. ஆனால் ஜுராசிக் வேர்ல்ட் தொடரில் இது கடைசியானதாக இருக்கக்கூடும் என்றும் இதைத் தொடர்ந்து வேறு பெயரில் டைனோசர்கள் கதை தொடரும் என்றும்கூட எதிர்வு கூறப்படுகின்றது.

மனிதர்களும் டைனோசர்களும் ஒருங்கே வாழும் யுகத்தில்தான் ஜுராசிக் வேல்ட் திரைப்படங்களின் கதைகள் நடக்கின்றன. அத்தகைய பயோசின் சரணாலயத்தில் இயற்கையின் சமநிலையை அழிக்கும் வகையிலும், உலகம் முழுக்க உணவு வறட்சியை ஏற்படுத்தும் வகையிலும் வெட்டுக்கிளிகள் (லோகஸ்ட்) மரபணு மாற்றம் செய்யபட்டு கட்டவிழ்த்து விடப்படுகின்றன. இதன் டிஎன்ஏ மாதிரியை கைப்பற்ற பயோசின்னுக்குள் டாக்டர் எல்லிசாட்லர் (லாரா டெர்ன்) மற்றும் டாக்டர் ஆலன் (சாம் நீல்) நுழைகின்றனர்.

அதேநேரத்தில் இதற்கு முந்தைய ஜுராசிக் படத்தில் நடித் சிறுமியை இந்தப் படத்தில் சிலர் கடத்தி விடுகிறார்கள். கடத்தப்பட்ட தங்களது மகளை மீட்க ஓவன் (கிறிஸ் பிராட்) மற்றும் கிளாரி (பிரைஸ் டல்லாஸ் ஹோவர்ட்) ஆகியோர் பயோசின்னுக்குள் நுழைகின்றனர்.

பயோசின்னுக்குள் நுழைந்த இந்த இரண்டு தரப்புகளினதும் நோக்கம் நிறைவேறியதா? அங்கிருந்து எப்படி வெளியேறினர்? அதற்குள் என்ன நடந்தது? ஆகிய கேள்விகளுக்கான விடைகளை சிறந்த காட்சியனுபவத்துடன் சொல்ல முயற்சித்திருக்கும் படம் 'ஜுராசிக் வேர்ல்ட் டொமினியன்'.

2018ஆம் ஆண்டு வெளியான 'ஜுராசிக் வேர்ல்ட் ஃபோலன் கிங்டோம்' படக் கதையின் தொடர்ச்சிதான் தற்போது வெளியாகியிருக்கும் 'ஜுராசிக் வேர்ல்ட் டொமினியன்'.

படத்தில் கிறிஸ் பிராட் மிரட்டியிருக்கிறார். டைனோசரிடமிருந்து தப்பிக்கும் காட்சிகள், ஸ்டன்ட் காட்சிகள், அதிரடி காட்சித் தொடர்கள் என முழு படத்திற்கும் பலம் சேர்க்கிறார். அவரது மனைவியாக வரும் பிரைஸ் டல்லாஸ் பதறும் காட்சிகள் நம்மையும் சேர்த்தே பதறவைக்கின்றன. குறிப்பாக ஒற்றை ஆளாக காட்டில் சிக்கிகொள்ளும் காட்சியில், முகத்தில் அந்தப் பயத்தையும், பதற்றத்தையும் கச்சிதமாக வெளிப்படுத்தி நமக்கும் அந்த உணர்வை அப்படியே கடத்துகிறார்.

அதேபோல, பழைய காதலர்களாக ஒன்று சேரும் லாரா டெர்ன் மற்றும் சாம் நீல் கெமிஸ்ட்ரி சிறப்பாக பொருந்தியிருக்கிறது. சாம் நீலைப் பார்ப்பதற்காக அவரது இடத்திற்குள் லாரா டெர்ன் நுழையும் போது, இருவரும் இணைந்து எடுக்கப்பட்ட புகைப்படம் ஒன்றை தான் தங்கியிருக்கும் இடத்தில் வைத்திருக்கிறார் சாம் நீல். லாரா நுழைந்தும் அவருக்கு தெரியாமல் எடுத்து மறைப்பதில் துளிர்கிறது இருவரின் முதிர்ந்த காதல். மைசி கதாபாத்திரத்தில் டீன்ஏஜ் பெண்ணாக வரும் இஸபெல்லா செர்மன் அழகில் மட்டுமல்ல, நடிப்பிலும் ஈர்க்கிறார்.

குறிப்பாக டைனோசர்கள் துரத்த டூவிலரில் கிறிஸ்பிராட் நிகழ்த்தும் சாகசங்கள், மறுபுறம் அவரது மனைவி பிரைஸின் சேஸிங், லோகஸ்ட்களின் படையெடுப்பு, டைனோசரின் கடத்தல் என இடைவேளைக்கு முன்பே விறுவிறுப்பு தொற்றிக்கொண்டு, இரண்டாம் பாதியை பார்க்கும் ஆர்வத்தைத் தூண்டுகிறது.

இரண்டாம் பாதியில் கதை சொல்ல வேண்டிய நிர்பந்தமும், விறுவிறுப்பான காட்சிகளையும் கோர்த்திருக்கிறார் இயக்குநர் கொலின் ட்ரெவோரோ. ஆனால், இறுதிப் பாகம் என கூறப்பட்டதால், வழக்கமான காட்சிகளிலிருந்து விலகி சர்ப்ரைஸ் காட்சிகள் நிறைந்திருக்கும் என எதிர்பார்த்திருந்த ஜுராசிக் உலக ரசிகர்களுக்கு இப்படம் சற்று ஏமாற்றம்தான்.

இந்தப் பாகம் வழக்கத்திற்கு மாறாக அறிவியல் புனைகதைக் களத்தை கருவாக கொண்டு உருவாக்கப்பட்டிருக்கிறது. இதனால் டைனோசர்களை முதன்மைப்படுத்துவதிலிருந்து திசை திரும்பியிருக்கிறது திரைக்கதை.

ஆனால் படத்தின் விஎஃப்எக்ஸ், பின்னணி இசை படத்தை வேறொரு தளத்திற்கு எடுத்துச் செல்கிறது. குறிப்பாக டைனோசருக்கு பயந்து ஓடி, தண்ணீருக்கு அடியில் பிரைஸ் டல்லாஸ் மூழ்கி ஒளிந்திருக்கும் காட்சி படமாக்கப்பட்டிருக்கும் விதம் அரங்கத்தில் மயிர்க்கூச்செறிய வைக்கிறது.

ஒளிப்பதிவும், விஎஃப்எக்ஸும் அந்தக் காட்சிக்கான தரத்தை கூட்டியிருக்கும். படத்தில் ஒட்டு மொத்த தொழில்நுட்ப குழுவின் உழைப்பும் அபாராமானது. படத்தின் இறுதிக் காட்சியில் 'என் குட்டிய என்கிட்டையே வந்து கொடுத்துட்ட' என்பது போல தாய் டைனோசர் கிறிஸ் பிராட்டை ஒரு நிமிடம் பார்த்துவிட்டு நகர்ந்து செல்லும் காட்சி நெகிழவைக்கிறது.

இறுதியில் வரும், 'இந்த உலகம் மனிதர்களுக்கானது மட்டுமல்ல... எல்லா உயிரினங்களுக்காகவும் உருவாக்கப்பட்ட இந்த உலகத்தில் நாமும் ஒரு பகுதிதான்' என்ற வசனம் படத்திலிருந்து வெளியே வந்த பிறகும் மனதில் தேங்கிவிடுகிறது.

படம் தமிழ் மொழிமாற்றத்திலும் சிறப்பாகவே வந்திருக்கிறது. சில இடங்களில் நகைச்சுவைகளும் பொருந்திப்போகிறது. ஜுராசிக் அனுபவத்திற்காகவே இந்தப் படத்தையும் ஒரு தடவை பார்க்கலாம்.

## தைத்த...

உத்தரவுகளை இலங்கையிலிருந்து வேறு நாடுகளுக்கு மாற்றிக்கொண்டிருக்கிறார்கள் என்று தெரிவித்தார் ஜொகான் லோரன்ஸ். ஒருங்கிணைந்த தைத்த ஆடைகளின் நிறுவன சங்கத் பொதுச் செயலாளராகப் பதவி வகிக்கிறார் அவர்.

"இப்போது 100 வாங்குபவர்கள் இனி 80 தான் வாங்குவார்கள். ஆடி, புரட்டாதி மாதங்களில் இந்தப் பாதிப்பை உணரத் தொடங்கலாம்" என்றார் அவர். அந்த மாதங்களில்தான் புதிய உற்பத்திகள் தொடங்கும்.

நாட்டின் சமூக நிலைத்தன்மை குறித்து வாடிக்கையாளர்கள் கொண்டுள்ள சந்தேகம் காரணமாக அவர்கள் வேறு இடங்களை நாடிச் செல்வதற்கான அறிகுறிகளைக் காணுகின்றோம் என்று தெரிவித்தார் தைத்த ஆடைகள் ஏற்றுமதி நிறுவனங்களின் சங்க முன்னால் தலைவர் ரெகான் லக்கனி.

வெளிநாட்டு ஊடகங்களில் இலங்கை தொடர்பில் வரும் செய்திகளைப் பார்த்துவிட்டு எதிர்காலத்தில் எம்மால் கேள்விக்கு ஏற்ற வகையில் உற்பத்தியைத் தொடர முடியுமோ, கேட்கிற பொருள்களை விநியோகிக்க முடியுமோ என்கிற சந்தேகம் வாடிக்கையாளர்களுக்கு ஏற்பட்டுள்ளது என்று தெரிவிக்கின் றார் அவர். எமது துறைமுகங்கள், போக்குவரத்துத் துறை, டீசல் விநியோகம் போன்றவற்றில் உறுதியான நிலைப்பாட்டை நாம் வெளிப்படுத்தவேண்டியவர்களாக இருக்கின்றோம். வெறும் வாய் வார்த்தைகளில் அல்லாமல் ஏதாவதொரு உறுதியான உத்தரவாதத்தை அவர்களுக்கு வழங்கினால் மட்டுமே தொடர்ந்தும் எம்மால் கொள்வனவுக் கட்டளைகளைப் பெறக் கூடியதாக இருக்கும் என்றும் அவர் தெரிவித்தார்.

இலங்கைக்கு அந்நியச் செலாவணியை ஈட்டித் தருவதில் முன்னணியில் இருக்கும் துறை தைத்த ஆடைகள் ஏற்றுமதித்துறை. அதில் ஏற்படும் வீழ்ச்சி நாட்டின் பொருளாதாரத்தை மேலும் கடுமையாகப் பாதிக்கும். சீனாவின் ஷங்காய் நகரம் கொரோனா பெருந் தொற்றுக்குப் பின்னர் மீண்டும் திறக்கப் பட்டுள்ளது. உலகின் மிகப் பெரும் தைத்த ஆடைகள் ஏற்றுமதிச் சந்தையைக் கொண்டது ஷங்காய். அது மீண்டும் தனது இயல்புக்குத் திரும்புவது இலங்கையின் தைத்த ஆடைகள் ஏற்றுமதித் துறைக்கு பெரும் சவாலைக் கொடுக்கவல்லது. இந்த நேரத்தில் நாடு அரசியல் மற்றும் பொருளாதார ரீதியில் உறுதியான நிலையில் இல்லாதிருப்பது கடந்த 30 ஆண்டுகளில் இந்தத் துறையில் இலங்கை கட்டியெழுப்பிய எல்லா நன்மதிப்புக்களையும் சிதைத்துவிடும் என்கிறார் லக்கானி.

## லிட்ரோ...

நாட்டில் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடியை அடுத்து சமையல் எரிவாயுவை இறக்குமதி செய்வதற்குத் தேவையான டொலர் இல்லாதமையால் லிட்ரோ மற்றும் லாஃவ் காஸ் நிறுவனங்கள் பெரும் நெருக்கடியைச் சந்தித்துள்ளன. அவற்றால் சந்தையின் தேவைக்கு ஏற்ப சமையல் எரிவாயுக் கொள்கலன்களை விநியோகிக்க முடியவில்லை. மக்கள் சமையல் எரிவாயு இன்றிப் பெரும் துன்பப்பட்டு வருகின்றனர். அதனால் பல இடங்களில் வன்முறைகளும் வெடித்துள்ளன.

லிட்ரோ நிறுவனத்தின் இந்த நெருக்கடிக்கு முன்னாள் அமைச்சர்களும் ஆட்சியாளர்களுமே காரணம் என்று கடுமையாக விமர்சித்த நிறுவனத்தின் முன்னாள் தலைவர் திஷாரா ஜெயசிங்க சித்திரை மாதம் பதவி விலகியிருந்தார். அவரது இடத்திற்கே விஜித கேரத் நியமிக்கப்பட்டிருந்தார். எனினும் அவரது பதவியேற்பிற்குப் பின்னரும் சமையல் எரிவாயு விநியோகத்தில் முன்னேற்றம் ஏதும் ஏற்பட்டிருக்கவில்லை. மக்கள் நீண்ட வரிசைகளில் எரிவாயுவுக்காகக் காத்திருந்த அவலம் தொடர்ந்துகொண்டே இருந்தது. அதிலும் கொழும்புக்கு வெளியே சமையல் எரிவாயுவைப் பெறுவதென்பது குதிரைக் கொம்பாகியுள்ளது.

இந்த நிலையில்தான் கேரத்தின் பதவி விலகல் இடம்பெற்றுள்ளது. எனினும் அதற்கான காரணம் என்ன என்பது உடனடியாகத் தெரியவரவில்லை.

சமையல் எரிவாயுவை விநியோகித்து வந்த மற்றொரு நிறுவனமான லாஃவ் காஸ் இந்த ஆண்டு தொடக்கம் முதலே தனது விநியோகத்தை நிறுத்திவிட்டது. எரிவாயுவை இறக்குமதி செய்வதற்குப் போதிய டொலர் இல்லாத காரணத்தாலே அந்த நிறுவனம் தனது விநியோகத்தை நிறுத்தும் முடிவுக்கு வந்திருந்தது. அது முதல் நாட்டில் எரிவாயுவை விநியோகிக்கும் ஒரேயொரு அமைப்பாக லிட்ரோ காஸ் நிறுவனம் மட்டுமே திகழ்ந்துவந்தது.



# சிறைக்குள்...

தர்மராசா

60

## சிவில் உடையில் மட்டக்களப்பு நகருக்கு வந்த புலிகள்

27.12.2001 அன்று சிவில் உடை அணிந்தவாறு ஆயுதங்களில்லாமல் புலிகளின் அணி ஒன்று மட்டக்களப்பு நகருக்குள் வந்து நீண்ட நேரம் தங்கி நின்றது என்றும் அவர்களைச் சுற்றிப் பெருமளவு மக்கள் கூடி நின்றனர் என்றும் அவர்களுக்கு இலங்கைப் படையினர் பாதுகாப்பு வழங்கினர் என்றும் அறிந்தேன். இவையெல்லாம் அதிசயம்போலும் அற்புதம்போலும் இருந்தன. போர்ச் சூழலில் ஏற்பட்ட மிகப் பெரிய மாற்றம் அது. அந்தச் சம்பவம் கைதிகளைப் பொறுத்தவரையில் நம்பிக் கையூட்டுவதாக இருந்தது. சிறை அதிகாரி ஒருவர் "புலிகளே நகருக்குள் வந்து போகிறார்கள். புலிகளுக்கு உதவியவர்கள் என்று கூறி உங்களை இனியும் அடைத்து வைத்திருப்பதில் அர்த்தமில்லை. உங்களுக்கு விரைவில் விடுதலை கிடைக்கும்" என்றார். அதைக் கேட்க நன்றாகத்தான் இருந்தது.

சிறைச்சாலைக்குள் சில அதிகாரிகள் மிகத் திமிராக நடந்துகொள்வர். தாம் செய்கின்ற தொழிலைவிட வேறு சிறந்த தொழில் இலங்கையில் இல்லை என்றவாறான பாங்கில் கைதிகளுடன் நடந்து கொள்வர். அதைப் பார்த்துச் சில கைதிகள் "நீ இப்படி ஆள் மேய்க்க வந்தவன்தானே. எங்களுக்கு விடுதலையுண்டு உனக்கு ஓய்வுபெறும்வரை சிறைதானே" என்று தமக்குள் பேசிக் கொள்வார்கள். 27.12.2001இல் கிறிஸ்தவ நிறுவனம் ஒன்ற மட்டக்களப்புச் சிறைச்சாலைக்குள் வந்து போதனை செய்துவிட்டுக் கேக் துண்டு ஒன்றும் சவர்க்காரம் ஒன்றும் தந்தது. 28.12.2001இல் மற்றொரு கிறிஸ்தவ அமைப்பு வருகை தந்து போதனை செய்துவிட்டு இரண்டு இனிப்புகளும் ஒரு சவர்க்காரமும் தந்தது. "இயேசு எமக்கு விடுதலையைப் பெற்றுத் தருவார்" என எமக்காக அவர்கள் செபித்தது மனதை ஈர்த்த விடயம்.

சிறைக்குள் பத்து நிமிடங்களாவது மனம் வேறொரு திசையில் திரும்பினால் அது மனதுக்கு ஆறுதல் கொடுத்தது. அது மிகப் பெரிய விடயமாக இருந்தது.

> சிறைக்குள் பத்து நிமிடங்களாவது மனம் வேறொரு திசையில் திரும்பினால் அது மனதுக்கு ஆறுதல் கொடுத்தது. அது மிகப் பெரிய விடயமாக இருந்தது.

31.12.2001அன்று மிகவும் கவலையாக இருந்தது. 2001ஆம் ஆண்டு முழுதுமாகச் சிறையில் கழிந்துவிட்டது என்பதே அதற்குக் காரணம். இன்னும் எவ்வளவு காலம் இந்தத் துன்ப வாழ்க்கையுடன் இழுபட வேண்டுமோ என்ற கவலை ஏக்கம் தந்தது. 1.1.2002 அன்று புதிய வருடம் தொடங்கிய நாளில் எனக்குக் கடும் காய்ச்சலடித்தது. அன்றும் கிறிஸ்தவ அமைப்பு ஒன்று வந்து ஜெபம் நடத்தி இரண்டு சவர்க்காரங்கள், சிறிய பற்பசை, சிற்றுண்டிகள் எனத் தந்தது.

4.1.2002அன்று விடுதலைப் புலிகளின் தத்துவ ஆசிரியர் அன்ரன் பாலசிங்கத்தை நோர்வேக் குழுவினர் லண்டனில் சந்தித்தனர் என்று செய்திகள் வந்தன. இந்தச் சூழல் மேலும் வலுப்பெற்றுக் கைதிகள் விடுதலை மட்டும் ஏற்பட்டால் போதாது தமிழ் மக்கள் அரசியல் கைதிகள் என்ற வகையில் சிறையில் வாடாத அளவுக்கு அமைதி ஏற்பட வேண்டும் என்பது எனது எதிர்பார்ப்பாக இருந்தது. வடக்குக்குக் கொண்டுசெல்வதற்கு அரசால் பொருள்கள் மீது விதிக்கப்பட்டிருந்த தடை நீக்கப்படுவதாக அறிவிக்கப்பட்டது. அது ஒரு மனிதாபிமான நடவடிக்கையாக இருப்பினும் தமிழ் மக்களைப் பொறுத்தவரை சலுகை மட்டுமே. அவர்களுக்கு நிரந்தரமான அரசியல் தீர்வு ஒன்றே அவசியமாக இருந்தது.

(தொடரும்)

# தலைவலி ஒரு தனி நோயல்ல

கணேசன்

தலைவலி என்பது தனிப்பட்ட நோயல்ல. அது ஓர் அறிகுறி. உடலில் ஏதோ ஒரு நோய் உள்ளது அல்லது ஒரு தொல்லை தொடங்குகிறது என்ற அறிவிப்பு. வயது வித்தியாசம் பார்க்காமல் வருகிற ஒரு தொந்தரவு இது. நம் வாழ்நாளில் எப்போதாவது, ஒரு நாளிலாவது தலைவலி வந்து அவதிப்பட்டிருப்போம். பரவலான தொல்லை இது.

தலைவலியானது சாதாரணமானதாகவும் இருக்கலாம். உயிருக்கு ஆபத்து தருவதாகவும் இருக்கலாம். அதை மருத்துவர்தான் கண்டறிந்து கூற முடியும். ஆனால், அநேகம் பேர் தலைவலி என்றாலே 'ஒரு பாராசிட்டமால் மாத்திரையைப் போட்டுக்கொள்வோம்' என்று தற்காலிக நிவாரணம் தேடுபவர்களாகத்தான் இருக்கின்றனர். அவசரத்துக்கு இது சரியாக தோன்றும். ஆனால், தலைவலி அடிக்கடி வந்தால் அதற்குக் காரணம் அறிவது முக்கியம்.

**தலைவலி வகைகள்**

தலைவலியில் முதல்நிலைத் தலைவலி (Primary headache), இரண்டாம் நிலைத் தலைவலி (Secondary headache) என்று இரண்டு வகை உண்டு.

'மைக்ரேன்' (Migraine) எனும் ஒற்றைத் தலைவலி, டென்சன் தலைவலி, கொத்துத் தலைவலி, முக நரம்புத் தலைவலி போன்றவை முதல் நிலையைச் சார்ந்தவை. 100இல் 90 பேருக்கு வருவது இந்த வகைதான். இதனால் ஆபத்து எதுவும் இல்லை. பயப்படத் தேவையில்லை.

இரண்டாம் நிலைத் தலைவலிக்குப் பல காரணங்கள் இருக்கின்றன. தலையில் அல்லது கழுத்தில் அடிபடுதல், உடலில் ஏதேனும் ஒரு நோய்த்தொற்று, மூளைக்காய்ச்சல் போன்ற கடுமையான தொற்று, மூளையில் கட்டி, கபால நீர் அழுத்தம் (Intra cranial pressure) குருதிக் குழாய் பாதிப்பு, குருதி ஓட்டத் தடை, குருதிக் கசிவு, உயர் குருதி அழுத்தம், கண் பார்வை பாதிப்பு, சைனஸ் அழற்சி, காது, மூக்கு, தொண்டை, பல், வாய், கபாலம் போன்றவற்றில் ஏற்படும் பிரச்சினைகள் எனப் பல காரணங்களால் இவ்வகைத் தலைவலி ஏற்படுகிறது.

எல்லா தலைவலிகளைப் பற்றியும் சொல்ல வேண்டுமானால், ஒரு நூல் எழுத வேண்டும். அதற்கு இங்கு இடம் இல்லை. எனவே, முதல் நிலைத் தலைவலிகளில் முக்கியமான மூன்றை மட்டும் இங்கு பார்ப்போம்.



**ஒற்றைத் தலைவலி**

இளம் வயதில் ஏற்படும் தலைவலி இது. சிறுவர்களுக்கு 10 வயதிலும் சிறுமிகளுக்கு 15 வயதிலும் இது தொடங்குகிறது. ஆண்களைவிட பெண்களுக்கு அதிகம் தொல்லை கொடுப்பது, பெண்களுக்கு மாதவிலக்கு நேரத்தில் ஒற்றைத் தலைவலி அதிகமாகும். மாதவிலக்கு நின்ற பிறகு அது வருவது குறைந்துவிடும். ஆண்களுக்கு 50 வயதைக் கடந்ததும் இது தொடங்கும்.

பெரும்பாலும் பரம்பரைத்தன்மை காரணமாக இது வருகிறது. ஆபத்து இல்லாதது. தலையில் ஒரு பக்கத்திலோ அல்லது இரண்டு பக்கங்களிலோ வலி வரலாம். சில மணிநேரம் முதல் 3 நாட்கள் வரை இது தொல்லை கொடுக்கலாம். வாரம் ஒரு முறை / இருமுறை அல்லது மாதம் ஒருமுறை என்று முறைவைத்துக்கொண்டு வருவது ஒற்றைத் தலைவலி.

**அறிகுறிகள்**

**ஒற்றைத் தலைவலி பொதுவாக 4 கட்டங்களாக வெளிப்படும்**

முதல் கட்டத்தில் (Prodromal phase) தலைவலி வருவதற்கு முன்பு, உள்ளுணர்வுகளில் மாற்றங்கள் ஏற்படும். உதாரணமாக, லேசாகத் தூக்கம் வருவதுபோல் இருக்கும், கொட்டாவி வரும். உடல் களைப்பாக இருக்கும். காரணம் இல்லாமல் எரிச்சல் ஏற்படும். கோபம் வரும். பொறுமை இருக்காது. குமட்டலும் வாந்தியும் வரும். அடிக்கடி சிறுநீர் கழியும். தண்ணீர் தாகம் எடுக்கும்.

இரண்டாம் கட்டத்துக்கு 'ஆரா' (Aura phase) என்று பெயர். இதில் கண்களுக்கு முன்னே ஒளிவட்டம் தோன்றுவதுபோலவும் அலை அலையாகத் தோன்றுவதுபோலவும் காணப்படும். சிலருக்குப் பார்வை குறைவதுபோலவும் இருக்கலாம், இன்னும் சிலருக்கு நாவில் சுவை குறைவது போலவும், கை, கால்களில் மதமதப்பு உள்ளது போலவும், வித்தியாசமான வாசனை வருவது போலவும், காதில் வித்தியாசமான ஒலி கேட்பதுபோலவும் இருக்கும். இல்லாத பொருட்களைப் பார்ப்பதுபோலவும் இருக்கும். ஐந்தில் ஒருவருக்கு இவை ஏற்படும். இதுதான் உண்மையான ஒற்றைத் தலைவலி.

மூன்றாம் கட்டத்தில் (Attack phase) தலையின் முன்பக்கத்தில் கண்ணுக்குப் பின்புறம், ஒரு பக்கமாகத் தலைவலி தோன்றி, மறுபக்கத்துக்கும் பரவும். படிப்படியாக வலி அதிகரிக்கும். 'விண் விண்' என்று வலிக்கும். தலைவலி கடுமையாகும்போது வாந்தி வரும். அருகில் யார் இருந்தாலும் அவர்களுடன் பேசுவதுகூட எரிச்சலாகவும் கோபம் ஏற்படுத்துவதாகவும் இருக்கும். ஆதலால், இருட்டான இடத்திற்குச் சென்று ஓய்வெடுக்கத் தோன்றும்.

இறுதிக்கட்டத்தில் (Postdromal phase) தலைவலி குறைந்து, கழுத்துக்கு வலி பரவியிருக்கும். கழுத்தும் வலிக்கும். உடலிலிருந்து சக்தி முழுவதும் வெளியேறிவிட்டதுபோல் இருக் கும். முக்கியமாக, சிந்திக்கும் திறன் குறைந்தி ருக்கும். மனக்குழப்பமும் ஏற்பட வாய்ப்பு உண்டு.

**என்ன காரணம்?**

அதிக மன அழுத்தம், சரியான உறக்கம் இல்லா தது, வெயிலில் அதிகம் அலைவது, கண்ணில் படும் அதிக வெளிச்சம், காதில் கேட்கும் அதிக இரைச்சல், ஒழுங்காகச் சாப்பிடாமல் பசியுடன் வேலை பார்ப்பது போன்றவை முக்கியமான காரணிகள்.

மேலும், சில உணவுப் பொருட்களும் ஒற்றைத் தலைவலியைத் தூண்டுகின்றன. உதாரணத்துக்கு சொக்லேட், தயிர், சீஸ் உள்ளிட்ட பால் பொருட்கள், முட்டை, ஐஸ்கிரீம், குளிர்பானங்கள், செயற்கை பழச்சாறு, சில வகை மீன்கள். ஓய்வில்லாத பயணங்கள், மது அருந்துவது போன்றவையும் இதை வரவேற்கும்.

சிலருக்குக் குறிப்பிட்ட வேலையைச் செய்யும்போதும், குறிப்பிட்ட சூழலில் இருக்கும்போதும் ஒற்றைத் தலைவலி வரக்கூடும். தொலைக்காட்சியைத் தொடர்ந்து பார்க்கும்போது ஒற்றைத் தலைவலி வருவதை இங்கு நினைவுகூரலாம். பெண்களுக்கு மாதவிலக்கு காலத்தில் இது அதிகம் தொல்லை கொடுப்பது உண்டு. வாசனைத் திரவியங்கள், பூ வாசனை, பெட்ரோல் மற்றும் டீசல் புகை இத்தலைவலியைத் தூண்டும். சில மருந்துகளின் பக்கவிளைவாகவும் இது வரக்கூடும். உதாரணம்- கருத்தடை மாத்திரைகள்.

சொக்லேட், பால், பாலாடைக்கட்டி, ஈரல், இறைச்சி, சோயா சோஸ் ஆகிய உணவுகளில் 'டைரமின்' எனும் வேதிப்பொருள் அதிகமாக உள்ளது. இது குடலில் மோனோஅமைன் ஆக்ஸிடேஸ் எனும் என்சைமால் சிதைக்கப்படவேண்டும். சிலருக்கு இந்த என்சைம் குறைவாகச் சுரக்கும். அப்போது டைரமின் முறையாகச் சிதைக்கப்படாமல் அப்படியே குருதி ஓட்டத்தில் கலந்துவிடும். இதன் விளைவாக, குருதி அழுத்தம் அதிகரித்து கடுமையான தலைவலி ஏற்படும். இதுபோல், பலதரப்பட்ட சூப்புகளிலும் சோஸ்களிலும் அஜினோமேட்டா எனும் உப்பு சேர்க்கப்படுகிறது. அதில் மோனோசோடியம் குளுட்டமேட் எனும் வேதிப்பொருள் உள்ளது. இது குருதிக்குழாய்களை விரிவடையச் செய்து தலைவலியை உண்டாக்கும்.

மூளைக்குச் செல்லும் குருதிக் குழாயில் ஏற்படும் மாற்றங்கள் மற்றும் செரட்டோனின், சப்ஸ்டன்ஸ்-பி (Substance-B) எனும் வேதிப்பொருட்கள் சரியாகச் சுரக்காத நிலைமை ஒற்றைத் தலைவலிக்கு அடிப்படைக் காரணங்களாக மருத்துவத் துறை சொல்கிறது.

**என்ன பரிசோதனை?**

ஒற்றைத் தலைவலிக்கு என எந்தப் பரிசோதனையும் இல்லை. தலைவலிக்கு மற்ற காரணங்கள்

**சிறுவர்களுக்கு 10 வயதிலும் சிறுமிகளுக்கு 15 வயதிலும் இது தொடங்குகிறது. ஆண்களைவிட பெண்களுக்கு அதிகம் தொல்லை கொடுப்பது, பெண்களுக்கு மாதவிலக்கு நேரத்தில் ஒற்றைத் தலைவலி அதிகமாகும். மாதவிலக்கு நின்ற பிறகு அது வருவது குறைந்துவிடும். ஆண்களுக்கு 50 வயதைக் கடந்ததும் இது தொடங்கும்**




பானுஜா

# சொத்துக்கள் சேர்க்கும் வித்தை ஏது...?

தமித்தா அபேரத்ன என்பவர் சிங்களத் திரைப்பட நடிகை. 'கோத்தா கோ ஹோம்' செயற்பாட்டாளர்களில் ஒருவர். அண்மையில் இவர் வெளியிட்ட ஊடக அறிக்கையில், "நாடாளுமன்ற உறுப்பினர்களின் வீடுகள் எரியூட்டப்பட்டதால் தமக்கு ஏற்பட்ட இழப்புகள் தொடர்பில் நாடாளுமன்றில் கருத்து வெளியிட்டபோது ஓர் உறுப்பினர் தனக்கு ஏற்பட்ட சொத்திழப்பு 800 கோடி ரூபா எனக் குறிப்பிட்டுள்ளார். இவ்வளவு பணம் இந்த உறுப்பினருக்கு எவ்வாறு கிடைத்தது...?" என்று கேள்வியெழுப்பினார். அவர் தொடர்ந்தும் கூறுகையில், "அரசியலுக்கு வருவதற்கு முன்னர் சைக்கிளில் திரிந்த பலர் நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஆகியதன் பின்னர் தமது ஊதியமான 50 ஆயிரம், 60 ஆயிரம் ரூபா வருமானத்தில் கோடிக்கணக்கான சொத்துக்களை எவ்வாறு உருவாக்கினார்கள்...? இதைக் கணக்காய்வாளர் நாயகத்தின் கவனத்துக்குக் கொண்டுவந்து மக்களுக்கு விளக்கமளிக்க வேண்டும்" என வலியுறுத்தினார்.

இது அமைச்சர்களாகப் பதவி வகிக்காத எமது தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் பொருந்தும். அவர்களின் சொத்துக்களின் மதிப்பைத் தெரிந்துகொள்வதற்காக அவற்றுக்கு தீ வைக்க வேண்டுமென்பதில்லை, பதிலாக அவர்களின் வசமுள்ள சொத்துக்களை ஆய்வுசெய்து வெளிப்படுத்துவதன் மூலம் அவர்கள் எவ்வாறு கறுப்புப் பணத்தைச் சேர்த்தார்கள்? எதிர்க் கட்சி வரிசையிலிருந்து கொண்டு அதை எவ்வாறு செய்ய முடிந்தது? என்பதை வாக்களித்த மக்களுக்கு வெளிப்படுத்தச் செய்ய வேண்டும்.

இதற்காகத் தமித்தா அபேரத்ன போன்று தமிழ் மக்கள் சார்பில் யாராவது குரல் எழுப்பவேண்டியுள்ளது. தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களில் பலருக்கு எரிபொருள் நிரப்பு நிலையங்கள், மதுபானக் கடைகள், பெருந்தொகைக் காணிகள், வர்த்தக நிலையங்கள், பெரிய வீடுகள் எனப் பல விதங்களில் சொத்துகள் உள்ளன. இவற்றை ஆதரமாக்கினால் தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் தமித்த அபேரத்ன சொல்கின்ற சிங்கள உறுப்பினர்களுக்குச் சளைத்தவர்கள் அல்லர் என்பதைத் தமிழ் மக்களுக்கு வெளிக்காட்ட முடியும். ■

---

## தலைவலி ...

ஏதேனும் இருக்கிறதா என்பதைத் தெரிந்து, அது இல்லாதபோது, ஒற்றைத் தலைவலியின் அறிகுறிகளை வைத்து இந்த நோய் உறுதி செய்யப்படுகிறது. குருதி அழுத்தம் பரிசோதனையும், பொதுவான குருதிப் பரிசோதனைகளும், மூளையை இஇஜி, சிடி அல்லது எம்ஆர்ஐ ஸ்கேனும் எடுத்துப் பார்ப்பது வழக்கம். இப்போது 'பெட் ஸ்கேன்' எடுக்கிறார்கள். மூளையில் மிகவும் தொடக்கநிலையில் உள்ள கட்டிகள் மற்றும் குருதிக் குழாய் பாதிப்புகள் இதில் துல்லியமாகத் தெரியும். இரண்டாம் நிலைத் தலைவலி உள்ள வர்களுக்கு இது பெரிதும் பயன்படும்.

### என்ன சிகிச்சை?

தூண்டும் காரணிகளைத் தவிர்ப்பது இதன் சிகிச்சையில் முதல் கட்டம். முக்கியமானதும் இதுதான். உதாரணமாக, சொக்லேட் சாப்பிட்டால் ஒற்றைத் தலைவலி வருவது உறுதி என்றால், கட்டாயம் சொக்லேட்டைச் சாப்பிடக் கூடாது. மன அழுத்தம்தான் காரணம் என்றால், அதைக் குறைப்பதற்கான யோகா, தியானம் போன்றவற்றை மேற்கொள்ளவேண்டும்.

ஒற்றைத் தலைவலியைப் போக்க பீட்டா பிளாக்கர், வலிப்பு மருந்துகள், மன அழுத்தம் குறைக்கும் மருந்துகள், கால்சியம் சானல் பிளாக்கர், டிரிப்டான் மருந்துகள் (Triptans) எனப் பலதரப்பட்ட மருந்துகள் இப்போது நடைமுறையில் உள்ளன. மருத்துவர் யோசனைப்படி முறையாகச் சாப்பிட்டால் நல்ல நிவாரணம் கிடைக்கும்.

இயன்முறை சிகிச்சை, அக்குபங்சர், அக்குபிரஷர், ரிலாக்சேசன் பயிற்சிகள், உடற்பயிற்சிகள் உள்ளிட்ட வாழ்க்கைமுறை மாற்றப் பயிற்சிகள், மூளை - மனம் - பழக்கம் சார்ந்த பயிற்சிகள் போன்றவை ஒற்றைத் தலைவலிக்கு நிவாரணம் தருவதோடு அதை வரவிடாமல் தடுக்கவும் உதவும்.

### கொத்துத் தலைவலி

'கிளஸ்டர்' (Cluster headache) தலைவலி என அழைக்கப்படும் கொத்துத் தலைவலி அரிதாக வரும். இது ஆண்களுக்கு வரக்கூடிய தலைவலி. பெரும்பாலும் முப்பது வயதுக்கு மேல் உள்ளவர்களுக்குத்தான் இது வருகிறது. இது தினமும் குறிப்பிட்ட நேரத்தில் மட்டுமே வரும். குறைந்தது இரண்டு மணி நேரத்துக்கு வலி விடாது. அப்படியே விட்டாலும் மறுநாள் அதே நேரத்தில் மீண்டும் வந்துவிடும். இப்படி தொடர்ந்து சில வாரங்களுக்குப் படுத்திவிடும். தலையில் ஒரு பக்கம் மட்டும் குத்துவது போல் வலிக்கும். கண்கள் சிவக்கும். ஒரு பக்கமாகக் கண்ணீர் வரும். மூக்கு ஒழுகும். அதிகாலையில் தலைவலி வருவது இதன் சிறப்புத்தன்மை.

புகைபிடிப்பவர்கள், மது அருந்துபவர்கள், மனக்கவலை உள்ளவர்கள், தாழ்வுமனப்பான்மை உள்ளவர்கள் ஆகியோருக்கு இத்தலைவலி அதிகம் தொல்லை தரும். இதற்கும் உணவுக்கும் தொடர்பு இல்லை என்பதிலிருந்து ஒற்றைத் தலைவலியைப் பிரித்து உணரலாம். சுமாடிரிப்டின் ஊசி மருந்து மற்றும் ஆக்ஸிஜன் சிகிச்சை பயனளிக்கும். நோயாளி மருத்துவமனையில் தங்கி இந்த சிகிச்சையைப் பெறவேண்டும். மருத்துவரின் ஆலோசனைப்படி வெரப்பாமில் மற்றும் மெத்திசெர்ஜைட் மாத்திரைகளைத் தொடர்ந்து 3 மாதங்களுக்கு தடுப்பு மருந்துகளாக எடுத்துக்கொண்டால், கொத்துத் தலைவலியும் விடைபெற்றுக்கொள்ளும்.

### டென்சன் தலைவலி

இன்றைய பரபரப்பான வாழ்க்கைச் சூழலில் பலருக்கும் வருகிற தலைவலி இது. இதுவும் பெண்களிடமே அதிகம். எந்த வயதிலும் இது வரக்கூடும். என்றாலும் நடுத்தர வயதினரிடம் இது அதிகம் காணப்படுகிறது. இந்த வலியால் நோயாளியின் வாழ்க்கைத் தரமும் வேலைத் திறனும் பாதிக்கப்படுகிறது.

எவ்வித முன்னறிவிப்பும் இல்லாமல் திடீரென தலை முழுவதும் வலிக்கும். ஒரே இடத்தில் தொடர்ச்சியாக இருக்கும். தலையைச் சுற்றி கயிறு கட்டி அழுத்துவது போலிருக்கும். பக்க மண்டையிலும், பின் மண்டையிலும் வலி இருக்கும். இது பல வாரங்களுக்கு நீடிக்கும். வாந்தி இருக்காது. பார்வையில் மாறுதல்கள் காணப்படாது. இவற்றிலிருந்து ஒற்றைத் தலைவலியைப் பிரித்து உணர முடியும். காலையில் இந்த வலி குறைவாகவும், நேரம் ஆக ஆக வலி கடுமையாவதும் இதன் சிறப்புத் தன்மை. முக்கியமாக மாலை நேரத்தில் அதிகம் படுத்தும். ஏதாவது ஒரு வேலையில் கவனம் திரும்பினால் வலி குறைவது போலிருக்கும்.

அதிக வேலைப் பளு, மனக் கவலை, மன அழுத்தம் பரபரப்பான வாழ்க்கைமுறைகள், எடுத்த குறிக்கோளை அடைய வேண்டும் என்ற முழுவேகத்தில் இருப்பவர்கள், குடும்பத்தில் திடீர் இழப்பு, வேலையின்மை, நிதி நெருக்கடி போன்ற பிரச்சினைகள் ஆகியவற்றால் தலை மற்றும் கழுத்துத் தசைகளை இறுக்கப்படுவதால் இந்தத் தலைவலி வருகிறது. சில வலி நிவாரணிகளும் அமிடிரிப்டிலின் மாத்திரையும் இதற்கு நிவாரணம் தருகின்றன.

மன அழுத்தத்தைக் குறைத்து, மனதுக்கு நல்ல ஓய்வு கொடுத்து, தேவையான அளவுக்கு நிம்மதியாக உறங்கினால் மட்டுமே இதைத் தவிர்க்க முடியும். இயன்முறை மருத்துவம், ஸ்ட்ரெஸ் மேனேஜ்மெண்ட் பயிற்சிகள், யோகா, தியானம் போன்ற வாழ்க்கைமுறை மாற்றங்கள் இதற்கு உதவும். ■

நட்சத்திரா

# ஏன்...?
# அப்டி...?

22




## ரயில் போன பின்பும் கடவைகள் மறித்து நிற்பது ஏன்

நாட்டின் மற்றைய பகுதிகளுடன் ஒப்பிடுகையில் எப்படியிருப்பினும் யாழ்ப்பாணத்தவர்களுக்கு ரயில் புதிதுதான். யாழ்தேவிக்குப் பின்னர் பல காலங்கள் கழித்து - போருக்குப் பின்னர்தான் ரயில் பயணங்கள் பழக்கப்பட்டுள்ளன. ஆனால் ரயில் கடவைக்குப் பழக் கப்படாதவர்கள் இப்போதும் பலருள்ளனர்.

தனக்கெனத் தனியாகப் பாதை அமைத்துப் பயணிக் கின்ற வாகனம் ரயில். ரயிலால் மாத்திரமே அந்தப் பாதை யில் பயணிக்க முடியும். அது ரயிலுக்குரிய பாதை. அந் தப் பாதையில் வைத்து ரயிலுடன் மோதுண்டால் ரயில் எம் மீது மோதி விபத்தை ஏற்படுத்தியதாக அர்த்தப்படாது. நாம் போய் ரயிலுடன் மோதியதாகவே அர்த்தப்படும். அதாவது மோதலுக்குக் காரணம் ரயில் எமது பாதையில் குறுக்காக வந்தது அல்ல. நாம் ரயிலுக்குக் குறுக்காகச் சென் றமையே. இவ்வாறான புரிதல் இல்லாத குறை பலருக்கு இருக்கிறது. அதைவிடப் பெருங்குறை ரயில் கடவையில் காத்திருக்கத் தெரியாதோர், காத்திருக்க முடியாதோர், காத்திருக்கும் பொறுமையில்லாதோர் எனப் பல ரக மனி தர்கள். இந்த மனிதர்களின் தொகை நாளுக்கு நாள் அதிக ரித்துச் செல்வது கவலைக்கிடமானது.

கடவைகளில் காத்திருந்து ரயில் அதைக் கடந்ததும் கடவையை உடனடியாகத் திறக்கவில்லை எனக் கடவைக் காப்பாளருடன் முரண்படுபவர்களும் கடவைக் காப்பாள ரைத் திட்டித்தீர்த்தவாறு திறக்காத கடவைக்கூடாக வாக னம் செலுத்துவோரும் கூடப் பலருள்ளனர். ஆனால் ரயில், கடவையைக் கடந்து சென்றவுடன் அதை உடனடியாகத் திறக்க முடியாது என்பதில் மறைந்திருக்கின்ற பல விட யங்கள் அவர்களுக்குத் தெரிந்திருப்பதில்லை.

ரயில், கடவையைக் கடந்ததும் அந்தக் கடவையைக் கட்டுப்படுத்தும் ரயில் நிலையத்திலுள்ள உரிய அதிகாரிக் குச் சமிக்ஞை கிடைத்து அந்த அதிகாரி அந்தக் கடவை யைத் திறக்கக்கூடிய அனுமதியைச் சமிக்ஞையுடாகக் கடவைக் காப்பாளருக்கு வழங்கிய பின்னரே கடவைக் காப்பாளரால் கடவையைத் திறக்க முடியும். சமிக்ஞை மாத்திரமன்றி திறப்பதற்குரிய வழிமுறையைச் செயற்படுத்து வதற்குரிய மின் தொடர்பையும் ரயில் நிலைய அதிகாரிதான் கடவைக்காப்பாளருக்கு விடுவிப்பார். அதுவரை அதை எதிர்பார்த்துக் காத்திருப்பதைத் தவிரக் கடவைக் காப்பாள ருக்குக்கூட வேறு வழியில்லை. ரயில் தனது கடவையைக் கடந்துவிட்டது என்று தெரிந்தாலும் அவரால் கடவையைத் திறக்க முடியாது. மின்சாரத்தையும் ரயில் கட்டமைப்புக்குரிய ஒழுங்கு விதியையும் பயன்படுத்திச் செய்யப்பட்ட கடவை திறக்கும் செயற்பாட்டை கடவையைக் கட்டுப்படுத்தும் ரயில் நிலைய அதிகாரி கடவைக் காப்பாளருக்கு விடுப்பதானது அருகிலுள்ள மற்றைய கடவைகளை அந்த ரயில் கடக்க எடுக்கும் நேரத்தில் தங்கியிருக்கிறது.

உதாரணத்துக்குக் காங்கேசன் துறையிலிருந்து கொழு ம்பு நோக்கிப் பயணிக்கும் ரயில் யாழ்ப்பாணம் ரயில் நிலையத்தை அடைவதற்கு முன்னர் ஸ்ரான்லிவீதி மற்றும் பலாலி வீதிக் கடவைகள் மூடப்படும். ரயில் பலாலி வீதிக் கடவையைக் கடந்து ரயில் நிலையத்தை அடைந்த பின் னர் இவ்விரு காப்பாளர்களுக்கும் அதிகாரி சமிக்ஞை வழங்குவார். காப்பாளர்கள் கடவைகளைத் திறப்பர்.

தவிர ரயில் கடந்துவிட்டது கடவையைத் திறக்கவில்லை என்று ஸ்ரான்லி வீதியில் காத்திருக்கும் நீங்கள் கடவைக்காப்பாளருடன் முரண்பட்டுப் பயனில்லை. அது பலாலி வீதிக் கடவையைக் கடந்து உரிய சமிக்ஞையூடாக அது நிலைய அதிகாரிக்கு தெரியவந்து அவர் கடவைக் காப்பாளருக்கு அனுமதியும் சமிக்ஞையும் அளித்தாலேயே காப்பாளரால் கடவையைத் திறக்க முடியும். மறுபுறமாகக் கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கி ரயில் வருகின் றது என்று வைத்துக்கொண்டாலும் கச்சேரிக் கடவை, கோவில் வீதிக் கடவை, இராசாவின்தோட்டக் கடவைகளின் நிலை இப்படித்தான். கடவைகளில் காத்திருக்க வேண்டும். அவசரப்படுவதில் அர்த்தமில்லை.



# மீன்களுக்கு கணித அறிவு உண்டு

மோகனா

நம் வீட்டு மீன் தொட்டிகளில் வளர்க்கும் சிக்லிட்கள்(cichlids) எனப்படும் மீன்கள் மற்றும் கடலின் ஆழத்தில் வாழும் வால் திருக்கை (stingrays) எனப்படும் மீன்கள், ஒன்று முதல் ஐந்து வரையிலான எண் வரம்பில் எளிய கூட்டல் மற்றும் கழித்தல் ஆகிய வற்றைச் செய்வதாகக் கண்டுபிடித்துள்ளனர். இந்த குட்டி மீன்களுக்கும், பெரிய வால் திருக்கை (Stingray) போன்ற விலங்குகளுக்கு அவற்றின் கணிதத் திறன்கள் எதற்காகத் தேவை என்பது பற்றி மட்டும் இன்றுவரை ஏதும் அறிவியல் ரீதியாகத் தெரியவில்லை.

**மனித உதாரணங்கள்**

உங்கள் முன் மேஜையில் சில நாணயங்கள் உள்ளன என்று வைத்துக்கொள்ளுங்கள். அவை எண்ணிக்கை குறைவாக இருந்தால், நீங்கள் பார்த்த கணத்திலேயே அங்கே எத்தனை நாணயங்கள் உள்ளன என்பதை உடனடியாகச் சொல்லலாம். அவற்றை எண்ண வேண்டிய அவசியமில்லை, ஒரு பார்வை மட்டுமே போதும்.

மனிதன் போலவே சிக்லிட்கள் மற்றும் திருக்கைகள் நம்மை வியக்க வைக்கும் வகையில் நம்மை ஒத்தவையும்கூட. அவை சிறிய அளவுகளை துல்லியமாக கண்டறிய முடியும் மற்றும் மறைமுகமாக எண்ணாமல் எடுத்துக் காட்டாக, மூன்றின் அளவுகளை நான்கின் அளவுகளை நம்பத்தகுந்த வகையில் வேறுபடுத்துவதற்கு அவர்களுக்குப் பயிற்சி அளிக்கப்படலாம்.

இந்த உண்மை சில காலமாக அறியப்படுகிறது. இருப்பினும், பான் பல்கலைக்கழகத்தின் விலங்கியல் நிறுவனத்தைச் சேர்ந்த பேராசிரியர் டாக்டர். வேரா ஸ்க்லூசெல் தலைமையிலான ஆய்வுக் குழு இப்போது இரண்டு இனங்களும்கூட கணக்கிட முடியும் என்பதைக் கண்டுபிடித்து காண்பிக்கின்றனர்.

எளிமையான கூட்டல் மற்றும் கழித்தல் களைச் செய்ய விலங்குகளுக்கு நாங்கள் பயிற்சி அளித்தோம் என்று ஸ்க்லூசெல் விளக்கிறார். அவ்வாறு செய்யும்போது, அவர்கள் ஆரம்ப மதிப்பை ஒன்றால் கூட்டவோ குறைக்கவோ வேண்டும். அவைகளுக்கு பயிற்சியும் தரவேண்டும் என்றார்.

நீலம் என்றால் "ஒன்றை சேர்", மஞ்சள் என்றால் "ஒன்றை கழித்தல்"

ஆனால் "2+1" அல்லது "5-1" இன் முடிவை எப்படி ஒரு சிக்லிட்டைக் கேட்பது? தேனீக்களின் கணிதத் திறன்களை சோதிக்க மற்ற ஆராய்ச்சி குழுக்கள் ஏற்கனவே வெற்றிகரமாக பயன்படுத்திய ஒரு முறையை ஆராய்ச்சியாளர்கள் இங்கே மீன்களிடம் பயன்படுத்தினர். அவர்கள் மீன்களுக்கு வடிவியல் வடிவங்களின் தொகுப்பைக் காட்டினர். எடுத்துக்காட்டாக, நான்கு சதுரங்கள். இந்த பொருள்கள் நீல நிறத்தில் இருந்தால், பின்வரும் பாகுபாட்டிற்கு "ஒன்றைச் சேர்" என்று பொருள். மஞ்சள், மறுபுறம், "ஒன்றைக் கழித்தல்" என்று பொருள்.

அசல் தூண்டுதலைக் காட்டிய பிறகு (எ.கா. நான்கு சதுரங்கள்), விலங்குகளுக்கு இரண்டு புதிய படங்கள் காட்டப்பட்டன. ஒரு ஐந்து மற்றும் ஒரு மூன்று சதுரங்கள். அவர்கள் சரியான படத்திற்கு நீந்தினால் (அதாவது "நீல" எண் கணித பணியில் ஐந்து சதுரங்களுக்கு), அவர்களுக்கு உணவு வெகுமதி அளிக்கப்பட்டது. தவறான பதில் தந்தால் அவர்களுக்கு ஏதும் இல்லை. காலப்போக்கில், அவர்கள் நீல நிறத்தை ஆரம்பத்தில் காட்டப்பட்ட தொகையில் ஒன்று அதிகரிப்புடனும், மஞ்சள் எண்ணை குறைப்புடனும் இணைக்க கற்றுக்கொண்டனர்.

ஆனால், மீன் இந்த அறிவை புதிய பணிகளுக்கு பயன்படுத்த முடியுமா? அவர்கள் உண்மையில் வண்ணங்களுக்குப் பின்னால் உள்ள கணித விதியை உள்வாங்கிக் கொண்டார்களா? இதைச் சரிபார்க்க, பயிற்சியின்போது சில கணக்கீடுகளை நாங்கள் வேண்டுமென்றே தவிர்த்துவிட்டோம் என்று ஸ்க்லூசெல் விளக்குகிறார்.



அதாவது, 3+1 மற்றும் 3-1. கற்றல் கட்டத்திற்குப் பிறகு, விலங்குகள் இந்த இரண்டு பணிகளையும் முதல் முறையாகப் பார்த்தன. ஆனால் அந்த சோதனைகளில் கூட, அவை



இந்த வார சமையல்

முட்டை விலை ஐம்பதைத் தொடும் தறுவாயில் இருக்கிறது. முட்டைப் பொரியல் என்பது அனைவருக்கும் தெரிந்ததும் அனைவருக்கும் பழக்கமானதும் பலரும் அன்றாடம் செய்து உண்பதுமான உணவு. மாமிசம், மச்சம் கிடைக்காத பட்சத்தில் பலரும் தஞ்சமடைவதும் முட்டையில்தான். முட்டைப் பொரியல் என்று இன்றும் கிராமத்தவர்கள் சொல்லும் இந்த உணவை



## ஊர்க்கோழி முட்டைப் பொரியல்

நகரத்து மக்கள் ஆம்லெட், ஓம்லெட் என்கிறார்கள். பலராலும் பல தருணங்களிலும் அன்றாடம் பொரித்துண்ணப்படுவதாக இருக்கின்ற முட்டைப் பொரியலை சமைக்கத் தெரியாதோரும் இருக்கவே செய்கிறார்கள். ஆகவே இந்த வாரம் முட்டைப் பொரியலை ஆக்குவது எப்படி என்று பார்ப்போம்.


இதற்கு நாம் ஊர்க்கோழி முட்டையை ஊர்களில் சென்று வாங்கவேண்டும். நகரிலும், நகர்ப்புறங்களிலும்... ஏன் ஊர்ப்புறங்களிலுள்ள கோழிப்பண்ணைகளில் போய்க் கூட ஊர்க்கோழி முட்டை வாங்க முடியாது. அங்கு ஊர்க்கோழி முட்டை என்ற பெயரில் விற்கப்படும் முட்டையை வாங்கிக் கொண்டு ஊர்மனைகளுக்குச் சென்று வீடுகளில் வளரும் கோழிகளின் முட்டைகளுடன் ஒப்பிட்டுப்பார்த்தால் வேறுபாடுகள் புரியும்.

**தேவையான பொருள்கள்**

ஊர்க்கோழி முட்டை - 1, சின்னவெங்காயங்கள் 5, பச்சை மிளகாய் 2, உப்பு - சிறிதளவு, மிளகுதூள் - சிறிதளவு, கறிவேப்பிலை, தேங்காய் எண்ணெய் அல்லது நல்லெண்ணெய். மஞ்சள்தூள் சிறிதளவு.

**எவ்வாறு பொரிப்பது....?**

சின்னவெங்காயத்தைத் தோலுரித்துக் கழுவிச் சுத்தப்படுத்திக் குறுக்காக நறுக்கித் துண்டுகளாக்க வேண்டும். அதேபோல பச்சை மிளகாய்களையும் நறுக்கிக் கொள்ள வேண்டும். பாத்திரம் ஒன்றுக்குள் முட்டையை உடைத்தெடுத்து அதனுடன் சிறிதளவு உப்பு, மஞ்சள்தூள், மிளகு தூள் ஆகியன சேர்த்து நன்றாக அடித்துக்கொள்ளவேண்டும். அடித்ததும் வெட்டி வைத்துள்ள வெங்காயம், பச்சை மிளகாய்களைச் சேர்த்துக் கலக்கவேண்டும். முட்டை பொரிக்கின்ற தாச்சியை அடுப்பில் வைத்து அதில் எண்ணெய்யை விட்டு எண்ணெய் சூடாகியதும் முட்டைக் கலவையை ஊற்றிப் பொரித்தெடுங்கள். சுவையான ஊர்க்கோழி முட்டைப் பொரியல் தயார்.



கதிரேசன் காத்தவராயன்

# என்னவெண்டு சொல்ல?

யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரியிலை சங்கரியரை வாட்டிலை வைச்சிருக்கினமாமெண்டு முருகேசர் சொல்ல ரண்டுபேருமா பாக்கப் போனம். பெரிசாய் இல்லை சலரோகம் கூடிவிட்டுதாம். இப்ப கொன்றோலாம். வாற வழியிலை ரியூட்டறியள் எல்லாத்துக்கும் ரண்டு பக்கமும் றோட்டு நீளத்துக்கும் நல்லூர்த் திருவிழாச் சனக்கூட்டம்தான். என்ரை மோட்டச் சயிக்கிளின்ரை வேகத்தைக் குறைச்சன்... "ஏனப்பா நிப்பாட்டுறாய் கதிரேசு" எண்டு முருகேசர் பகிடிபண்ணினார்.

"பாத்தியே கதிரேசு... பெற்றோல் இல்லை எண்டுறாங்கள்... விலை கூடிப்போச்சுது... கட்டுப்படியாகாது... அது இதுவெண்டு எல்லாம் கதையிலையும் பேப்பரிலையும்தான்.. பாத்தியே நிக்கிற மோட்டச்சயிக்கிளுகள், ஓட்டோவுகள், காருகள் எண்டு..." முருகேசர் புறுபுறுத்தார். "அனேகமாய் ஒராளை அல்லது ரண்டுபேரை ஏத்துறதுக்கு ஒரு வாகனம்..." எண்டு நான் சொல்ல "படிப்பின்ரை பெறுமதி அப்பிடியாப் போச்சுது" எண்டு முருகேசர் சிரிச்சார்.

அப்பிடியே கோயிலடிக்கு வந்திட்டம். அங்கை கனகர் சம்பர் தம்ப ரெண்டு கூடியிருந்து "என்னப்பா ரண்டுபேரும் மோட்டச் சயிக்கிளிலை வாறியள்? என்ன கதிரேசண்ணை கிணத்திலை பெற்றோல் வருகுது போலை?" எண்டு கனகர் சொல்ல எல்லாருமாச் சிரிச்சினம். விசயத்தை முருகேசர் சொல்லிக்கொண்டிருக்க "இப்ப எப்பிடியிருக்கிறார் சங்கரியண்ணை?" எண்டு கேட்டார் சம்பர். "இப்ப சரியாகிப்போச்சுது" எண்டு நான் சொல்ல ஆறுதலாயிட்டினம்.

"இஞ்சார்! கதிரேசண்ணையின்ரை மோட்டச்சயிக்கிளிலை நாங்கள் போனதைப் பாத்து ஆச்சரியப்படுகிறியள் உங்கை றோட்டிலை விலத்திவர நாங்கள் பட்டபாட்டை ஆருக்குச்சொல்லியழ?" எண்டு முருகேசர் நாங்கள் விலத்தி வரப்பட்ட கஸ்ரத்தை விவரிச்சார். "பிள்ளைகுட்டியளைப் படிப்பிச்சு ஆளாக்க பெற்றதுகள் பாடுபடத்தானே வேணும்..." எண்டார் தம்பர்.

"தம்பு!... பள்ளிக்கூட வகுப்பிலை கொஞ்சப்பேருக்குள்ளை படிக்கிறது விளங்குதில்லையெண்டு பெரிய கூட்டத்துக்குள்ளை பிரசங்கம்கேட்ட மாதிரிப் படிக்கிறதுதான் சரியெண்டு சொல்லுறியோ?" எண்டு சம்பர் கேட்டார். "கஸ்ரப்பட்டு படிப்பிக்கிறது சரிதான் தம்பு... ஆனால் எதையும் சரியாய் விளங்கிச் செய்யவுமல்லே வேணும்.." எண்ட நான் சமாளிக்கிற மாதிரி சொல்லத் தொடங்க முருகேசர் "பிள்ளையளை வாகனங்களிலை கொண்டு திரிஞ்சு களைக்கப்பண்ணுறம் எண்டதையும் ஆபத்துக்குள்ளை கொண்டுதிரியிறம் எண்டதையும் கவனிக்கவல்லே வேணும்" எண்டு முடிச்சார்.

"அது மட்டுமே கஸ்ரப்பட்டு காசையும் நேரத்தையும் சிலவழிக்கிற நாங்கள் தனிய சோதினையிலை மாகஸ் எடுக்கிறதை மட்டுந்தான் கவனிக்கிறம் எண்டுற விசயம்தான் உதைக்குது.. சமூகஅறிவு, பொதுஅறிவு, பழக்கவழக்கம் எண்டுறதுகளை கைவிட்டுட்டமோ எண்டிறதையும் யோசிக்க வேணும்போலையல்லே நிலைமை போகுது" எண்டு ஆதங்கத்தோடை கனகர் சொல்லி எல்லாரையும் ஒருக்காப் பாத்தார்.

"உண்மைதான் கனகு... பள்ளிக்கூடங்களிலை இருக்கிற ஒழுங்குகள் கனக்க உந்த இடங்களிலை வலு குறைவு.." எண்டு நான் சொல்லிக்கொண்டிருக்க "குறைவு என்ன கதிரேசண்ணை இல்லையெண்டே சொல்லலாம்" எண்டார் சம்பர். அதுக்கு அவர் உதாரணமாச் சொன்ன சில விசயங்களை சொன்னால் கனக்கப் பிரச்சனையாப்போகும் எண்டதாலை கடுமையாகப் போகிற கதையை மாத்தலாமெண்டு யோசிக்க கனகர் கடுமையைக் குறைக்கிறமாதிரித் தொடங்கினார்.

"வகுப்புகள் தொடங்கேக்குள்ளை ஒவ்வொருதராத்தான் வந்து சேருவினம்... ஆனால் முடியிற நேரம் அவ்வளவு பிள்ளையளும் பெற்றாரும் ஒரேயடியாயல்லே அவடத்திலை சந்திக்கினம்... அதுதான் பிரச்சனையாப் போகுது" எண்டார் கனகர். "உண்மைதான் கனகு... பள்ளிக்கூடங்களிலையும் உது ஒரு பிரச்சனைதான்... அடைஞ்சு கிடக்கிற பிள்ளையள் ஒரேயடியாய் ஒரே வழியாலை றோட்டுக்கு வாறதையும் அந்தரப்பட்டு பிள்ளையளை பிடிச்சு ஏத்தி அடுத்த இடத்திலை இறக்கிறதுக்கான பெற்றாற்றை அவசரமும்தான் பிரச்சனையாகுது" எண்டார் முருகேசர்.

"சோதினையளிலை இந்தக் கேள்வி வரும் அந்தக் கேள்வி வரும் எண்டு எதிர்பாத்து திணிக்கிறவை பிள்ளையள் பெற்றார் மட்டுமில்லை போறவாற சனத்தின்ரை பாதுகாப்பைப் பற்றியும் யோசிக்கலாமில்லே?" எண்டார் தம்பர். "அதுதானப்பா யோசிக்க ஆக்களில்லாததுதானே எல்லா இடங்களிலையும் பிரச்சனையாப் போகுது" எண்டார் கனகர். "ஒவ்வொரு வகுப்பை ஒவ்வொரு நேரத்துக்கு முடிச்சு வெளியாலை விட்டால் பறவாயில்லை ஆனால் உதுகளை செய்யிறேல்லை" எண்டு புறுபுறுத்தார் முருகேசர்.

"யோசிக்கிற திறமையில்லாதவையிட்டை அனுப்பித்தான் எதிர்காலத்தை தீர்மானிக்கப்போறம்... வா முருகேசு உன்னை வீட்டடியிலை இறக்கிவிடுறன்" எண்டு ரண்டுபேருமாய் வெளிக்கிட்டிட்டம்.

---

## மீன்களுக்கு ...



பெரும்பாலும் சரியான பதிலையே தேர்ந்தெடுத்தன. நீல 3-ஐக் காட்டிய பிறகு நான்கு அல்லது ஐந்து பொருட்களைத் தேர்ந்தெடுப்பதற்கு இடையே அவர்கள் முடிவு செய்ய வேண்டியிருந்தபோதும் இது உண்மையாக இருந்தது. அதாவது, ஆரம்ப மதிப்பை விட அதிகமாக இருந்தன. இந்த வழக்கில், மீன் ஐந்திற்கு மேல் நான்கைத் தேர்ந்தெடுத்தது, 'வழங்கப்பட்ட மிகப்பெரிய (அல்லது சிறிய) தொகையைத் தேர்ந்தெடுத்தது' என்ற விதியைக் கற்றுக் கொள்ளவில்லை, ஆனால் 'எப்போதும் ஒன்றைச் சேர்க்கவும் அல்லது கழிக்கவும்' என்ற விதியைக் குறிக்கிறது; இதனைக் கற்றுக்கொண்டது.

பெருமூளைப் புறணி இல்லாமல் கம்ப்யூட்டிங் "இந்த சாதனை ஆராய்ச்சியாளர்களையே ஆச்சரியப்படுத்தியது. குறிப்பாக விவரித்ததைவிட உண்மையில் பணிகள் மிகவும் கடினமாக இருந்ததால் மீன்களுக்கு ஒரே வடிவத்தில் உள்ள பொருள்கள் காட்டப்படவில்லை (எ.கா. நான்கு சதுரங்கள்), வெவ்வேறு வடிவங்களின் கலவை காட்டப்பட்டது. உதாரணமாக, ஒரு சிறிய மற்றும் பெரிய வட்டம், ஒரு சதுரம் மற்றும் ஒரு முக்கோணத்தால் குறிப்பிடப்படலாம், அதேசமயம் மற்றொரு கணக்கீட்டில் அது வெவ்வேறு அளவுகள் மற்றும் ஒரு சதுரம் கொண்ட மூன்று முக்கோணங்களால் குறிக்கப்படும்.

எனவே விலங்குகள் சித்தரிக்கப்பட்ட பொருட்களின் எண்ணிக்கையை அடையாளம் காண வேண்டும், அதே நேரத்தில் அவற்றின் நிறத்தில் இருந்து கணக்கீட்டு விதியை ஊகிக்க வேண்டும்

இரண்டு முடிவும் படங்களுக்கு அசல் படத்தைப் பரிமாறிக் கொள்ளும்போது அவர்கள் இரண்டையும் வேலை நினைவகத்தில் வைத்திருக்க வேண்டியிருந்தது. மேலும், சரியான முடிவைப் பிறகு அவர்கள் முடிவு செய்ய வேண்டியிருந்தது. ஒட்டுமொத்தமாக, இது சிக்கலான சிந்தனைத் திறன் தேவைப்படும் ஒரு சாதனையாகும்.

சிலருக்கு இது ஆச்சரியமாக இருக்கலாம், ஏனென்றால் மீன்களுக்கு பாலூட்டிகளுக்கு இருப்பது போல நியோகார்டெக்ஸ் இல்லை. பாலூட்டிகளில் சிக்கலான அறிவாற்றல் பணிகளுக்கு காரணமானது மூளையின் பகுதி "பெரு மூளைப் புறணி" என்றும் அழைக்கப்படுகிறது. மேலும், எந்த வகையான மீன்களுக்கும் குறிப்பாக நல்ல எண்ணியல் திறன்கள் தேவைப்படுவதாக அறியப்படவில்லை. மற்ற இனங்கள் தங்கள் பாலியல் பங்காளிகளின் துண்டு எண்ணிக்கை அல்லது அவற்றின் பிடியில் உள்ள முட்டைகளின் அளவு ஆகியவற்றில் கவனம் செலுத்தலாம். இருப்பினும், இது ஸ்டிங்ரே மற்றும் சிக்லிட்களிலிருந்து அறியப்படவில்லை.

மனிதர்கள் மற்ற உயிரினங்களை குறைத்து மதிப்பிட முனைகிறோம் என்பதை உறுதிப்படுத்தும் சோதனைகளின் முடிவையும் அவர் காண்கிறார். குறிப்பாக நாம் நினைப்பது இவை மீன்கள் நமது உடனடி குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் அல்ல. மேலும், மீன்கள் குறிப்பாக அழகாக இல்லை மற்றும் இறகுகள் இல்லை. அதன்படி, அவர்கள் எங்களுக்கு ஆதரவாக மிகவும் பின்தங்கியவர்கள்" என்று வேரா ஸ்க்லூசெல் கூறுகிறார்.

# மிதிவண்டிகளின் காலம் திரும்புமா?



இலங்கையில் ஏற்பட்டுள்ள பெற்றோல் விலை உயர்வு உந்துருளிகளை (மோட்டார் சைக்கிள்) வீதிக்கு இறக்கவே பயப்படும் நிலையை ஏற்படுத்தியிருக்கிறது. இதற்கிடையில் இந்தா இன்றிரவு ஏறுகிறது பெற்றோல் விலை என்கிற வதந்திகள்வேறு அவ்வப்போது வயிற்றில் புளியைக் கரைக்கின்றன. பெற்றோல் விலை 750 ரூபாய் வரைக்கும் செல்லும் என்கிற எதிர்வுகூறல்கள் இனிவரும் காலங்களில் உந்துருளிகளின் பயன்பாடு சாத்தியமா என்கிற கேள்வியை எழுப்பியுள்ள நிலையில் தமிழர்கள் போர்க் காலத்தைப் போலவே மீண்டும் மிதிவண்டிகளுக்கு (சைக்கிள்) மாறவேண்டிய காலம் தூரத்தில் இல்லை. இந்த நிலையில் மிதிவண்டிகள் குறித்த சில தகவல்களைப் பார்க்கலாம்.

* 1817ஆம் ஆண்டு கார்ல் வோன் டிராய்ஸ் என்கிற ஜெர்மானியர் குதிரையில்லா வண்டியைக் கண்டுபிடித்தார். அது அவருக்கு வேகமாகச் செல்ல உதவியது. இரு சக்கரங்களால் ஆன இந்த வண்டியில் மிதிக்கக்கூடிய மிதிகள் (பெடல்கள்) இல்லை. கால்களால் தரையில் உந்தித் தள்ளித்தான் சக்கரங்களை நகர்ந்த முடியும். இந்த வண்டி 'டிரைசின்' என்று அழைக்கப் பட்டது. நவீன மிதிவண்டி உருவாக்கத்துக்கு இது வழிவகுத்தது.

* 1870களில் 'உயரமான சக்கரங்களைக் கொண்ட மிதிவண்டி' பிரபலமானதாக இருந்தது. 'சைக்கிள்' என்கிற சொல் 1860களில் அறிமுகமாக வில்லை. பிறகுதான் இரு சக்கரங்கள் என்று பொருள்படக் கூடிய 'சைக்கிள்' என்கிற வார்த்தை பிரெஞ்சு மொழியிலிருந்து வந்தது.

* முதல் பறக்கும் வானூர்தியை உருவாக்கிய ஆர்வில் ரைட், வில்பர் ரைட் சகோதரர்கள், தொடக்கத்தில் சிறிய இரு சக்கர வாகனங்கள் பழுதுபார்க்கும் கடையை நடத்தி வந்தனர்.

* 25 வயது ஃபிரெட் ஏ.பிர்ச்மோர், 1935ஆம் ஆண்டு மிதிவண்டி மூலம் உலகைச் சுற்றிவந்தார். ஐரோப்பா, ஆசியா, அமெரிக்கா என 40,000 மைல்களைக் கடந்தார். இதில் சுமார் 25,000 மைல்களை மிதிவண்டி மூலமே கடந்தார். மீதி தொலைவைப் படகில் கடந்தார்.

* 1800களின் பிற்பகுதியில் சீனாவுக்கு மிதிவண்டி கொண்டுவரப்பட்டது. இன்று 50 கோடி மிதிவண்டிகள் சீனாவில் பயன்படுத்தப்படுகின்றன.

* நெதர்லாந்தில் 30 சதவீதப் பயணங்கள் மிதிவண்டிகள் மூலமே நடைபெறுகின்றன. 15 வயதுக்கு மேற்பட்ட 8 டச்சு மக்களில் 7 பேர் மிதிவண்டி வைத்திருக்கிறார்கள்.

* உலகம் முழுவதும் ஒவ்வோர் ஆண்டும் சுமார் 10 கோடி மிதிவண்டிகள் தயாரிக்கப்படுகின்றன.

* கடந்த 30 ஆண்டுகளில் மிதிவண்டிகள் மூலம் பொருள்களைக் கொண்டு சேர்ப்பது முக்கியமான தொழிலாக வளர்ந்துள்ளது.

* டூர் டி பிரான்ஸ் உலகின் மிகவும் பிரபலமான மிதிவண்டிப் பந்தயங்களில் ஒன்று. 1903 இல் நிறுவப்பட்டது. இது சகிப்புத்தன்மையைப் பரிசோதிக்கும் விளையாட்டாகக் கருதப்படுகிறது.

* சைக்கிள் மோட்டோ கிராஸ் (BMX) எனும் மிதிவண்டி போட்டி, 2008 பெய்ஜிங் ஒலிம்பிக் போட்டியில் சேர்க்கப்பட்டது.

* ஆனி (ஜூன்) 3: உலக சைக்கிள் தினம்.



## 17 லட்சம்...

இலங்கையில் 57 லட்சம் பெண்கள், சிறுவர்கள் மற்றும் ஆண்களுக்கு அவசர உயிர் காப்பு உதவிகள் தேவைப்படுவதாக இலங்கையில் அபிவிருத்தி மற்றும் மனிதாபிமானப் பணிகளில் ஈடுபட்டுள்ள அமைப்புக்கள் தெரிவித்துள்ளன. இவர்களில் 17 லட்சம் பேருக்கு உணவு மற்றும் சுகாதார சேவைகள் கிடைப்பது பெரும் ஆபத்தில் இருப்பதால் அவர்களுக்கு உடனடியாக உதவிகள் வழங்கப்படவேண்டும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கையின் உணவுப் பாதுகாப்பை பல காரணிகள் பாதித்துள்ளன. நாம் உடனடியாகச் செயற்படவில்லையெனில் பல குடும்பங்கள் தமது அடிப்படைத் தேவைக்கான உணவைக்கூட பெற்றுக்கொள்ள முடியாத ஆபத்துக்குள் சிக்கிக்கொள்ளும் என்று தெரிவித்தார் இலங்கைக்கான ஐ.நா. வதிவிட ஒருங்கிணைப்பாளர் கனா சிங்கர். இலங்கைக்கு உதவுவதற்கான ஐ.நாவின் இந்தத் திட்டத்திற்கு உதவிகளை வழங்குமாறு ஆஸ்திரேலிய கிரிக்கெட் வீரர்களும் அழைப்பு விடுத்துள்ளனர்.

## நாட்டு...

வருவதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது. நாட்டில் அரசியின் விலை நாளாந்தம் அதிகரித்து வருகின்றது. தற்போது சந் தையில் நாட்டரிசியின் விலை 230 முதல் 250 ரூபா வரை விற்கப்படுகின்றது. அதுவும் ஒவ்வொரு நாளும் விலையேறி வருகின்றது.

நான்கு நாட்களின் முன்னர் 8 ஆயிரத்து 500 ரூபாய் விற்ற ஆட்டக்காரி மூடை நெல்லின் விலை தற்போது 11 ஆயிரம் ரூபாவாக உயர்ந்துள்ளது என்கிறார்கள் விவசாயிகள். தொடர்ந்தும் விலை அதிகரிக்கும் என்றும் அவர்கள் தெரிவிக்கின்றனர்.

இந்த நிலையிலேயே அரசு உள்நாட்டரிசிக்கு கட்டுப்பாட்டு விலையை அறிவித்திருக்கின்றது.

இவ்விதழ் யாழ்ப்பாணம் இல. 551ஏ கஸ்தூரியார் வீதியிலுள்ள கிறீன் மீடியா கவுஸ் பிரை. லிமிட்டட் நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 11.06.2022 அன்று வெளியிடப்பட்டது. தொடர்பு :0214927781